SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:2, Issue:8, Pages:56
March-2023, Price Rs.20/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்
மார்ச் 2023,
விலை ரூ.20/-



## திருப்பதி
## ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி
## பிரம்மோத்ஸவம்
2023 மார்ச் 20 முதல் 28 வரை

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸ்ரீபாலாஜி அறுவை சிகிச்சை, ஆராய்ச்சி மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வு மையம் [பர்ட்]

# BIRRD









- போலியோ மெல்லிடஸ், பெருமூளை வாதம், பிறவிக் கோளாறுகள், முதுகுத்தண்டு காயங்கள் மற்றும் எலும்பு சம்மந்தமான மூட்டு சிதைவு நோயாளிகளுக்கு முழுமை யான இலவசமாக சேவைகளை வழங்குவதற்காக அதி நவீன மருத்துவ உபகரணங்களுடன் பர்ட் மருத்துவமனை நிறுவப்பட்டது.
- மக்கள் சேவையே மாதவ சேவை என்பதை கருத்தில் கொண்டு நோயாளிகளுக்கு மனிதாபிமான கண்ணோட்டத் துடன் இம்மருத்துவ மனைக்கு உங்கள் பங்களிப்பினை நன்கொடையாக வழங்கிடுங்கள்.
- நன்கொடைகளுக்கு வருமான வரிச்சட்டம் 80(ஜி) ன்படி வரி விலக்கும் உண்டு.

காசோலை/
வரைவோலையை
"செயலாட்சித்
தலைவர், தி.தி.தே."
எனும் பெயரில்
எடுத்து
கீழ்க்காணும்
முகவரிக்கு
அனுப்புதல்
வேண்டும்.

உதவி செயலாட்சித் தலைர்
(நன்கொடைப் பிரிவு),
ஒருங்கிணைந்த நன்கொடையாளர்
நிர்வாக மையம்,
ஆதிசேஷு ஓய்வு இல்லம்,
கூடுதல் செயலாட்சித் தலைவர்
முகாம் அலுவலகம் அருகில்,
திருமலை,
தொ.எண் : 0877-2263472.

இயக்குனர், பர்ட் அறக்கட்டளை,
தி.தி.தே. திருப்பதி – 517 501.
தொ.எண். 0877-2264025,
2264619.

இணையதளம் : www.tirumala.org
மின்னஞ்சல் : officebirrd@gmail.com
மொபைல் செயலி : BIRRD HOSPITAL

ஸாகேத ஜநபத ஜநி தநிக ஜங்கம ததிதர ஜந்து ஜாத
திவ்ய கதிதாந தர்சித நித்ய நிஸ்ஸீம வைபவ!
பவ தபந தாபித பக்தஜந பத்ராராம
ஸ்ரீராம பத்ர! நமஸ்தே புநஸ்தே நம:!!



கோசல நாட்டில் பிறவியையே செல்வமாகக்
கொண்ட ஜங்கமப் பொருள், அதில் வேறுபட்ட
தாவரம் ஆகிய பிராணிக்கூட்டங்களுக்கு உயர்ந்த
லோகத்தை கொடுத்ததால் காட்டப்பட்ட அழியாத
எல்லையற்ற பெருமையையுடையவனே!
ஸம்ஸாரமாகிய சூரியனால் தவிக்கும்படி
செய்யப்பட்ட அடியார்களின் கூட்டத்திற்கு
மங்களமான பூஞ்சோலையாய் உள்ளவனே!
ஸ்ரீராம பத்ரனே! உனக்கு நமஸ்காரம்.
மறுபடி உனக்கு நமஸ்காரம்.

*- ஸ்ரீமஹாவீர வைபவம்*



*அஹோ ப$_3$த மஹத்பாபம்*
*கர்தும் வ்யவஸிதா வயம் ।*
*யத்$_3$ராஜ்யஸுக$_2$லோபே$_4$ந*
*ஹந்தும் ஸ்வஜநமுத்$_3$யதா: ॥*

அந்தோ பாவம்! நாம் அறிவு
பெற்றிருந்தும் பெரும் பாவம் செய்வதற்கு
முனைந்திருக்கிறோம். ஏனெனில்
ராஜ்யம், சுகம் – இவற்றிற்கு ஆசைப் பட்டு,
நம் உறவினர்களையே கொல்வதற்கு
முனைந்து விட்டோம்.

*– ஸ்ரீமத் பகவத் கீதை 1–45*

# ஶ்ரீவேதநாராயண ஸ்வாமி, நாகுலாபுரம்



ஆந்திர மாநிலம், திருப்பதி மாவட்டம் நாகுலாபுரத்தில் ஶ்ரீவேத நாராயண ஸ்வாமி ஆலயம் திருப்பதியில் இருந்து 70 கி.மீ. தூரத்திலும், சென்னையிலிருந்து 90 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது. விஜய நகர பேரரசரான ஶ்ரீகிருஷ்ண தேவராயர் தன் தாயாரான நாகுலா தேவியின் நினைவாகக் கட்டியதாகக் கூறப்படுகிறது. ஶ்ரீகிருஷ்ண தேவராயர் தம் தாயாரின் நினைவாக ஹரிகந்த புரம் எனும் இவ்வூரினை நாகுலாம்பாபுரம் என மாற்றினார்.

வேதங்கள் இல்லாது இவ்வுலகம் இயங்காது என்பதற்காக எம்பெருமான் மச்சாவதாரத்தில் மீன் வடிவில் ஆழ்கடலின் அடியில் சென்று வேதங்களை தன் வசப் படுத்தியிருந்த சோமுகாசுரனுடன் போரிட்டு நான்கு வேதங்களையும் மீட்டு, படைப்பு கடவுளான பிரம்மாவிடம் அளித்தார். அன்று முதல் ஶ்ரீவேத நாராயண ஸ்வாமியாக புகழ் பெற்றார். வேதங்களை மீட்டு மிகவும் குளிர்ச்சியாக இருந்த ஸ்வாமிக்கு சிறிதளவு வெப்பத்தை அளிக்கும் நோக்கத்துடன் சூரிய தேவன், ஸ்வாமியின் திருப்பாதத்திலிருந்து கிரீடம் வரை தன் ஒளிக்கதிர் படும்படிச் செய்தார். இந்நிகழ்ச்சியின் சிறப்பினை இன்றும் நாகுலாபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஶ்ரீவேதநாராயண ஸ்வாமி திருக்கோயிலில் காணலாம்.

இவ்வாலயம் பரந்து விரிந்த அளவில் ராஜகோபுரம் மற்றும் பெரிய பிராகாரத்துடன் அமைந்துள்ளது. திருமலை திருப்பதி தேவஸ்தான நிர்வாகத்தின் கீழ் இவ்வாலயம் இருக்கிறது. இங்கு ஒவ்வொரு வருடமும் பங்குனி மாதம் சுக்ல பக்ஷ துவாதசி, திரியோதசி மற்றும் சதுர்தசி நாட்களில் “சூரிய பூஜை” மிகவும் விமரிசையாக நடைபெறுகிறது.

சூரிய ஒளிக்கதிரானது மாலையில் சூரியன் மறையும் நேரத்திற்கு முன்னர் மேற்கு முகமாக எழுந்தருளியிருக்கும் ஶ்ரீவேத நாராயண ஸ்வாமியின் மீது படும் நிகழ்வையே சூரிய பூஜையாகக் கொண்டாடப்படுகிறது. மேற்கில் சூரியன் மறையும் போது சூரியக் கதிர்கள் கோபுர நுழைவுவாயிலின் வாயிலாக வந்து இவ்வாலயத்தின் சுமார் 600 மீட்டர் தூரத்தில் கருவறையில் கொலுவீற்றிருக்கும் ஶ்ரீவேத நாராயண ஸ்வாமியின் மீது படுவது சிறப்பான ஒன்றாகும். முதல் நாள் சூரிய ஒளிக்கதிர்கள் ஸ்வாமியின் திருப்பாதங்களிலும், இரண்டாம் நாள் ஸ்வாமியின் நாபிப்பகுதியிலும், மூன்றாம் நாள் ஸ்வாமியின் நெற்றியின் மீதும் (கீரிடம்) படும். ஒவ்வொரு ஆண்டும் இந்த மூன்று நாட்கள் மட்டுமே சூரிய ஒளிக்கதிர்கள் ஸ்வாமி மீது விழும். இவ்வாறு நிகழ்வதை சூரிய தேவன் ஸ்வாமியை தன் ஒளிக்கதிர்களின் வாயிலாக வணங்குவதை சூரிய பூஜை என்றும் கூறுவர்.

இந்நிகழ்ச்சியை தி.தி.தேவஸ்தானம் ஐந்து நாட்கள் நிகழ்ச்சியாக கொண்டாடுகிறது. அன்றைய நாட்களில் சூரிய பூஜை தரிசனம் மாலை 5.30 மணி முதல் 6.30 மணி வரை நடைபெறும். அதனை தொடர்ந்து உபய நாச்சிமார்களுடன் ஶ்ரீவேத நாராயண ஸ்வாமி “திருவீதி உத்ஸவம்” நடைபெறும். இந்நிகழ்ச்சிக்கு அடுத்து ஸ்வாமிக்கு “தெப்ப உத்ஸவம்” மிகவும் விமரிசையாக நடைபெறும். இந்த தெப்போ த்ஸவம் பக்தர்களின் கண்களுக்கு குளுமையான விருந்தாக அமையும். முதல் நாள் ஸ்வாமி “ஶ்ரீராமர்” ஆக எழுந்தருள்வார். 2ஆம் நாள் முத்துப்பந்தல் வாகனத்திலும், 3ஆம் நாள் சேஷ வாகனத்திலும் எழுந்தருளி பக்தர்களின் கண்களுக்கு விருந்தாகிறார். கலை நிகழ்ச்சிகள், கச்சேரிகள் நடைபெறும். நாமும் இந்த சூரிய பூஜையில் கலந்து கொண்டு எம் பெருமானின் அருளைப் பெறுவோம்.



வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

## சமய மாத இதழ்




மார்ச் 2023

மலர் 02 இதழ் 08



சிறப்பு ஆசிரியர் :
**திரு. A.V. தர்மா ரெட்டி,** ஐ.டி.இ.எஸ்.,
செயலாட்சித் தலைவர்(F.A.C.), தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. **ராதாரமணா,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
**திரு. பி.ராமராஜு,** எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
**திரு. P.N. சேகர்**
**திரு. B. வெங்கடரமணா**



**பிரதிகளுக்கு:**
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360


நீங்கள் ஸப்தகிரி இதழை
**www.tirumala.org**யில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
**sapthagiri.helpdesk@tirumala.org**

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும்
அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்


## உள்ளுறை

பக்கம்


பார் புகழும் ஸ்ரீராமர் -திரு.அத்தி ரங்கநாதன், திருப்பதி. 7
கனகதாரா ஸ்தோத்ரம் -டாக்டர் கி.ஜ.நிகிலா வெங்கட், கோவை. 10
திருவேங்கடவன் திருவருள் -திரு.மனோகர் ராமதாஸ், வல்லம். 14
சங்க இலக்கியங்களில் திருமால் பெருமை 15
கூர்மவதாரம் -முனைவர் பிரியா கிருஷ்ணன், சென்னை.
குலசேகரரும் திருவேங்கடவனும் 17
-திருமதி லக்ஷ்மி கிருஷ்ண ஸ்வாமி, திருப்பதி.
ஸ்ரீகோதண்டராமர் கோவில் அயோத்தியா பட்டிணம்
-திரு. அறந்தாங்கி சங்கர், சென்னை. 19
ஜோதிட சாஸ்திரம்: சுக்கிரன் 20
-முனைவர். ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி, சென்னை.
அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை: 22
அகலிகை -திரு. எஸ்.ஸ்ரீதுரை, காஞ்சிபுரம்.
பக்திப் பாதையில் பாவையர் -முனைவர் ந.மைதிலி, சென்னை. 24
திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப் பாசுரம்
திருவேங்கட கோவிந்தனும் அயோத்தி ராமனும் 31
-பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.
108 திவ்யதேச வைபவம் – திருக்கடல்மல்லை 35
- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.
அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்
திருநாமமும் உரையும் – திருக்கோட்டியூர் நம்பி
- ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. 39
ஆயுர்வேதம் – வாழை - திருமதி வி. உஷா, திருப்பதி. 42
ஐயங்கார்குளம் மலையாள மஹாலக்ஷ்மி -திரு. பாபு, காஞ்சிபுரம். 44
ராசிபலன்கள்: மார்ச் 2023 -டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம். 45
நீதிக்கதை : மண்டோதரி தேவி -முனைவர் பா.காயத்ரி, சென்னை. 46
சித்திரக்கதை : மத்ஸ்ய அவதாரம் 52


### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி, திருப்பதி.
பின்னட்டை : உபயதேவியருடன் ஸ்ரீவேதநாராயண ஸ்வாமி, நாகுலாபுரம்.



உங்களுடன்...

# மங்காத புகழ் கொண்ட மங்கையர்!

பாரத தேசம் பெண்களுக்குரிய மரியாதையை யுகங்கள் தோறும் வழங்கி வருகின்றது. மாதா, பிதா, குரு, தெய்வம் என்று வணங்கத்தக்கவர்களின் வரிசையில் பெண்ணிற்கே முதலிடம் வழங்கியுள்ள பண்பாடு நம்முடையது. உயர்ந்த மலைச்சிகரங்களுக்கும், ஜீவ நதிகளுக்கும் பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னரே பெண்பாற் பெயர்களை வைத்து வழிபட்டு வரும் பாரம்பரியம் நம்மிடம் உள்ளது.

பிரம்மா தமது நாவினையும், திருமால் தமது இதயத்தையும், பரமசிவன் தமது உடலின் ஒரு பாதியையும் தங்களுடைய தேவியருக்குக் கொடுத்துள்ளதாக நமது புராணங்கள் கூறுகின்றன. திருமாலின் அத்துனைப் பெருமைகளுக்கும், செல்வச் செழிப்பிற்கும் அவருடைய நாயகியாகிய ஸ்ரீமஹாலக்ஷ்மியே காரணம் என வைணவம் எடுத்தோதுகின்றது. அத்தாயாரின் கண்ணசைவிற்கு ஏற்றபடியே பகவான் உலகம் அனைத்தையும் நிர்வகிக்கிறான் என்று ஸ்ரீகூரத்தாழ்வார் நயம்படக் கூறுகின்றார்.

மைத்ரேயி, கார்கி போன்ற பெண்கள் வேதாந்தத் தத்துவங்களை மகரிஷிகளுடன் விவாதித்துள்ளனர். ஸ்ரீராமபிரானின் தர்மபத்னியாகிய ஸ்ரீசீதா தேவியார் அயோத்தியிலிருந்து வனவாசம் தொடங்கும் முதல், இலங்கையில் இராவண வதம் வரை தனக்கு சரி எனப்பட்டதை தைரியமாக வெளிப்படுத்தியுள்ளார்.

ஊரறியச் செய்யும் சுப நிகழ்வுகளிலும் நம் நாட்டில் பெண்களுக்கே முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. அதாவது அவரவர் வீட்டு விசேஷங்களிலும், சுப நிகழ்ச்சிகளிலும், சுவாசினி பூஜை, சுமங்கலி பூஜை போன்ற நிகழ்வுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, அந்நிகழ்வுகளில் பங்கு பெறும் சுமங்கலிப் பெண்களுக்கு மங்கல தாம்பூலம் வழங்கி அவர்களின் ஆசிகளைப் பெறுவது நடைமுறையில் உள்ளது. இவ்வாறு இல்லற வாழ்க்கையில் மட்டுமின்றி ஆன்மீகத்திலும் மகளிர் சிறந்து விளங்கினர். இம்மண்ணில் ஆண்டாள், ராதை, மீரா, காரைக்கால் அம்மையார், திலகவதியார், மங்கையர்கரசி, பண்டரிபாய், தரிகொண்ட வெங்கமாம்பா, அக்கமஹாதேவி எனப் பல பெண்மணிகள் பக்திக்கு வித்திட்டார்கள்.

பக்தி இலக்கியங்களில் மட்டுமின்றி பல பெண்பாற் புலவர்கள் சங்க காலத்திலேயே சிறப்புற்றுத் திகழ்ந்தனர். காக்கைப்பாடினியார், ஔவையார், பாரி மகளிர் போன்ற பல பெண்பாற் புலவர்கள் பல நீதி இலக்கியங்களைப் படைத்து நமக்கு அளித்துள்ளனர். நம் மானுட சமுதாயத்தின் சரிபாதியாக விளங்கும் பெண் இனத்தை மதிப்பதுடன் அவர்களுடைய தனிப்பட்ட கருத்துகளுக்கு முக்கியத்துவம் அளிப்பது நமது பாரத தேசத்தின் வழக்கமாக வந்துள்ளது. பெண்கள் மகிழ்ச்சியாக இருக்கும் குடும்பங்களே உயர்ந்த பேறுகளை அடையும் என்பது நம் பெரியோர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும். ஆண்களை விட பெண்களால் வழிநடத்தப்படும் குடும்பங்கள் நன்கு நிர்வகிக்கப்படுவதும் கண்கூடு. குறிப்பாக நமது பாரத தேசத்தில் காவல் துறை, இராணுவம், நீதித்துறை, விஞ்ஞான ஆராய்ச்சி, விளையாட்டுத்துறை, மலையேற்றம் என்று பெண்கள் பங்கேற்காத துறைகளே இல்லை எனலாம்.

உலகம் முழுவதும் மகளிர் தினம் கொண்டாட இருக்கும் இத்தருணத்தில் நம் நாட்டு மகளிர் சமுதாயம் மேன்மேலும் பளிச்சிட்டுப் பாரெங்கும் பட்டொளி வீசிப் பறக்க “அகலகில்லேன் இறையுமென்று அலர் மேல் மங்கை உறை மார்பா” என்ற நம்மாழ்வாரின் கூற்றின்படி, என்றும் எம்பெருமானின் இதயக் கமலத்தில் கொலுவீற்றிருக்கும் அலர்மேல் மங்கை தாயாரின் தயையுடன் பெருமாள் இன்னருள் புரிய வேண்டுமென்று நாம் அனைவரும் பிரார்த்திப்போம்.

... பண்டிகையும்
பருவ தினமும் ...

# பார் புகழும் ஸ்ரீராமர்


"ராமோ விக்கிரஹவான் தர்மஹ". இராமன் என்றால் தர்மம். இராமன் என்றால் தன்னடக்கம். இராமன் என்றால் கம்பீரம். இராமன் என்றால் கருணை. இராமன் என்றால் உண்மை. இராமன் என்றால் பேரானந்தம். இராமன் என்றாலே அமைதி.

அதீத சக்தியை உள்ளடக்கி, மேலே அமைதி காக்கும் ஆழ்கடலை போன்றவன் இராமன். தனது எதிரியையும் மன்னிக்கும் குணம் கொண்டவன் இராமன். அம்பை கடைசி ஆயுதமாய் எடுக்கும் தீரன் இராமன். எண்ணற்ற இராம குணங்களில் இவை சில.



இராமனுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது உலகப்புகழ் பெற்ற திருமலை திருப்பதி திருத்தலம். வேங்கடவன் குடியிருக்கும் அதே திருமலை கருவறையில் இராமன், சீதை, இலக்குவன் மற்றும் சுக்ரீவனுக்கு தாமிர சிலைகள் உள்ளன. இந்த சிலைகளை பற்றிய குறிப்புகள் கி.பி.1476க்கு முன்னதாக எந்த கல்வெட்டிலும் காணப் பெற வில்லை. சயன மண்டபத்திற்கு முன்னால் உள்ள "இராமர் மேடை" என்கிற "ராமுலவாரி மேடா" கி.பி. 1245ஆம் வருடம் அறையாக மாற்றப்பட்டது. இந்த சிலைகள் இங்கு நிறுவப் பெற்றதற்கான காரணத்தால் தான் இந்த இடத்திற்கு இராமர் மேடை என்ற பெயர் வந்ததாக அறிவோம். இராமானுஜரும் அவரது தாய் மாமனுமான திருமலை நம்பிகள் தான் ரகுநாதன் என்ற பெயரில் இந்த சிலைகளை இங்கு பிரதிஷ்டை செய்ததாக சொல்லப்படுகிறது.

மத்தியம த்ரிபங்க பங்கிமையில் (சிலையின் இடைப்பகுதி வளைந்து நெளிந்து) உள்ள இந்த இராமர் சிலை காண்போர் கண்களுக்கு அறுசுவை விருந்து படைக்கும். தலையில் கிரீடம் தரித்து, இடது கையை வில்லை பிடிக்க தூக்குவது போலும், வலது கையை அம்பை பிடிக்க இறக்குவது போலும் செதுக்கப்பட்டுள்ளது இந்த சிலை. அவருக்கு வலது புறமாக நின்றிருக்கும் சீதை தனது வலது கையை கீழ் நோக்கியும், இடது கையில் தாமரைமொட்டு வைத்திருப்பது போலும் இருப்பாள். இலக்குவன் சிலையை இராமனின் சிலை போலவே வடித்திருக்கிறார்கள். சுக்ரீவன் சிரம் தாழ்த்தி பவ்வியமாக கைகூப்பி இருப்பார். இங்கு அனுமனுக்கும், அங்கதனுக்கும் கூட சிலைகள் உள்ளன. *"கௌசல்யா சுப்ரஜா ராமா"* என்று தொடங்கும் ஸ்ரீவேங்கடேச சுப்ரபாதம், கௌசல்யா புதல்வனான இராமனையே பரம்பொருளாகக் காட்டுவது இங்கு இராமனுக்கு பெருமை சேர்க்கும் விஷயம்.



திரு.அத்தி ரங்கராஜன், திருப்பதி, 9849099246



# “பேட்டை உத்ஸவம்”

**“பேட்டை உத்ஸவம்” என்ற நிகழ்வு இராமனின் புகழை மேலும் பறைசாற்றும். திருப்பதிக்கு 10 கி.மீ. தொலைவில் சுவர்ண முகி நதிக்கரையில் உள்ள கூப்பு சந்திரப்பேட்டை என்கிற கிராமத்தில் இந்த விழா பழுங்காலத்தில் நடைபெற்றதற்கான ஆதாரங்கள் உள்ளன. அறுபது வருடங்களுக்கு முன் நின்று போன இந்த விழாவை கிராம மக்களின் வேண்டுகோளின் பேரில் 2008 ஆம் ஆண்டு முதல் தி.தி. தேவஸ்தானத்தினர் மீண்டும் தொடங்கி வைத்தனர். இந்த நாள் ஸ்ரீகோதண்டராமர் ஊர்வலமாக இந்த சிறு கிராமத்திற்கு வந்து மக்களை அருள்பாலிப்பதாக மக்களின் அபார நம்பிக்கை. இங்கு திருமஞ்சனம், ஊஞ்சல் சேவை நடைபெற்ற பிறகு ஸ்ரீராமர் ஊரில் உள்ள அத்தனை தெருக்களிலும் திருவீதி வலமாக எழுந்தருள்வது வழக்கம்.**

திருமலையில் நடக்கும் வசந்தோத்ஸவ விழாவில், இராமன், கிருஷ்ணன் மற்றும் மலையப்ப னின் சிலைகள் திருவீதி வலமாக பவனி வந்தாலும், இங்கும் இராமனுக்கே முதலிடம். யுக தர்மத்தை கடை பிடித்து, மூத்த அவதாரமான இராமனுக்கே இங்கு முதல் ஆரத்தி கொடுக்கப்படும். ஸ்ரீநிவாச மங்காபுரத் திலும் இந்த வசந்தோத்ஸவம் சில வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டது. இங்கும் இராமனுக்கு தகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

திருப்பதியில் ஸ்ரீகோதண்டராமர் ஆலயத்தில் உள்ள சிலை ஜாம்பவானால் நிறுவப்பட்டதாக ஐதீகம். பிறகு ஜனமேஜய மன்னன் இந்த கோயிலை நிர்மாணித்தார் என்று கூறுவர். ஸ்ரீகோவிந்தராஜர் கோயில், திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் கோயில், ஸ்ரீநிவாச மங்காபுரத்தில் உள்ள ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வரர் கோயிலைப் போலவே இந்த பழமை வாய்ந்த ஸ்ரீகோதண்ட ராமர் கோயிலிலும் பக்தர்கள் கூட்டம் அலைமோதும். இந்த கோயிலுக்கு மற்றுமொரு சிறப்பு உண்டு. திருமலையில் இருந்து கீழ் கோயில்களுக்கு உற்சவ சமயங்களில் கொண்டு வரப்படும் “பிரசாத படி” இந்த கோதண்டராமர் கோயிலில் தான் முதலில் இறக்கப்படுவது வழக்கம். திருமலையப்பன் தனது மனையாள் ஸ்ரீபத்மாவதி தேவியின் பிறந்த நாளான பஞ்சமி தீர்த்தத்தன்று மலையிலிருந்து அனுப்பும் மஞ்சள், குங்குமம், பட்டாடை போன்றவையும் இந்த கோயிலில் தான் வந்து இறங்கும். இங்கிருந்து தான் அந்த பிறந்த நாள் பரிசுகளை யானை மேல் சுமந்து திருச்சானூர் கோயில் வரை எடுத்துச் செல்வர்.

தெப்போத்ஸவம் போன்ற திருநாட்களிலும் இராமனுக்கு தான் முதலிடம். இந்த விழாவிலும் இராமர் சிலையை தான் முதலில் தெப்பத்தின் மேலேற்றி வலம் வரச் செய்வர். இந்த தெய்வீக நிகழ்வை திருமலையிலும், ஸ்ரீகோவிந்தராஜன் சந்நிதியிலும், நாராயண வனத்தில் உள்ள ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வரர் ஆலயத்திலும் நாம் காணலாம். ஆலயம் யார் பெயரில் நிறுவினாலும் அங்கு இராமருக்கே முக்கியத்துவம் என்பதற்கு இதுவே சான்று. ஸ்ரீகோவிந்தராஜர் கோயில் தெப்போத்ஸவத்திலும், ஸ்ரீகோதண்டராமர் கோயிலில் இருந்து ஸ்ரீராம லக்ஷ்மண சீதா தேவியே ஊர்வலமாக வந்து முதல் நாள் தெப்போத்ஸவத்தில் வலம் வருவர். கடவுள்களின் அணிவகுப்பில் இராமனுடைய உகந்த இடம் முதலிடம் என்பது இதிலிருந்து ஊர்ஜிதப்படுத்தப்படுகிறது.

ஸ்ரீகோதண்டராமர் கோயிலில் வருடாந்திர பிரம்மோத்ஸவத்திற்கு பிறகு இராம நவமி விழா நடைபெறும். இது திருப்பதி மட்டும் அல்லாது சுற்றி இருக்கும் கிராமப்புறங்களில் இருந்தும் மக்கள் குவிந்து ஆரவாரமாகக் கொண்டாடுவர். இங்கு 3 நாட்

களில், ஸ்ரீராம நவமி, சீதாராம கல்யாணம் மற்றும் ஸ்ரீராம பட்டாபிஷேகம் சிறப்பாக நடைபெறும். இந்த தெய்வத் திருக்கல்யாணத்திற்கு "தலம்பராலு" என்ற முத்துக்கள், அக்ஷதைகள் ஊர்வலமாக கொண்டு வரப்படும்.

## இராமனும் இராமானுஜரும்

சமத்துவத்தின் சின்னமாகத் திகழும் இராமானுஜர் தனது அறிவாற்றலை பெற்றதும் இராமனின் அருளாலே, அதுவும் இந்த ஆன்மீக நகரம் திருப்பதியிலேயே. அவர் தனது தாய்மாமன் திருமலை நம்பிகளிடம் இராமாயண காலக்ஷேபம் கற்க முனைந்த போதுதான் இராமனின் ஆசி பெற்றார். அவர் திருப்பதியில் ஸ்ரீகோவிந்தராஜர் கோயிலின் அருகே தங்கி இருக்க, திருமலை நம்பிகளோ திருமலையின் மேலேயே நிவாசம் இருந்தார். திருமலை ஆலயத்தில் தீர்த்த கைங்கர்யம் செய்து கொண்டிருந்தபடியால் அவரால் கீழ் திருப்பதிக்கு வந்து செல்ல இயலவில்லை.

அதனால் மருமகன் இராமாநுஜன் மலையடிவாரத்தில் உள்ள புளியமரத்தின் அருகே காத்திருக்க, மாமன் திருமலை நம்பிகள் தினமும் மலையிறங்கி வந்து இராமாயணத்தில் உள்ள பதினெட்டு ரகசிய அர்த்தங்களை கற்றுக்கொடுத்து விட்டு சென்றார். இப்படி ஒரு நாள், இரண்டு நாட்கள் இல்லை. ஒரு வருடம், இருவரும் மலையடிவாரத்தில் சந்தித்து காலக்ஷேபம் செய்தனர். அடிவாரத்தில் உள்ள புளியமரத்தின் நிழலில் கற்றுக் கொண்டதற்காகவே இந்த இடம் "அடி புளி" என்று அழைக்கப்பட்டது. இதுவே பிற்காலத்தில் அலிபிரி என்று மாறிவிட்டது. தன்னைப்பற்றி நடக்கும் காலக்ஷேபத்தினை கேட்க இராமனே இவ்விடத்திற்கு வந்து மறைந்து நின்று கேட்டதாக ஐதீகம்.

இராமனின் குணாதிசயங்களை அறிந்து, அவற்றை போற்றிப்பாடி, அந்த அதீத அனுபவத்தில் மூழ்கித் திளைத்த இராமாநுஜர் பிற்காலத்தில் விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை நிறுவினார். இராமனின் கோட்பாடுகளையும், அவன் விதித்த நெறியையும், தர்மத்தையும் பின்பற்றி சமத்துவ மூர்த்தியாகத் திகழ்ந்தார்.

இராமனின் திருவடித் தாமரைகள் பதிந்த இந்நகரத்தில் இராமனின் திவ்ய அருள் பெற்ற திருப்பதி பொன்னகரத்தில் இன்று இராம நாமம் எங்கும் எதிர் ஒலிக்கிறது.









# கனகதாரா ஸ்தோத்ரம்

– டாக்டர் கி.ஜ.நிகிலா வெங்கட்,
கோவை, 8940991234.

சர்வ லோகத்திற்கும் ஜகன்மாதா ஸ்ரீமஹா லக்ஷ்மி தாயார். தாயார் அருளோடு ஸ்ரீமந் நாராயணனை பிரார்த்திக்கும் போது காரியங்கள் வெகு விரைவில் அனுகூலமாகிறது. தாயார் தயையோடு நமக்கு அனுக்கிரகம் புரிகிறாள். அத்தகு சிறப்பு வாய்ந்த சக்தியுடையவளும் செல்வத்தின் இருப்பிடமான ஸ்ரீமஹாலக்ஷ்மி தாயாரை, நம் பாரதத்தின் பழம் பெரும் மஹோன்னதரான ஆதி சங்கரர் துதி பாடியுள்ளார். அந்த ஸ்தோத்திரங்கள் “ஸ்ரீ கனகதாரா ஸ்தோத்திரம்” என்று கொண்டாடப் படுகிறது.

பகவான் வியாச மகரிஷிக்கு அடுத்தபடியாக பல பல மகரிஷிகள், சாஸ்த்ர விற்பன்னர்கள் வாழ்ந்து இருந்தாலும் கலியுகத்தின் கண்கண்ட மஹா தீர்க்க தரிசி “ஸ்ரீ ஆதிசங்கரர்” ஆவார். பக்தியை நிலை நாட்டி பாரதத்தின் பெருமையை நமக்கெல்லாம் எடுத்துக் காட்டியவர். ஆதிசங்கரர் மிகச் சிறு வயதிலேயே சன்யாசம் ஏற்றுக்கொண்டவர். அவர் சன்யாச பிக்ஷைக்காக செல்லும்போது ஒரு வீட்டில் வயதான பெண்மணி இருந்தாள். அந்தப் பெண்மணியிடம் “தாயே! பிக்ஷை வேண்டி வந்துள்ளேன்” என்றார்.

அதற்கு அந்தப் பெண்மணி மிகவும் மௌனமாக தன் வீட்டினுள் ஒன்றுமில்லாததை அறிந்தும் தேடினால், அவளிடத்தில் கொடுப்பதற்கு என்று எதுவும் இல்லை. இருந்தும் நம் பாரத தேசத்தின் அற்புதமான பண்பாடு யாருக்கும் இல்லை என்று சொல்லக்கூடாது என்பதுதான். நம் தேசத்தின் பெண்ணாயிற்றே. இல்லை என்று சொல்லாது தம்மிடத்தில் இருந்த காய்ந்து சுருங்கி இருந்த நெல்லிக்கனியை ஸ்ரீ ஆதி சங்கரருக்கு அமுதாகப் படைத்தாள். அக்கனியைப் பெற்றுக் கொண்டு, அந்த தாயின் தயைக் கண்டு பெருமிதம் கொண்டு, அந்தப் பெண்மணியின் வறுமையைப் போக்குவதற்காக சகல லோகத்திற் கும் தாயாரான அன்னை ஸ்ரீமஹாலக்ஷ்மியை ஸ்தோத்திரத்தினால் துதிபாடினார்.

ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதர் ஸ்ரீமஹாலக்ஷ்மி தாயாரிடம் இந்தப் பெண்மணியின் வறுமையைப் போக்க வேண்டும். வறுமையில் உள்ளவர்கள் அனைவரின் துயர் நீங்க அனுகிரகிக்க வேண்டும் என்று கேட்டார். தாயார் ஸ்ரீமஹாலக்ஷ்மி தங்கத்தினால் ஆன நெல்லிக்கனியை மழை போல பொழிந்தாள். *“அங்கம் ஹரே”* எனத் தொடங்கினார். “திருமாலின் ஸ்ரீவத்ஸத்தில் நிலைபெற்றிருக்கும் தாயே, திருமாலை எப்போதும் குளிரக்குளிர தரிசித்துக் கொண்டிருக்கும் தாயே தங்களின் கடைக்கண் பார்வை எங்கள் மீதும் படட்டும். மக்களின் துயர் நீங்க செல்வத்தைக் கொடுத்து அருள்வாய்” என்று பிரார்த்தித்தார்.

*பாஹ் வந்தரே மதுஜித: ச்ரித கௌஸ்துபே யா*
*ஹாராவலீவ ஹரிநீலமயீ விபாதி*
*காமப்ரதா பகவதோ (அ) பிகடாக்ஷ மாலா*
*கல்யாண மாவஹதுமே கமலாலயாயா:*

இந்த ஸ்தோத்திரத்தில் மிகவும் அழகாக கூறுகிறார். மஹா விஷ்ணுவின் திருமார்பில் திகழ்கின்ற மாலை உமது பார்வை பட்டு இந்திர நீல நிறமாக காட்சி அளிக்கும். அத்தகைய ஒளி நிறைந்த உமது கடைக்கண் பார்வை என் மேல் பட்டு எனக்கும் எல்லாவித மங்களங் களையும் உண்டாக்கட்டும் என்கிறார். தாயாரின் கடைக்கண் பார்வை ஒன்று போதும், நாம் கடைத்தேற்ற நம் கஷ்டங்கள் அனைத்தும் கரைந்தோடிப் போகும்.

அன்னை “ஸ்ரீ” மஹாலக்ஷ்மியைத் துதிபாடும் முன் ஸ்ரீமந் நாராயணனையும் துதிபாடியே வணங்குகிறார். “தந்தையின் அனுமதியோடு தாய் செய்யும் உபகாரம் தான் குழந்தைகளுக்கு நிலையானதும், பெருமையானதும் கூட. அதை வலியுறுத்தும் விதமாக அரக்கன் கைடவனை வதைத்து நீருண்ட மேகம் போல திகழும் திருமாலின் திருமார்பில் கொடி மின்னலை போல் இருப்பவளே! என்று பாடுகிறாள்.


ஸ்ரீமஹாலக்ஷ்மி தாயாரின் கண்கள் மழை மேகங்களுக்கு நடுவில் உள்ள மின்னலைப் போல பிரகாசிக்கிறது. தாயே அந்த பிரகாச ஒளியில் எங்களையும் கடாக்ஷித்து செல்வத்தை கொடுக்கு மாறு பிரார்த்திக்கின்றேன்” என்று பாடுகிறார். ஸ்ரீமஹா லக்ஷ்மி தாயார் மங்கள ரூபிணி, அவள் கடைக்கண்களால் மங்களங்கள் நமக்கு கிடைக்கப் பெற வேண்டும் என்று பிரார்த்திக்கின்றாள்.

ஸ்ரீமஹாலக்ஷ்மி தாயாரின் பார்வை விளையாட்டாய் பட்டாலும் கூட அவர் விண்ணுலக வாழ்வைப் பெற்று இந்திரப் பதவி வாழ்வர். அப்படிப்பட்ட நீலோத்பவ மலர் மகுடம் போன்ற திருமுகத்தின் விழிகள் கடைக்கண் பார்வை ஒரு க்ஷணம் என் மீது பட்டாலும் உன் கருணைக்கு ஆளாவேன் தாயே! என்று பரிவு பொங்க கேட்கிறார். அஸ்வமேத யாகம் போன்ற பல யாகங்களை செய்தால் கிடைக்கக்கூடிய பலன்களை நம் தாயார் ஸ்ரீமஹாலக்ஷ்மி தேவியின் கடைக்கண் பார்வை கொடுத்து விடும். அத்தகு சக்தி வாய்ந்தவள் ஸ்ரீமஹா லக்ஷ்மி தாயார்.

எப்படி கார் மேகங்கள் காற்றின் காரணமாக மழை பொழிகிறதோ அதுபோல ஸ்ரீ மஹா விஷ்ணுவின் பிரியத்திற்கு லக்ஷ்மி தேவியின் கடைக்கண் பார்வை பட்டவுடன் வறுமை எல்லாம் நீங்கி என் வாழ்வில் வளங்கள் பெருகும் என்பதால் தாயாரை தீர்க்கமாக பற்றிக் கொண் டார். நாமும் வறுமை நீங்கி ஐச்வர்யம் பெறலாம் என்று ஆதிசங்கரர் கூறியிருக்கிறார்.

ஸ்ரீமஹாலக்ஷ்மிதாயார் எப்படிப் பட்டவள் தெரியுமா? தாயாரின் திருமுகம் நம் அனைவருக்கும் பாக்கியம் தரக்கூடியதாகும்.

குளிர்ச்சியும், மங்களங்களும் தரக்கூடிய ஸ்ரீமஹாலக்ஷ்மி சந்திர னின் சகோதரியாவாள் , அவள் யோக நித்திரையில் இருக்கும்




**இரகுராமர் என்கிற சுந்தர ராமர்:**

**இராமன் ரகுகுல திலகன், இக்ஷ்வாகு குலத்தில் திரேதா யுகத்தில் அவதரித்தவன். நான்கு திசைகளிலும் மதில்களால் சூழப் பெற்ற அயோத்தி மாநகரத்திற்குரிய சூரிய வம்சத்தின் (ரகுவம்சம்) விளக்கு போலே இராமன் சித்திரை மாதம் புனர்பூச நட்சத்திரத்தில் அவதாரம் செய்தமையினால் இரகுராமன் என்னும் திருநாமம் பெற்றார்.**

**வால்மீகி , இராமாயணத்தில் ஒரு காண்டத்திற்கு “சுந்தர காண்டம்” என்று பெயர் சூட்டியவுடன் அதைக் கேட்ட ஹனுமன், “ஆஹா! நம் ஸ்வாமி ஸ்ரீராமச் சந்திர மூர்த்தி அழகின் வடிவல்லவா, அதனால் தான் முனிவர் “சுந்தர காண்டம்” என்று பெயரை யோசித்திருக்கிறார். இது உகந்த பெயர் என்றெண்ணி மகிழ்ச்சி அடைந்தார்.**

**கோசலராமனே சீதாராமன்:**

கௌசலையின் மகனாய்ப் பிறந்ததினால் கோசல ராமன் என்றழைக்கப்படுகிறார். குலசேகர ஆழ்வார் *''மன்னுபுகழ்க் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே! நிலைநின்ற புகழினை உடைய கௌசலையின் அழகிய திருவயிற்றினில் உதித்தவனே''* என்றும், *''கொங்குமலி கருங்குழலாள் கௌசலைதன் குலமதலாய்''* என்றும் கொண்டாடுகிறார்.திருமலை வேங்கடவனை அதிகாலை துயில் எழுப்புவதான சுப்ரபாதத்தின் முதல் வரியிலேயே *''கௌசல்யா சுப்ரஜா ராமபூர்வா சந்த்யா ப்ரவர்த்ததே''* என வேங்கடவனும் கோசல ராமனாகவே துயிலெழுகிறார்.



அரசர்களும் சக்ரவர்த்திகளும் கூடியுள்ள சபையினில் மிதிலையின் அரண்மனையில் ஜனக மகாராஜனின் முன்னிலையில், அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள் என்பதான சீதா தேவியின் காதல் வசத்தினால் எவரும் முறியடிக்க முடியாததான சிவதனுசினை முறித்து, சீதாதேவியை மணம் புரிந்ததால் சீதா ராமனாகவும், ஜானகி ராமனாகவும், கல்யாண ராமனாகவும் இராமன் அழைக்கப்படுகிறார்.

திருமாலின் பிரியத்திற்கு நாயகியானவள். இத்தகு சிறப்பு வாய்ந்த தாயார் ஸ்ரீமஹாலக்ஷ்மியின் பாதங்களில் சரணம் எனப் பற்றினேன்.

தாயே தயை புரிவாயே! ஸ்ரீமஹாலக்ஷ்மி தாயாரை ஆதிசங்கரர் அதியற்புதமான சொற்களால் கொண்டாடுகிறார். தாயார் ஹேமாம் புஜ பீடிகாயை – தங்கத் தாமரையை ஆசனமாகக் கொண்டு அமர்ந்தவளே! நீ எங்களுக்கு மட்டும் தாயல்ல. மூவுலகங்களுக்கும் தாயானவள். முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் கருணை பொழிபவள். பெருமைமிக்க சாரங்கபாணி யின் மனைவியான அன்னை மஹாலக்ஷ்மியே சரணமடைகிறேன்.

பிருகு மகரிஷியின் திருமகளும், மஹா விஷ்ணுவின் மார்பில் உறைபவளுமான தாயே, ஜோதி வடிவாகத் திகழ்பவளே, சகல ஐச்வர்யங்களுக்கும், அனைத்து செல்வங்களுக்கும் இருப்பிடமாக இருப்பவளே, அனைத்து உயிர்களையும் படைத்து அன்னையாக விளங்குபவளே, உன்னை நமஸ்கரிக்கின்றேன். மீண்டும், தாயே ஜகன்மாதா, ஸர்வ லோக ரக்ஷகியே அனைவருக்கும் சகல சௌபாக்கியங்களையும் அருள வேண்டி உன்னை பிரார்த்திக்கிறேன் என்று பாடுகிறார்.


*''ஸம்பத் காரணி ஸகலேந்த்ரிய நந்தநானி*
*ஸாம்ராஜ்யதான விபவாநி ஸரோருஹாக்ஷ*
*த்வத் வந்தநாதி துரிதா ஹரணோத்யதானி*
*மாமேவ மாதரநிசம் கலயந்து மான்யே''*

*''யத் கடாக்ஷ ஸமுபாஸனாவிதி*
*ஸேவகஸ்ய ஸகலார்த்த ஸம்பத:*
*ஸந்தனோதி வசனாங்க மானஸை:*
*த்வாம் முராரிஹ்ருத யேஸ்வரீம்பஜே''.*

தாயே! ஜகன்மாதா ஜகன்நாதன் மார்பில் உறையும் தேவியே, உன் கடைக்கண் அருள வேண்டி பூஜிப்பவர்களுக்கு தங்கு தடையில்லாமல் செல்வ வளம் தருபவளே! மடைதிறந்த வெள்ளம் போலே அருளை வாரி வாரி வழங்குபவளே, உன்னை நமஸ்கரிக்கின்றேன். தாயே! உன்னைக் காண்பதே அழகு! உன் திருமேனிக்கு தங்கக் குடத்தால் யானைகள் அபிஷேகம் செய்கிறது.

மறைகளின் வடிவமாகவும், மூவுலகம் தொழும் தேவியாகவும் திகழும் ஸ்ரீமஹாலக்ஷ்மி தாயே உன்னை மேற்கூறிய கனகதாரா ஸ்தோத்திரத்தினால் துதிப்போருக்கு நிறை செல்வம், கீர்த்தி, ஆரோக்கியம், நிறை ஆயுள், புத்தி மற்றும் வாழ்வில் எல்லா ஐச்வர்யங்களையும் அளித்து பூரண நலமும் அளிப்பாய் தாயே!

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 80




## இடமிருந்து வலம்

1. ஆவுடையாரின் மீது பெருமான் அபயம் அளிக்கும் கரத்துடன் உள்ள தலம்.......(8)
6. தம்புரா தவம் நடைபெறும் கிருஷ்ணர் தலம்....(8)
7. ஸ்ரீகிருஷ்ணர் அர்ச்சுனனுக்கு காட்டிய திருக்கோலம்...(6)
8. இராமாவதாரம் எந்தக் கிரகத்திற்கு அதிபதி....(4)
9. பெருமானின் ஐந்து நிலைகளில் ஒன்று....(6)
11. இராமர் வழிபட்டதால் ரங்க நாதருக்கு....(7)என்று பெயர்
13. பிருகண்ணளை என்னும் பெயரில் பெண் வேடமிட்டவர்....(6)
17. திருமால் முழுமையாக பள்ளி கொண்டிருக்காமல் சற்றே எழுந்த கோலத்தில் இருப்பதை.... (8) என்பர்.

## வலமிருந்து இடம்

2. புராணங்களில் வராக க்ஷேத்திரம் எனப்படுவது...(4)
3. ஸ்ரீநிவாசப் பெருமானின் அவதார நட்சத்திரம்....(5)
4. மகாலக்ஷ்மி தாயார் அவதரித்தது பங்குனி மாதம் ....(5) நட்சத்திரம்.
5. ஆண்டாள் கைகளில் கிளியாக தவழ்பவர்...(11)
10. தக்ஷிண திருப்பதி என்னும் தலம்....(7)
15. விஷ்ணு படுத்திருக்கும் பாம்பு படுக்கையின் பெயர்....(5)
16. நந்தன் .....(10) விரதத்தை கடைபிடித்து தனது மனைவியை அடைந்தார்.
18. இராமாநுஜர் சிறந்த .....(4)யாக விளங்கியவர்.
19. நவத்திருப்பதிகளில் ஒரு தலம்....(6)

## மேலிருந்து கீழ்

1. 40 அடி உயர ஒரே கல்லில் ஆன கருடன் உள்ள தலம்.....(4)
5. இராமர் அழகின் வடிவமாய்த் திகழ்ந்ததால் ....(4) இராமர்
14. தசரதரின் மனைவிகளுள் ஒருவர்.....(4)

## கீழிருந்து மேல்

12. ஏழு மலைகளுள் ஒன்று....(4)
15. ஆண்டாள் தோன்றிய நட்சத்திரம்....(6)
19. அக்ஷயத்திருதியை அன்று அக்ஷயப் பாத்திரம் பெற்றவர்....(5)

தொகுப்பு :
திரு. எஸ்.ராஜகுமார்,
சென்னை

புதிருக்கு விடை அறிய
36ம் பக்கம்
பார்க்கவும்...

### பிழைதிருத்தம்

கடந்த பிப்ரவரி 2023 ஸப்தகிரி மாத இதழ் பக்கம் எண்.41-ல் ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்ட ராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம் 2022 மார்ச் 31 முதல் ஏப்ரல் 8 வரை என இடம் பெற்றுள்ள வாசகத்திற்கு பதிலாக 2023 மார்ச்31 முதல் ஏப்ரல் 8 வரை என திருத்தி வாசிக்கவும்.

# திருவேங்கடவன் திருவருள்

எம்பெருமான் பக்தர்களுக்கு வேண்டியதை அருள்பவன் என்பதில் எள்ளவும் ஐயமில்லை. கண்கண்ட தெய்வமாகவும் கருணாமூர்த்தியாகவும் திகழ்கின்ற ஏழுமலையானின் லீலை களை எண்ணி, வியப்பும் சிலிர்ப்பும் ஏற்படுகின்றன.

பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு, எங்கள் குடும்பத்திற்குச் சொந்தமான பூர்வீக வீட்டை விற்பதற்காக, ஒரு நபரிடம் ரூ.3,30,000– ரூபாய்க்கு விலைபேசி குறைந்த ஒரு முன்பணம் (ரூ.5,000/–) வாங்கினோம்.

ஆனால், மிகச் சிறியத் தொகையை முன்பணமாகக் கொடுத்த நபர், ஐந்து ஆண்டு காலமாகியும் வீட்டின் விலையைக் கொடுத்து முடிக்க முன் வரவில்லை. வீட்டின் முழு கிரயத் தொகையை அவரால் ஏற்பாடு செய்துத் தர இயலாமல் ஏதேதோ காரணங் களைக் கூறி காலங்கடத்தி வந்தார். அந்த நபரிடம் முன் பணம் பெற்றதால் வேறு யாரிடமும் நாங்கள் வீட்டை விலைபேசி விற்கவும் வழியின்றி தவித்தோம்.

அதுமட்டுமல்லாமல், அந்தப் பூர்வீக வீட்டை விற்பதற்குத் தடையாக நான் ஏதோ சூழ்ச்சி செய்வதாக, என் மீது வீண்பழியும் எங்கள் குடும்பத்தி னர் சிலரால் சுமத்தப்பட்டது. அந்த சமயத்தில்... திருமலையிலும், நம் உள்ளத்திலும் இருந்து அருள் வழி காட்டிடும் தெய்வமான ஏழுமலையா னின் திருவடிகளே சரணம் என்று சரணாகதி அடைந்தேன்! என் கஷ்டங் களைக் களைத்திடு கருணா மூர்த்தியே என்று கூட நான் கோரிக்கை வைக்கவில்லை!

*கோவிந்தா சரணம்! கோபாலா சரணம்! என்று*
*சரணம் மட்டுமே அடைந்தேன்.*

கோவிந்தனாகிய ஸ்ரீகிருஷ்ண பகவான் பகவத் கீதையில்...

*ஸர்வத$_4$ர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ*
*அஹம் த்வா ஸர்வபாபேப்$_4$யோ*
*மோக்ஷயிஷ்யாமி மா சுச:* (பகவத் கீதை 18–66)

“எல்லா தர்மங்களையும் விட்டு, என் ஒருவனையே சரணமாக அடைவாயாக! நான் உன்னை சகல பாபங்களிலிருந்தும் விடுவிக்கிறேன். வருத்தப்படாதே!” என்று கூறிய படியே... எனதுத் துயரினை உடனே துடைத்தான் தூயவனான பரந்தாமன்! “ஆதிமூலா!” என்றழைத்ததும் கஜேந்திர யானையை விரைந்து வந்து காத்ததைப் போல வேறு ஒரு நபர் மூலம் முன்பு பேசிய விலையைவிடக் கூடுதலாக இரண்டு லக்ஷ ரூபாய் அதிக விலை யில் வீட்டை விற்க ஏற்பாடு செய்து விட்டான் ஸ்ரீமந்நாராயணனாகிய கோவிந்தன்!




– திரு. மனோகர் ராமதாஸ்,
வல்லம்.

## சங்க இலக்கியங்களில் திருமால் பெருமை 2

# கூர்மவதாரம்



### திருமாலின் அவதாரங்கள் :

மனித நிலைக்கும் இறை நிலைக்கும் இடைப்பட்ட நிலையைக் குறிக்க அவதாரம் என்ற நிலை உருவாகின்றது. எப்போதெல்லாம் உலகத்தில் அதர்மம் தலை தூக்கு கிறதோ அப்போதெல்லாம் பகவான் அவதரிக்கிறார் என்பர். திருமாலின் அவதாரங்கள் மூன்று வகையாகப் பிரித்துச் சொல்லப்படுகின்றன. அவை அவதாரம், ஆவேசம், அம்சம் என்பவையாகும். முழுமையான சக்தியினைக் கொண்டது அவதாரம் என்றும், பகுதி அளவில் தற்காலிகமாகச் சிறிது காலம் சக்தியைப் பயன்படுத்தித் தான் எடுத்துக் கொண்ட பணி முடிந்தவுடன் சக்தியினின்றும் விலகி நிற்பது ஆவேசம் என்றும், திருமாலின் சக்தியின் ஒரு பகுதி ஓர் உருக்கொண்டு வெளிப்படுவது அம்சம் என்றும் பெயர் பெறும். வைணவ பக்தி இலக்கியமான நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் திருமாலின் அவதாரங்களை அவற்றின் தன்மைக் கேற்றவாறு எடுத்தியம்புகின்றன.


மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனன், பரசுராமன், இராமன், பலராமன், கண்ணன், கல்கி எனப் பத்து அவதாரங்களைப் பற்றி நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் எடுத்துரைக்கின்றது. மச்ச அவதாரமும் கூர்ம அவதாரமும் நீருடன் தொடர்புடையன. வராகம் நீரில் மூழ்கியிருந்த உலகைத் திருமால் மீட்டதைக் குறிக்கும். நரசிம்ம அவதாரம் மனித விலங்கு வடிவுடன் அமைவது. வாமனன் முதல் கண்ணன் நிற்க அமைந்த அவதாரங்கள் மனித வடிவுடன் விளங்குபவை. அவதாரங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு சிறப்பு உண்டு. “கிணற்றிலே விழுந்த குழந்தையை எடுக்கத் தாய் கிணற்றிலே குதிப்பது போல் திருமால் உயிர்களைக் காக்க உலகிலே அவதரிக்கிறான்” என்று ஆர்த்தி பிரபந்தம் விளக்கம் கொடுக்கின்றது (ஆர்த்தி.9).

சங்க பாடல்களில் பல இடங்களில் திருமாலின் அவதாரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்களில் கூர்மவதாரம், வராகவதாரம், நரசிம்ம அவதாரம், வாமன அவதாரம், பரசுராமவதாரம், இராம அவதாரம், பலராமர் அவதாரம், கண்ணன் அவதாரம் ஆகிய அவதாரங்கள் பற்றி அறிய முடிகின்றது. அவற்றை எல்லாம் உற்று நோக்கும் போது சங்க காலத்திற்கு முன்பிருந்தே வைணவம் தழைத்தோங்கி விளங்கியுள்ளதை அறிய முடிகின்றது.

– முனைவர் பிரியாகிருஷ்ணன்,
சென்னை, 7299587879

**தசரதராமன்:**

வெண்மையான மாட மாளிகைகள் மிகுதியாய் இருக்கின்ற நீண்ட வீதிகளையுடைய, அயோத்தி மாநகரின் சக்கரவர்த்தியான தசரதனின் குமாரனாய், குவளை மலரின் வண்ணத்தினை உடையவனாய் தசரதராமன் திகழ்ந்ததை திருமங்கை ஆழ்வாரும், "ஆயிரமாயிரம் அரக்கர்களை வீழ்த்துவதற்காகவே தசரதன் மரகத நிறமுடைய தடாகம் போன்ற இராமனைப் பெற்றெடுத்தான்" என நம்மாழ்வாரும் தசரத ராமரை முன்னிட்டு பாசுரமிடுகின்றனர்.



**திருமாலின் கூர்மவதாரம் :**

திருமாலின் அவதாரங்களில் இரண்டாவது அவதாரம் கூர்ம அவதாரமாகும். தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்த போது மேரு மலையைத் தாங்க பாற்கடலில் திருமால் எடுத்த ஆமை அவதாரம் கூர்மவதாரம். துர்வாசர் சாபத்தால் அல்லல்பட்ட தேவர்கள் அசுரர்களிடம் தோற்றார்கள். தம் சாபம் தீர வேண்டி தேவர்கள் திருமாலைச் சரணடைந்தார்கள். அப்போது திருமால், "பாற்கடலைக் கடைந்து அமிர்தத்தை எடுத்து அதை உண்டால் இழந்த பலத்தை மீண்டும் பெறலாம்" என்று தேவர்களிடம் கூறினார்.

அதனால், தேவர்கள் அசுரர்களிடம் நட்புடன் பேசி அவர்களின் உதவியுடன் மேரு மலையை மத்தாகவும், வாசுகி என்ற பாம்பைக் கயிறாகவும் கொண்டு பாற்கடலைக் கடைந்தனர். மேரு மலை பாற்கடலில் சிக்கிக் கொண்டதால் அது அசையக்கூடவில்லை. மீண்டும் திருமாலிடம் முறையிட்டார்கள் தேவர்கள். அப்போது திருமால் தானே ஆமையாகக் கூர்ம அவதாரம் எடுத்து கடலுக்குள் சென்று மேரு மலையைத்தன் முதுகில் தாங்கிக்கொண்டார். தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடையத் தொடங்கினார்கள். பாற்கடலைக் கடைய மேரு மலை மத்தாக வேண்டி இருந்தது.

மேருமலையைத் தன் முதுகில் பெருமாள் தாங்க வேண்டியதாயிற்று. பாற்கடல் கடையக் கடைய முதலில் அதிலிருந்து காமதேனு என்ற பசு தோன்றியது. அதைத் தொடர்ந்து பொன் மயமான ஒளியுடன் உச்சைசிரவஸ் எனும் ஏழு தலைக்குதிரை, நான்கு தந்தத்துடன் கூடிய ஐராவதம் எனும் யானை, பஞ்ச தருக்கல் எனப்படும் அரிசந்தனம், கற்பகம், சந்தனம், பாரிஜாதம், மந்தாரம் ஆகிய தேவமரங்கள் தோன்றின. இதற்குப் பிறகு மூத்த தேவி அப்சரஸ் கன்னிகைகள், வருணி, சுரா தேவி ஆகியோர் தோன்றினார்கள். அதற்குப் பிறகு ஸ்ரீதேவி எனப்படும் மகாலட்சுமி, சந்திரன், சிந்தாமணி தோன்றக் கடைசியாகத் தன்வந்திரி அமிர்தத்துடன் தோன்றினார். இத்தகைய சிறப்பு வாய்ந்த அவதாரமான கூர்மவதாரத்தை,

*திகழ்ஒளி முந்நீர் கடைந்தக்கால் வெற்புத்*
*திகழ்பெழ வாங்கித்தம் சீர்சிரத்தேற்றி*
*மகர மறிகடல் வைத்து நிறுத்து*

–பரிபாடல் திரட்டு. 1.64–66

என்று பரிபாடல் திரட்டு குறிப்பிடுகின்றது. பாற்கடலில் அமிர்தத்தைக் கடைந்தபோது திருமால், மோகினி உருக் கொண்டு தேவர்களைக் காத்து அமுது வழங்க, மோகினி வடிவத்தைக் கண்டு அசுரர்கள் மயங்கி இருந்தனர். இதனைப் பரிபாடல் பின்வருமாறு பதிவு செய்கின்றது.

*நகையச் சாக நல்லமிர்து கலந்த*
*நடுவுநிலை திறம்பிய நயமில் ஒருகை*

–பரி.3.33–34

காஞ்சிபுரத்திலுள்ள கச்சபேஸ்வரர் கோயில், ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயில், தூத்துக்குடி அகரம் தசாவதாரக்கோயில் ஆகியவற்றில் கூர்மவதார பெருமாளை வணங்கலாம். இந்தியாவில் கூர்ம அவதாரத்துக்கென்று இருக்கும் ஒரே ஒரு ஆலயம் அருள்மிகு கூர்ம நாதர் ஆலயமாகும். ஆந்திர மாநிலம், விசாகப்பட்டினத்தில் ஸ்ரீகாகுளம் அருகே இக்கோயில் இருக்கின்றது.

பெருமை அறிவோம்...

கலியுகத்தின் ஆரம்பத்திலேயே தருமங்கள் தலை சாய்ந்து, பாபங்கள் பெருகி வருவதற்கான அறிகுறிகள் தோன்றுவது கண்டு, பிருகு முதலான மகரிஷிகள் ஸ்ரீமந்நாராயணனை வேண்டி வேள்வி நடத்தினார்கள்.அந்த வேள்வியின் ஹவிர்பாகத்தை ஏற்று அனுக்ரஹித்த எம்பெருமான் இந்த பூலோகத்தில் அர்ச்சாரூபியாய் திருமலை எனப்படும் சேஷாசலத்தில் எழுந்தருளித் தன்னை வேண்டியவர்களுக்கு அபயம் தரும் திருவேங்கட நாதனாக பக்தர்களுக்கு வேண்டிய வரம் தரும் கலியுக வரதனாக எழுந்தருளியுள்ளான். அவரது பெருமைகளைத் தாங்களும் உணர்ந்து கொண்டு, தங்கள் பாசுரங்களின் மூலமாக நம்மையும் வழிநடத்துபவர்களே காசினியில் நாம் வாழ கலியுகத்தே வந்துதித்த சான்றோர்கள் ஆழ்வார்கள். தெய்வாம்சம் பெற்று ஞானிகளாகத் திகழ்ந்த ஆழ்வார்களுள் ஒருவரே கொல்லி மலைக் காவலரான குலசேகராழ்வார். ஆழ்வார்கள் திருமலையையும் திருவேங்கடத்து எம்பெருமானையும் சிறப்பித்து பாசுரங்கள் அருளியிருந்தாலும் அவர்களுள் குலசேகர ஆழ்வாருக்கு ஒரு தனி ஸ்தானம் உள்ளது. அவர்கள் அனைவரும்




எம்பெருமானின் தரிசனம் பெற்று, முக்தி எனும் வைகுண்ட பிராப்தியினை பகவானிடம் வேண்டினார்கள். ஆனால் குலசேகரரோ எனக்கு விண்புகும் ஸ்வர்க்கம் வேண்டாம். திருவேங்கடமலையில் ஏதோவொரு வடிவில் இருந்து கொண்டு என்றென்றும் அந்த எம்பெருமானைத் தரிசிக்கும் பாக்யம் மட்டும் போதும் என ஏங்கியவர்.

இன்னொரு விசேஷம். இவர் நாடாளும் அரச பரம்பரையில் வந்தவர். “சேரநாடு வேழமுடைத்து” என்கிற பழமொழிக்கு ஏற்ப போற்றப்பெறும் சேர நாட்டை ஆண்டு வந்த மன்னர் திடவ்ரதர் என்பவரின் செல்லப்புதல்வர். “கொல்லிக்காவலன்'', கூடல் நாயகன், கோழிக்கோன் ஆகிய பட்டப் பெயர்களோடு தன்னை எதிர்த்தவர்களையெல்லாம் வென்று சக்ரவர்த்தி ஆகும் பேறு பெற்றவர். அவரது புறப்பற்றினை நீக்கி, உலக மாயையை அகற்றி, அவரைத் தன்பால் ஈர்ப்பு கொள்ளச் செய்து எம்பெருமான் ஸ்ரீமஹா விஷ்ணுவே அவரைத் தனது அடியவர் ஆக்கி கொண்டு ஆழ்வார் ஆக்கினார் என்றால் விசேஷந்தானே. தனது அரச சபையில் நாள்தோறும் ஒரு வைணவப் பெரியவரிடம் ஸ்ரீமத்ராமாயண காலட்சேபத்தைக் கேட்டு கேட்டு ஸ்ரீராமபிரானிடமே ஐக்கியமாகி விட்டவர். இவரது ராமபக்தியை ஸ்ரீராம தூதனான ஆஞ்சநேயரின் தாஸ பக்திக்கு ஈடாகச் சொல்வார்கள் பெரியோர்கள்.

*''மன்னு புகழ்க் கௌசலைதன் மணி வயிறு வாய்த்தவனே*
*தென்னிலங்கைக் கோன் முடிகள் சிந்து வித்தாய்செம்பொன்சேர்*
*கன்னி நன்மா மதில்புடை சூழ் கணபுரத்தென் கருமணியே*
*என்னுடைய இன்னமுதே! இராகவனே! தாலேலோ''*

என்று பாசுரமிடுகிறார். அரச குலத்திலே பிறந்து, வைபோகமாக வாழ்ந்து, சக்கரவர்த்தியான குலசேகரர் அந்த செல்வங்களுடனும், வைபவங்களுடனும் கூடிய இந்த மானிடப்பிறவி எனக்கு வேண்டாம். நான் வேண்டுவதெல்லாம் ஒன்றுதான். ஆயர்மகளான நப்பின்னையின் கரம் பிடிக்க, அவளது தந்தையான கும்பனின் கட்டளைக்கிணங்கி ஏழு யானைகளையும் ஒரு சேர வென்ற கண்ண

**இக்கட்டுரை வாயிலாக இளைஞர்களுக்கான நல்லுரை**

**அரசனாக இருந்தாலும் பகவத் கைங்கர்யம் ஒன்றையே பிரதானமாகக் கொண்டு கைங்கர்யபரராய் விளங்கிய குலசேகராழ்வாரைத் தியானித்து, நாமும் எந்நிலையில் இருந்தாலும் ஸ்வாமியைத் துதித்து திருமலையில் திருவேங்கட நாதனின் சன்னதி வாசலில் படியாய்க் கிடக்கும் பாக்யம் பெற்ற அந்த மஹா புருஷனின் பாசுரங்களின் மூலமாக நாமும் திருமலையானைத் துதி செய்வோம்.**



பெருமானே இந்த கலியுகத்து திருவேங்கடத்து எம்பிரான். அவர் நின்ற கோலத்தில் சேவை தரும் இந்த திருவேங்கடமலையிலுள்ள குளத்தில் ஒரு புழுவாகப் பிறக்கும் பாக்யமாவது எனக்கு கிடைத்தால் போதும் என்று வேண்டுகிறார்.

மற்றுமொரு பாசுரத்தில் “எழில் வேங்கடமலை மேல் தம்பகமாய் நிற்கும் தவமுடையேனாவேனே” என்கிறார். அதாவது பட்டத்து யானையின் மேல் பவனி வந்து இந்நாட்டை ஆள்கின்ற சக்கரவர்த்தி என்கிற பதவி எனக்கு வேண்டாம். திருவேங்கடநாதன் அனுதினமும் தரிசனம் தருகின்ற இத்திருவேங்கட மலை மீது தம்பகமாய் நின்று அவரைத் தரிசித்துக் கொண்டிருக்கும் பாக்யம் மட்டும் எனக்கு கிடைத்தால் போதும் என்று ஆழ்வார் ஏங்குகிறார். மேலும்,

***“செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே***
***நெடியானே! வேங்கடவா! நின் கோயிலின் வாசல்***
***அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்***
***படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே”***

நம்முடைய பூர்வ ஜென்ம பாபங்களை மட்டுமின்றி, இந்த பூவுலகில் செய்கின்ற தீமைகளையும் சேர்ந்து தீர்க்கின்ற எம்பெருமான் ஓங்கி உலகளந்த உத்தமனாய் அவதாரமெடுத்து, மூவுலகங்களையும் அளந்தவன், அவனே இந்த திருவேங்கடவன். இந்த எம்பெருமானின் திருக்கோயிலின் வாயிலில், பெருமானின் அடியவர்களும் தேவாதி தேவர்களும் உட்புகும் படியாய்க் கிடந்து என்றென்றும் அவரைத் தரிசித்துக் கொண்டிருக்கும் பாக்யம் கிடைத்தால் போதுமே, அடியார்களின் பாததூளி என் மீது விழுந்தால் தான் தன்யனாவேன் என்று கதறுகிறார் ஆழ்வார்.

பூலோக வைகுந்தமான திருமலையில் ஏதோ ஒரு வடிவில் இருந்து கொண்டு செம்பவளத் திருவாயனான எம்பெருமானை எப்போதும் தரிசித்துக் கொண்டிருக்கும் பாக்யம் மட்டும் எனக்குத் தர வேண்டும்” என்று கலியுகத் தெய்வமான திருவேங்கட நாதனை வேண்டுகிறார் குலசேகராழ்வார். பிறப்பால் சக்கரவர்த்தியாகப் பிறந்து, திருமாலே பரதெய்வம் என்பதை உணர்ந்து, “எம்பெருமானைப் பாடாத நாவென்ன நாவே” என்று வடமொழியிலும், தமிழ் மொழியிலும் பாசுரங்களை இயற்றி, முடிவாக அந்த திருமாலின் அடியவர்களின் பாத தூளி தன் மீது பட்டால் அதுவே தான் பிறவி எடுத்ததின் பயன் என்று எம்பெருமானின் சன்னதியின் வாயிலில் படியாய்க் கிடக்கும் பாக்யத்தை வேண்டிப் பெற்றாரே. ஆகவே ஆழ்வார்களுள் அவர் விசேஷமாகப் போற்றப்பட வேண்டியவர் தானே.

**– திருமதி டி.கே.லக்ஷ்மி கிருஷ்ண ஸ்வாமி,**
**திருப்பதி, 9440120758.**



**ஸ்ரீராம பக்தி**

***“எம்பெருமான் தன் சரிதை***
***செவியால் கண்ணால்***
***பருகுவோம் இன்னமுதம்***
***மதியோமன்றே”***

– பெருமாள் திருமொழி 10.8

**செவிகளால் கேட்டும், கண்களால் கண்டும் அநுபவிப்போம். இனிய தேவாம்ருதம் கிடைத்தாலும் அதை ஒரு பொருளாக மதிக்காது ஸ்ரீராம சரித்திரம் அனுபவிப்போம் என்கிறார். இராமாயணத்தைப் பத்தே பாசுரங்களில் விவரித்துப் பாடும் “திருச்சித்திரக் கூடப்பதிகம்” இராமாயணத்தை முழுமையாகக் கற்ற இன்பம் பயக்கும். ஸ்ரீராமனின் துயரைத் தாங்க மாட்டாத தசரதனின் மன நிலை அழகாக நம் கண் முன் சித்தரிக்கப்பட்டுள்ளது. தம் பாசுரங்களில் ஸ்ரீராமனுக்குத் தாலாட்டுப் பாடியிருப்பது இனிமையாக இருப்பதோடு, நாமும் நம் வீட்டில் தாலாட்டுப் பாட உதவுகிறது. குழந்தைகள் ஸ்ரீராமனின் அருள் பெற்று வாழ வழி அமைத்துக் கொடுப்பது போல் தோன்றுகிறது.**



ஸ்ரீ ராமர் காலடி பட்ட



அயோத்தியா பட்டிணம்



# ஸ்ரீகோதண்டராமர் கோவில்

- திரு.அறந்தாங்கி சங்கர், சென்னை. 944416016

ஸ்ரீ ராமபிரான் அவதாரம் மனிதர்களுக்கு ஒழுக்கத்தையும், தர்மத்தையும், நியாயத்தையும் போதிப்பதற்காக எடுக்கப்பட்ட அவதாரம் என்று இராமாயணத்தைப் படிக்கும் பொழுதே நாம் புரிந்து கொள்ளலாம். ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயரிய தர்மத்தை இந்த மனித குலத்துக்கு போதிப்பதற்காகவே ஸ்ரீராம அவதாரம் எடுக்கப்பட்டது என்று நாம் தெரிந்து கொள்கிறோம்.

அப்படிப்பட்ட இராமனுக்காக அயோத்தியிலே மட்டுமின்றி கோயில் நகரமன தமிழக பூமியிலே பல்வேறு இராமர் ஆலயங்கள் பல்வேறு திருத்தலங்களிலே அமைந்திருக்கின்றன.

அவற்றில் ஒன்றாக அமைந்துள்ள சிறப்பான ஒரு ஆலயம் அயோத்தியா பட்டிணம் கோதண்ட ராம ஸ்வாமி கோயிலாகும். தமிழ்நாட்டில் சேலம் மாவட்டம் மையப் பகுதியில் அயோத்தியா பட்டிணம் என்னும் ஊரில் அமைந்துள்ள இராமர் கோயிலாகும். இராவணன் வதம் முடிந்து இராமன், சீதை, லட்சுமணன், அனுமன், சுக்ரீவன், விபீஷணன் மற்றும் படை வீரர்களுடன் அயோத்தி திரும்பிய போது இங்கு தங்கி இரவு ஓய்வெடுத்தனர். அதற்குள் பட்டாபிஷேகம் செய்ய வேண்டிய நாள், நட்சத்திரம் நெருங்கி விட்டதை உணர்ந்து அயோத்தி செல்வதற்கான காலம் தாமதமானதால் இங்கேயே பட்டாபிஷேகம் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

விஜய நகரப் பேரரசின் நாயக்க மன்னர்களால் கட்டப்பட்ட இக்கோயிலில் கோதண்டராம ஸ்வாமி, சீதைக்கு சன்னதிகளும், கருடாழ்வார், ஆஞ்சநேயர், ஆழ்வார்கள் உபசன்னதிகளும் உள்ளன. இங்குக் கோயில் குளம், கோயில் தேர் போன்றவை உள்ளன.

இக்கோயிலில் ஐந்து நிலை கொண்ட ராஜகோபுரம் உள்ளது. இக்கோயில் தொகுப்புக் கோயில் என்ற வகைப்பாட்டில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. பரம்பரை அல்லாத அறங்காவலர் அமைப்பால் நிர்வகிக்கப்படுகிறது. இக்கோயிலில் பாஞ்சராத்திர முறைப்படி இரண்டு காலப் பூசைகள் நடக்கின்றன. புரட்டாசி மாதம் முக்கிய திருவிழா நடைபெறுகிறது. பங்குனி மாதம் திருவிழா நடைபெறுகிறது.

வடக்கில் உள்ள அயோத்தி சென்று இராமரை வணங்குவதால் கிடைக்கும் புண்ணியம் இந்த ஆலயத்தில் வீற்றிருக்கும் இராமரை வணங்கினால் கிடைக்கும் என்று நம்பப்படுகிறது. இக்கோயில் 1000 வருடங்கள் பழமையானதாகும். விபீஷணனுக்காக பட்டாபிஷேக கோலத்தில் காட்சி தந்ததாக கூறுகிறார்கள். இராமர் காலடி பட்டதால் இவ்விடம் அயோத்தியா பட்டிணம் என்று பெயர் பெற்றது.

கலை நயம் மிக்க இந்த கோயிலில் உள்ள தூண்களைத் தட்டினால் வியக்கத்தக்க இசை ஒலி எழுகிறது. ஒரே கல்லில் மேலே சிங்கம் கீழே யானை என்று செதுக்கப்பட்ட சிற்பம் கண்ணை கவர்கிறது மற்றும் பிரமிக்க வைக்கிறது. ஸ்ரீராமபிரானின் அருமை பெருமைகளை சொல்லும் அற்புதமான ஆலயமாக உயர்ந்து நிற்கும் அயோத்தியா பட்டணம் ஸ்ரீகோதண்ட ராமர் கோயிலுக்கு சென்று வாருங்கள். ஸ்ரீராமரின் ஆசியைப் பெறலாம். ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெய ராம்.



ஜோதிட சாஸ்திரம்

# சுக்கிரன்

- முனைவர் ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி,
சென்னை.

நவகிரகங்களில் குருவை அடுத்து இரண்டாவது சுபகாரகராகத் திகழ்பவர் சுக்கிரன். தனகாரகனான குரு பணத்தைத் தருகிறாரென்றால் அந்தப் பணத்தை சந்தோஷமான வழிகளில் செலவு செய்ய வைப்பவர் சுக்கிரன். ஒருவர் பணத்தைப் பற்றிக் கவலைப்படாமல் செலவு செய்கிறார் என்றால், அவர் சுக்கிரனின் ஆதிக்கத்தில் பிறந்தவரென்பதை அவரின் ஜாதகத்தைப் பார்க்காமலே அறிந்து கொள்ளலாம்.

சுக்கிரன் ஆதிக்கத்தில் பிறந்தவர்களைச் சுற்றி எப்போதும் பெண்கள் கூட்டம் இருக்கும். அதற்குக் காரணம் அவர்கள் பெண்களைப் பாதுகாப்பவர்களாகவும், மற்றவர்களை விடப் பெண்களின் மீது கூடுதலான அக்கறையுள்ளவர்களாகவும் இருப்பர். ஆடம்பரப் பிரியர்களாகவும், செலவு செய்பவர்களாகவும் இருப்பார்கள். அழகிய உடைகள், வாசனைத் திரவியங்கள் ஆகியவற்றில் ஈடுபாடு மிக்கவர்களாக இருப்பார்கள். இதற்காகக் கடன் வாங்கிச் செலவு செய்வார்கள் என்றில்லை. தங்களின் சொந்த சம்பாத்தியத்திலேயே இவர்கள் செலவு செய்வார்கள். சுக்கிரன் கலைகளுக்கு அதிபதி என்பதால் எழுத்து, இசை, பாடல், நடனம், நாடகம், பாட்டு, சினிமா ஆகியவற்றில் புகழ் பெற ஜாதகத்தில் சுக்கிரன் நல்ல நிலையில் இருக்க வேண்டுமென்பது அவசியம்.

சுக்கிரன் ஜாதகத்தில் எந்த நிலையில் இருந்தாலும் ரிஷபம், துலாம், மிதுனம், கன்னி, மகரம் மற்றும் கும்பம் ஆகிய ஆறு ராசிக்காரர்களுக்கும் துன்பம் விளைவிப்பதில்லை. ரிஷபத்திலும், துலாத்திலும் ஆட்சி பெறும் சுக்கிரன் தனது எதிரியான குருவின் வீடான மீனத்தில் உச்சமடைகிறார். தனது நண்பனான புதனின் வீடான கன்னியில் நீசமடைகிறார். ஜாதகத்தில் சுக்கிரன் வலுவிழந்தால், அவரின் திருமண வாழ்க்கையில் தடைகள் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம்.

**பரிகாரம் :**

சுக்கிரன் வலுக்குறைந்து இருப்பவர்கள், கும்பகோணம் அருகே இருக்கும் சுக்கிரனுக்கு உரிய தலமான கஞ்சனூர் சென்று வழிபட்டால் சிறப்பான பலன்களைப் பெறலாம். சென்னையிலிருப்பவர்கள் மாங்காட்டிலிருக்கும் வெள்ளீஸ்வரர் கோயிலுக்கோ, மயிலாப்பூரிலிருக்கும் வெள்ளீஸ்வரர் கோயிலுக்கோ சென்று வழிபட்டால் சிறப்பான பலன்களைப் பெறலாம்.

திதிகளுக்குரிய தெய்வங்களை வழிபட்டால் விதியை வெல்லலாம்.

எந்த திதியில் எந்த தெய்வங்களை வழிபட வேண்டும். நாம் திதிகளுக்குரிய தெய்வங்களை வழிபடுவதால் என்ன பலன்கள் கிடைக்கும் என்பதைப் பார்ப்போம்.

ஒவ்வொரு திதிகளும் ஒரு குறிப்பிட்ட தெய்வங்களுக்கு உரியதாக பார்க்கப்படுகிறது. மொத்தம் 15 திதிகளுக்கு சுக்லபக்ஷம் திதிகள்

என்றும், தேய் பிறையில் வரக்கூடிய திதிகள் கிருஷ்ணபக்ஷ திதிகள் என்றும் குறிப்பிடப்படுகிறது. ஒவ்வொரு நாளுக்கான திதிகளுக்குரிய தெய்வங்களை வணங்குவது விசேஷமானது.

## சிறந்த பலனை அளிக்கும் பிறந்த திதிக்குரிய தெய்வ வழிபாடு

### சுக்ல பக்ஷ (வளர்பிறை திதிகளுக்குரிய தெய்வங்கள்)

பிரதமை – பிரம்ம தேவன் மற்றும் குபேரன்
துவதியை – பிரம்ம தேவன்
திரிதியை – சிவபெருமான் & கௌரி அம்மன்
சதுர்த்தி – விநாயகர் & எமதர்மன்
பஞ்சமி – திரிபுர சுந்தரி
சஷ்டி – செவ்வாய் பகவான்
சப்தமி – இந்திரன் & ரிஷிகள்
அஷ்டமி – காலபைரவர்
நவமி – சரஸ்வதி
தசமி – வீரபத்திரன் & தர்ம ராஜா
ஏகாதசி – மஹாவிஷ்ணு & ருத்ரன்
துவாதசி – பெருமாள்
திரியோதசி – மன்மதன்
சதுர்த்தசி – காளி தேவி
பௌர்ணமி– லலிதாம்பிகை

### கிருஷ்ணபக்ஷம் (தேய்பிறை திதிகளுக்குரிய தெய்வங்கள்)

பிரதமை – துர்க்கை அம்மன்
துவதியை – வாயு பகவான்
திரிதியை – அக்னி பகவான்
சதுர்த்தி – விநாயகர் & எமதர்மன்
பஞ்சமி – நாக தேவதை
சஷ்டி – முருகப் பெருமான்
சப்தமி – சூரிய தேவன்
அஷ்டமி – மகாருத்ரன் & துர்க்கை அம்மன்
நவமி – சரஸ்வதி தேவி
தசமி – துர்க்கை அம்மன் & எமதர்மன்
ஏகாதசி – மஹாவிஷ்ணு & சிவபெருமான்
துவாதசி – சுக்கிரன்
திரியோதசி – நந்தி பகவான்
சதுர்த்தசி – காளி தேவி
அமாவாசை – காளிதேவி & பித்ருக்கள்



ஒவ்வொருவரும் அவர் பிறந்த திதிகளுக்குரிய தெய்வங்களை வழிபடுவதன் மூலம் உங்கள் வாழ்க்கையில் எடுக்கும் அனைத்து முயற்சிகளிலும் சிறப்பான வெற்றி கிடைக்கும். அதோடு, அவரின் பிறப்பு தோஷம் நீங்கும் என்பது நம்பிக்கை.

நாம் குலதெய்வத்தை வணங்குவது எவ்வளவு முக்கியமானதோ அதே போல் நாம் பிறந்த திதிகளுக்குரிய தெய்வங்களை வணங்குவதால் மிகச் சிறந்த பலன்கள் பெற முடியும்.

தொடரும்....



அலசுவோம்... அறிவோம்... ஆதிகாவிய நாயகர்களை

# அடியிணையால் வாழ்வு பெற்ற அகலிகை

– திரு. எஸ்.ஸ்ரீதுரை, காஞ்சிபுரம், 9486139685

பல்லாண்டு காலமாகச் சாம்பல் படிந்து யார் கண்ணிலும் படாமல் இருந்த ஒரு கல் ஸ்ரீராமபிரானின் திருவடி பட்டவுடன் ஓர் அழகிய பெண்ணாக உருமாறியதால், அப்பெருமானின் கால்வண்ணத்தை, அதிசயங்களை நிகழ்த்தும் அவன் திருவடிகளின் சீர்மையைக் கண்டாள் அழகின் ஒட்டு மொத்த உருவமாக நான்முகக் கடவுளாகிய பிரம்மதேவனால் படைக்கப்பட்டவளான அகலிகை.

இவ்வுலகை முதலில் சுற்றி வருபவருக்கு அகலிகையைத் திருமணம் செய்து வைப்பதாக பிரம்ம தேவன் கூறிய மறு கணம் கௌதம முனிவர் ஒரு பசுவைப் பிரதக்ஷிணமாகச் சுற்றி வந்ததால் அவர் பூமியைச் சுற்றி வந்ததாகக் கருதப்பட்டு அவருக்கே அகலிகை தாரை வார்த்துத் தரப்பட்டாள்.

அழகில் சிறந்தவளாக இருப்பினும் புலனடக்கத்தில் சிறந்த கௌதமருக்கு இல்லத்தரசியாகிச் சிறப்பாகவே இல்வாழ்க்கையை நடத்தி வந்த அகலிகையின் சரித்திரத்தில் ஒரு திடீர் சறுக்கல் நேரும் தருணம் வந்தது.

சுவர்க்கலோகத்தின் அதிபதியாகிய தேவேந்திரன் அகலிகையின் பேரழகைப் பற்றிக் கேள்விப்பட்டு அவளை அடைய வேண்டுமென்ற தீராத மோகம் கொண்டிருந்தான். அப்பேரழகியின் கணவராகிய கௌதம முனிவர் ஆசிரமத்தை விட்டு வெளியே செல்லும் சமயத்தை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தவனுக்கு அப்படி ஒரு சமயமும் வாய்த்தது.

தவறு செய்ய நினைப்பவர்கள் தங்களின் சொந்த அடையாளத்தை மறைத்துக் கொள்வது சகஜம்தானே? தேவேந்திரனும் தன்னுடைய அடையாளங்களை மறைத்துக் கொண்டு கௌதம முனிவரைப் போலவே வேடம் தரித்துக் கொண்டு அகலிகையை அணுகினான்.

அகலிகை ஓர் அழகி மட்டுமல்ல. புத்திசாலியும் கூட. புலனடக்கம் மிகுந்த தன் கணவர் இப்படி நினைத்த நேரத்தில் எல்லாம் சிற்றின்பத்தை நாடக் கூடியவரல்ல என்பதால், தற்பொழுது வந்திருப்பது கௌதமரல்ல என்று சட்டென்று அவளுக்குப் புரிந்து விட்டது.

“யாரையா நீர்?” என்றாள். அதற்கும் மேல் தேவேந்திரனால் தனது வேஷத்தை மறைக்க முடியவில்லை.

அப்பொழுதே தன்னைத் தவறான கண்ணோட்டத்தில் அணுகிய தேவேந்திரனுக்கு அறிவுரை கூறித் திருப்பி அனுப்பியிருந்தால் அகலிகை பிழைத்திருப்பாள்.

விதி யாரை விட்டது? தன் அழகில் அந்த தேவேந்திரனே மயங்கி வந்திருக்கிறான் என்ற கர்வம் கலந்த பெருமிதத்தில் மதிமயங்கிய அகலிகையும் அவனை அனுமதித்து விட்டாள்.

விஷயம் அறிந்த கௌதமர் தேவேந்திரனை அலியாக உருமாறும்படிச் சாபம் விடுத்தார். அடுத்தபடியாக அகலிகையைக் கல்லாக மாறும்படிச் சபித்ததுடன், அவளுடைய வேண்டுகோளுக்கு இரங்கி, “எதிர்காலத்தில் இவ்வழியே வரவிருக்கும் ஸ்ரீராமபிரானின் திருவடிபட்டுப்

பழைய நிலையை அடைவாய்!" என்று சாப விமோசனத்தையும் அறிவித்து விட்டு நீண்ட தவம் புரிவதற்காகச் சென்று விட்டார்.

முனிவர் சொன்னது போலவே ஸ்ரீராம அவதாரமும் நிகழ்ந்தது. ஸ்ரீராமபிரானின் திருவடிப் பெருமையால் அகலிகையின் பொன்னுருவம் உயிர் பெற்றதுடன், அவளுடைய களங்கமும் நீங்கியது. கௌதமரும் மீண்டும் அகலிகையை ஏற்றுக் கொண்டார்.

கவிச்சக்கரவர்த்தி கம்பநாட்டாழ்வார் பாடியபடி ஸ்ரீராமபிரானின் கால்வண்ணத்துக்குச் சாட்சியாக விளங்கிய அகலிகையின் சரித்திரம் இக்காலப் பெண்மணிகளுக்கு ஓர் எச்சரிக்கையை விடுக்கும் அதே நேரத்தில், அவர்களுக்கு மனோ தைரியத்தை அளிக்கும் ஒரு செய்தியையும் தெரிவிக்கின்றது.

பல யுகங்களுக்கு முற்பட்ட புராண காலமாயினும் சரி, தற்பொழுது நடைபெறும் கலியுகமாயினும் சரி, பெண்களைத் தங்கள் வசப்படுத்த நினைப்பவர்கள் அதற்கு முயன்ற படிதான் இருப்பார்கள். சிற்றின்ப நாட்டம் என்று வந்து விட்டால் பிறகு தேவர்கள், மனிதர்கள் என்ற வித்தியாசம் எல்லாம் கிடையாது. தாங்கள் அடைய விரும்பும் பெண்களை எப்படியும் அடைய வேண்டும் என்பதற்காக ஆண்கள் பல விதங்களிலும் முயற்சி செய்வர். பெண்கள்தான் அத்தகைய நேரங்களில் ஏற்படக் கூடிய மனச் சலனங்களுக்கு இடம் கொடுக்காமல் திடமாக இருந்து தங்களுடைய கற்பு நெறியைப் பேண வேண்டும்.

அப்படியில்லாமல், மனச்சலனங்களுக்கு அடி பணிந்து விட்டால் அதன் பின்விளைவுகள் பெண்களுக்கு நீண்ட கால பாதிப்புகளை ஏற்படுத்தி விடும் என்பது அகலிகையின் சரித்திரம் கூறும் எச்சரிக்கை ஆகும்.

அதே சமயம், ஏதோ ஒரு வேகத்தில் வாழ்க்கையில் சறுக்க நேர்ந்தாலும், தவற்றினை உணர்ந்து பொறுமையுடன் ஸ்ரீராமபிரானின் நாமத்தை ஜபித்துக் கொண்டு அவருடைய திருவடிகளையே தஞ்சமெனப் பற்றிக் கொண்டு இருந்தால் காலப்போக்கில் களங்கங்கள் அகன்று மீண்டும் புனிதத் தன்மையை அடைந்து உய்வு பெறலாம் என்பதே அகலிகையின் சாபவிமோசனம் நமக்கு அளிக்கும் நம்பிக்கைச் செய்தியாகும்.

நவநாகரிக யுகத்தில் வாழும் நம்முடைய வாழ்வினை நெறிப்படுத்தும் புராண இதிகாசங்களை நமக்கெல்லாம் அள்ளி வழங்கியுள்ள அற்புதமான இந்த பாரத தேசத்தில் நம்மையெல்லாம் பிறக்க வைத்துப் பேரருள் புரியும் திருவேங்கடமுடையான் திருவடிகளை வணங்கி உய்வு பெறுவோமாக!

தொடர்ந்து அலசுவோம்...

## STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT

## SAPTHAGIRI

**(MONTHLY)**

**FORM IV**

*See Rule 8*

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | TIRUPATI |
| 2. Periodicity of its Publication | : | Monthly |
| 3. Printer's Name | : | Sri P. Ramaraju, M.A. |
| Whether citizen of India | : | Yes |
| Address | : | S.O.,T.T.D.Press Compound, K.T.Road, Tirupati. |
| 4. Publisher's Name | : | Dr. K. Radha Ramana, M.A.,M.Phil., Ph.D. |
| Whether citizen of India | : | Yes |
| Address | : | Chief Editor Office, T.T.D.Press Compound ,K.T.Road, Tirupati. |
| 5. Editor's Name | : | Dr. V.G.Chokkalingam, M.A., Ph.D. |
| Whether citizen of India | : | Yes |
| Address | : | Chief Editor Office, T.T.D.Press Compound ,K.T.Road, Tirupati. |
| 6. Name and address of individuals who own the News paper and partners or share holders holding more than one percent of the Total Capital | } | Tirumala Tirupati Devasthanams |

*I, K. Radha Ramana, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.*

TIRUPATI
Date : 28-2-2023

**(Sd.) Dr. K. Radha Ramana**
*Signature of the Publisher*



# பக்திப் பாதையில் பாவையர்



- முனைவர்.ந.மைதிலி, சென்னை,
9884347886



சக்தி இல்லாமல் சிவன் இல்லை என்பது வழக்கு. இத்தொடர் பல பொருள்களைக் கொண்டு விளங்குகிறது. உடல் இயக்கத்தில் உயிர் என்கிற சக்தி இல்லாமல் போனால் சிவன் இல்லை. முப்பெரும் கடவுளர்க்கும் ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய சக்தியை வழங்குபவளும் சக்தி ஆகிய பெண். இதனால் தான் பாரதியார்

*"யாதுமாகி நின்றாய் காளி எங்கும் நீ நிறைந்தாய்"*

என்று சக்தியே எல்லாம் என்றார்.

*" ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே"*

என்பதன் உண்மைப் பொருள் நல்ல செயல்களை ஆக்கி, தீய செயல்களை அழிக்கும் வல்லமை பெற்றவர்கள் பெண்கள் என்பதாம். பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு. இங்குப்பாயும் வளமான ஆறுகள் கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதா, பொன்னி எனப் பெண்கள் பெயர் தாங்கி நிற்கும். இந்த ஒன்றே பெண்ணின் மாண்பை விளக்க வல்லன.

அதேபோல்,

*"அன்னையும் பிதாவும் முனனறி தெய்வம்"*

*"மாதா பிதா குரு தெய்வம்"*

என்று அனைத்திற்கும் மூலம் என்ற கருத்தை நிலவ, ஆற்றல் மிக்கவரும், அறிவு சார்ந்தவரும் கூர்ந்த மதியினரும் பெண்கள் என்பது தெளிவோம். கூர்ந்த மதியினரும் இவர்கள் ஆழ்ந்தவர்கள் என்ற கருத்தை நிரூபிப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும். அவ்வரிசையில் ஆண்டாள், காரைக்கால் அம்மையார், ஔவையார் இவர்களின் இறைபக்தி மேலீட்டைக் காணப் புகுவோம்.

## ஆண்டாள்:

பெரியாழ்வார் கண்டெடுத்த கோதையானவள் ஆண்டவனையே ஆண்டவள். திருவில்லிபுத்தூர் திருத்தலத்தைக் கோகுலமாக்கி பக்திக்கு வித்திட்ட நாச்சியார். *"பெண் புத்தி பின் புத்தி"* என்றொரு பழமொழி உண்டு. பின்னாளில் வர இருப்பதை முன்னரே அறியும் ஆற்றல் மிக்கவர் என்று பொருள்.

தற்போது நாம் நமது கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய பண்பாட்டில் இருந்து விலகி வாழ்வதால் பல இன்னல்களை அனுபவித்து வருகிறோம். இப்படி நடக்கும் என்பதை முன்கூட்டியே உணர்ந்த ஆண்டாள் இலக்கியமாக ஆக்கியதைப் பார்க்கும் போது வியப்பு எழுகிறது.

"காலையில் கண்விழித்து நன்னீராடு; இறை நாமங்களைச் சேர்த்து இசைத்து திருக்கோயில் உறை இறையைத் தொழுதிட நாடு செழித்தோங்கும்" என்ற உண்மையைப் பக்திப்பாதையில் காட்டிய ஆண்டாளின் சக்தியை வியக்காமல் இருக்க முடியாது.

*"தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து"*

*"கற்றுக் கறவைகள் கணங்கள் பல கறந்து"*

*"வாங்க குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்"*

என்ன ஒரு வளமை.

*"மூட நெய் பெய்து முழங்கை வழி வார கூடியிருந்து..."* என்று கூட்டுறவை நாட்டுகிறாள்.

நினைத்ததைச் சாதிக்கும் துணிவை ஆண்டாள் வாழ்க்கை எடுத்துக்காட்டுகிறது. அரங்கனை அடைய வேண்டும் என்ற உறுதிப்பாடு நம்பிக்கை மலர்ந்தது. எத்தனைப் பிறவி எடுத்தாலும் உன் உறவு என்றும் எங்கட்கு நிலைக்க அருள்வாய் என்று இறைஞ்சுவதைக் காணும் போது நீங்காப்பற்றாக

இருக்க வேண்டும் என்ற குறிக்கோள் மட்டுமே முடிவாக உள்ளமை தெளிவு.

*“எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு*
*உற்றோமே ஆவோம் உமக்கே நாம்*
*ஆட்செய்வோம்”*

விண்ணப்பத்திலும் ஒரு அழுத்தம் காண்க.

**காரைக்கால் அம்மையார்:**

வணிகன் மகளாகப் பிறந்து, புனிதவதி என்ற இயற்பெயர் கொண்ட இந்நங்கை வணிகன் பரமதத்தனை மணந்து இல்லறமதை நல்லறமாகப் பேணி வந்த நாளில் மாங்கனி மூலமாக விதி விளையாடியது. பிரிந்து சென்ற கணவனைக் கண்டு நிற்கையில் அவன் அம்மையின் திருப்பாதத்தில் சரணடைகிறான். மேலும்,

*“மானுடம்இவர்தாம் அல்லர் நற்பெரும்*
*தெய்வமாதல்*
*நானறிந்து அகன்றபின்பு”*

“பெற்ற இம்மகவிற்கு இவள் பெயரே சூட்டியுள்ளேன். இவளின் பொற்பாதம் பணிந்தேன். நீங்களும் அப்படியே செய்யுங்கள்” என்றான். இம்மொழி கேட்டவள் தன் நிலையை எண்ணி வருந்தி ஈசனிடம், பேய் வடிவு அடியேனுக்கு அருள வேண்டும் என்று இறைஞ்சுகிறாள். கணவனை அன்றி மற்றவர்க்குத் தம் அழகைப் புலப்படுத்த வேண்டாம் என்ற பதிபக்தி இதுவே.

ஈசனருளால் பேய் வடிவம் மட்டும் பெறவில்லை. அவனை நாவாரப்பாடும் ஆற்றலும் உற்றாள். அற்புதத் திருவந்தாதி நூல் மலர்ந்தது. வையகத்தில் உள்ளோர்க்கு நான் எப்படி இருந்தால் என்ன? ஈசன் திருவடி நீங்காத ஒன்று போதும் என்ற வைராக்கியம், விவேகம் மேலிட்டவளாய் அம்மையைக் காண்கிறோம்.

இறையருள் இருப்பின் இவ்வுலகில் வேறென்ன வேண்டும்? அம்மையார், சிவ பெருமானைக் காண இமயமலை செல்கிறார். இறை உலாவும் கிரியில் தம் பாதங்கள் படுவது தவறென நினைத்துத் தலையாலே நடந்து செல்கிறார். பக்தி மார்க்கம் என்பதற்கு இதைவிட வேறு சான்று தேவை இல்லை. திருப்பாவை ஜீயர் இராமாநுஜர் அவர்கள் திருமலையில் ஏறும்போது முழங்காலால் சென்றதாக வரலாறு உண்டு. ஆக, பக்தியின் உச்சத்தில் இந்நிலை வெளிப்படுகிறது.

தன்னை நாடி வருவோர்க்கு நலம் நல்க காத்திருக்கும் இறைவன் காரைக்கால் அம்மையாரைப் பார்த்து “அம்மையே” என்றழைக்கிறார். ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ் ஜோதியானுக்கு அம்மையாகும் பாக்கியம் கிடைக்கும் என்றால் புனிதவதி செய்த தவம்தான் என்ன! அதோடு உமக்கு என்ன வேண்டும் என்கிறார்?

இந்த இடத்தில் தான் காரைக்கால் அம்மையார் பக்தியின் முக்கியத்துவத்தை நிரூபித்துவிடுகிறார்.

## தி.தி.தே. நடத்திய பெண்களுக்கான புற்றுநோய் விழிப்புணர்வு

**பெண்கள் ஆரோக்கியமாக இருந்தால்தான் சமுதாயமும் ஆரோக்கியமாகவும், வளமாகவும் திகழ்ந்திடும். அத்தகைய பெண்களுக்காக திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினர் அண்மையில் தி.தி.தே. பெண் ஊழியர்களுக்கு புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சியினை மூன்று நாட்கள் திருப்பதியில் நடத்தியது. பெண்கள் எப்பொழுதும் தங்கள் ஆரோக்கியத்தை புறக்கணித்து, குடும்ப நலனையே சிந்திக்கின்றனர். பெண்கள் தங்களுக்காக சிறிது நேரம் ஒதுக்கி உடற்பயிற்சி, யோகா, தியானம் செய்து உடல் மற்றும் மன உறுதியுடன் இருத்தல் வேண்டும். அதுமட்டுமின்றி ஆரோக்கியமான, தூய்மையான உணவு பழக்க வழக்கத்தை கடைபிடிக்க வேண்டும் என்றும் குடும்பத்தில் இருக்கும் பெண்கள் ஆரோக்கியமாக இருந்தால் தான் நாடும் வளர்ச்சி அடையும் என்றும் கூறி பெண்களை உற்சாகப்படுத்தும் விதமாக இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.**







எம்பெருமானே!

*''பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு*
*உண்டேல் உன்னை என்றும்*
*மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்*
*நான் மகிழ்ந்து பாடி அறவா, நீ ஆடும்போது உன்*
*அணியின் கீழிருக்க வேணும்''*

இதுவன்றோ சரணாகதி. பதிகம் பாடும் முறையைத் தோற்றுவித்த நங்கை இவள். ஆக, பாக்கள் புனையும் பிற்காலச் சந்ததியினர்க்கு இப் பெண் முன்னோடி என்பதை நினைவில் நிறுத்து வோம்.

**ஔவையார்:**

"பண்பாடு, சமயம், கவிதை யாவற்றிலும் சிறந்ததைக் குறிக்கும் மரபு ஔவையார் மரபு" என்பர். இதைவிட ஔவையின் தனித்தன்மைக்கு வேறொரு சான்று வேண்டாம். சோழதேசத்தில் உறையூர் தலத்தில் பகவான், ஆதி என்பார்க்குப் பிறந்தவர். காரைக்கால் அம்மையார் போன்றே இளம்பிராயம் முதல் பக்தி மார்க்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். திருமண நாளன்று வயது முதிர்ந்த வளாக வந்ததால் திருமணம் தடைபட்டது. பிற்பாடு இறைத்தொண்டிற்குத் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். கல்வி என்பது ஆண், பெண் பேதமற்றது; வறியவர், செல்வர் எனப் பாராது; உயர்குலம், தாழ்ந்த குலம் என்றும் பாராது. அத்தகு கல்விச் செல்வத்தை நிரம்பப் பெற்றவர் ஔவையார், நாப்புலமை, அருளுடைமை உடையவர். பழத்தின் சுவை அப்பழம் முழுவதும் நிறைந்திருப்பதுபோல் இவரது பாக்கள் அனைத்தும் சொற்சுவை, பொருட் சுவை, ஆழ்ந்த கருத்துக்கள் நிரம்பியவை.

ஆழ்ந்த பொருட்செறிவு கொண்ட தொடர்கள் இவர்தம் இறைபக்தியை வெளிப்படுத்துகிறது. ஔவையார் என்ற பெயரில் பலர் இருந்துள்ளனர். சங்ககால ஔவையார் அரசியல் செல்வாக்கு பெற்று வலம் வந்தவர். இடைக்கால ஔவையார் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், விநாயகர் அகவல், மூதுரை முதலான நூல்கள் யாத்தவர். ஒன்று மட்டும் உண்மை. ஔவையார் என்ற பெயரில் வாழ்ந்த பெண்கள் யாராக இருந்தாலும் தங்களுக்கென ஒரு தனித்த இடத்தைப் பெற்று, பெண்களால் எதுவும் செய்ய இயலும் என்று நிரூபித்தவர்கள். "அணுவிற்கு அணுவாய், அப்பாலுக்கு அப்பாலாய், கணு முற்றி நின்ற கரும்புளே காட்டி வாக்கும் மனமும் இல்லா மனோ லயம் தேக்கியே என்தன் சிந்தை தெளிவித்து, சித்தத்தின் உள்ளே சிவ லிங்கம் காட்டி மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக் காலால் (காற்றால்) எழுப்பும்" என்று விநாயகர் அகவல் மூலம் இறைவன் இருப்பிடம் அறிய வேண்டிய பக்தி யோகமே ஏற்றது என்கிற கருத்தைப் பதிவு செய்கிறார்.

*''ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்'*
*''சீரேத் தேடின் ஏறைத் தேடு''*

என்பன போன்ற உயரிய கருத்துக்கள் காலத்திற் கும் யாவர்க்கும் வேண்டிய ஒன்று. ஔவை என்பதன் பொருள் தாய். தாய் தன் குழந்தைகளை அரவ ணைத்துக் காப்பது போல் வையத்து மாந்தர்கள் வாழ்வாங்கு வாழ வித்திட்ட இத்தாயின் கருணை அளவிடற்கரியது. வேத மொழி அல்லாத மானுடர் மொழியாகிய தமிழில் பாக்கள் இயற்றிய ஔவையார் வாக்குகள் இன்றைய சமுதாயத்தில் வேதவாக்காக மதிக்கப்படுகிறது என்பதைக் காண்கையில் பெண்ணின் ஏற்றம் தெரிய வருகிறது.

*''நல்லாரைக் காண்பதுவும் நன்றே*
*நலமிக்க நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே''*

என்றார் போலும். நல்ல கருத்துக்கள் நிறைந்த நூலைப் படித்து அறிவு பெற வேண்டும். பெண்பாற் புலவராம் இவரைச் சமுதாயம் தெய்வமாக்கிக் காண்கிறது என்றால் அப்பெண்ணின் சீர்மை சொல்லில் அடங்காது.

இதுபோல் எத்தனைப் பெண்கள் சாதனை புரிந்து வரலாறு படைத்துள்ளார்கள். பக்தை மீரா, கூன் பாண்டியனை நின்ற சீர் நெடுமாறன் ஆக்கிய மங்கையர்க்கரசியார், தம்பி தருமசேனனைத் திருநாவுக்கரசர் ஆக்கிய புனிதவதியார் என இப்பட்டியல் நீளும். எனவே, இப்படிச் சமுதாயத்தில் தனித்த ஒப்பற்ற இடத்தை வகித்த பெண்கள் காலந்தோறும் இருந்துள்ளனர். இன்றும் உள்ளனர். என்றும் இருப்பர் என்பது தெளிவு.

*''எட்டும் அறிவினில் ஆணுக்குப் பெண்*
*இங்கு இளைப்பில்லை''*

என்பது நிதர்சனம்.


திருமலை ஆலயத்தில்
"ஷோபகிருது நாம"
தெலுங்கு வருட பிறப்பு
ஆஸ்தானம்
22-03-2023

# ஸ்ரீராமர் சேவையில் தி.தி.தேவஸ்தானம்



### ஸ்ரீ வேங்கடராமர் – திருமலை

அனைத்து நற்குணங்களையும் தன்னுள் கொண்டு அனைவருக்கும் ஆராதனை தெய்வமாகத் திகழ்பவர் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி. ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி கிராமங்கள்தோறும் அர்ச்சா மூர்த்தியாக ஆலயங்களில் தரிசனமளிப்பது ஸ்ரீராமர் மீது உள்ள பக்திக்கு சான்றாகும். ஸ்ரீராமரின் ராஜ்ஜியம் அயோத்தியாக இருந்தாலும் இந்த பாரத தேசத்தின் பல பகுதிகளில் ஸ்வாமியின் திருப்பாதத் தூலியால் அருளப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஸ்ரீராமர் வனவாசம் செய்த போதும், சீதையைத் தேடி அலைந்த போதும், இராவணனை அழித்து அயோத்தி திரும்பிய போதும் பல இடங்கள் ஸ்வாமியின் திருவடி பட்டு புண்ணியத் தலங்களாயின. அவ்வகையில் திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்கு உட்பட்ட ஆலயங்களும் முக்கியமானவை. ஸ்ரீராமநவமியை முன்னிட்டு அவ்வாலயங்களை தரிசித்தாலும் நினைத்தாலும் புண்ணிய பலன்கள் கிட்டும்.



### ஸ்ரீ கோதண்டராமர் – திருமலை

திருமலை ஆனந்த நிலையத்தில் கண்டா(மணி) மண்டபம், ஸ்நபன மண்டபத்திற்கு அடுத்து உள்ள மண்டபம் “ராமுலவாரி மேட” (ஸ்ரீராமர் மேடை). சீதா ராம லக்ஷ்மண உற்சவ மூர்த்திகள் இங்கு வைத்து பூஜித்து வந்ததால் இந்த மேடைக்கு ஸ்ரீராமர் மேடை எனப் பெயர் ஏற்பட்டது. சீதையைத் தேடி இராமர் வேங்கடாத்ரிக்கு வந்ததின் நினைவாக நிறுவிய இந்த உற்சவ மூர்த்திகள் தற்பொழுது கர்ப்பாலயத்தில் தரிசனம் அளிக்கின்றனர். சில காலம் இம்மேடையின் இருபுறமும் ஸ்ரீராமர் மற்றும் திருவேங்கடவனின் பரிவார தேவதைகள் கொலுவீற்றிருந்தனர். இங்கு ஒவ்வொரு மாதமும் புனர்பூசம் திருநட்சத்திரத்தில் அபிஷேகம், திருவீதி உலா மற்றும் சஹஸ்ர தீபலங்கார சேவை நடைபெறுகிறது. ஸ்ரீராமநவமி அன்று ஆஸ்தானம் நடைபெறுவதுடன் வருடாந்திர தெப்போத்ஸவத்தில் முதல் நாள் ஸ்ரீராமர் உலா வருவது குறிப்பிடத்தக்கது.



### ஸ்ரீ கோதண்டராமர் – ஒண்டிமிட்டா

திருப்பதி பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 120 கி.மீ. தூரத்தில் கடப்பா மாவட்டம், ஒண்டிமிட்டாவில் ஸ்ரீகோதண்டராமர் ஆலயம் அமைந்துள்ளது. திரேதா யுகத்தில் தண்டகாரண்யமாக அழைக்கப்பட்ட இப்பகுதியில் மகரிஷிகள் தவம் புரிந்து வந்தனர். இவர்களின் தவம் மற்றும் யாகத்தை அரக்கர்கள் தடுக்க, மகரிஷிகள் காத்திடும்படி ஸ்ரீராமரிடம் வேண்ட, ஸ்ரீராமர் இங்கு வந்து அரக்கர்களை அழித்தாராம். ரிஷிகளின் வேண்டுதலைக் கேட்டு ஸ்ரீராமர் கோதண்டம் தரித்து காட்சி அளித்ததால் ஸ்ரீகோதண்டராமராகி, ஸ்ரீசீதாராம லக்ஷ்மணர் பிரதிமைகளை ரிஷிகளின் வேண்டுகோளின்படி அளித்தாராம். காலப்போக்கில் ஜாம்பவான் ஒரு நாள் இப்பகுதிக்கு வர, அவரின் கனவில் ஸ்ரீராம பிரான் விக்ரஹ வடிவில் தாம் இங்கு உள்ளதாகக் கூற, ஒரே கல்லில் அமைந்த அச்சிலையைக் கண்டெடுத்து பிரதிஷ்டை செய்ததாக தலபுராணம் கூறுகின்றது.

# ஸ்ரீராமச்சந்திர சரணௌ சரணம் பிரபத்யே!

## ஸ்ரீ கோதண்டராமர் – திருப்பதி

திருப்பதி பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 2 கி.மீ. தூரத்தில் ஸ்ரீகோதண்டராமர் ஆலயம் அமைந்துள்ளது. இராவணனை அழித்து அயோத்திற்கு திரும்பும் வழியில் ஸ்ரீராமர் சீதாதேவி மற்றும் பரிவாரங்களுடன் சிறிது காலம் தங்கி பின்னர் புறப் பட்டதாகக் கூறப்படுகிறது. ஜாம்பவானின் வேண்டுதலுக்கிணங்கி ஸ்ரீராமர் இங்கு தரிசனமளிக்க, ஜாம்பவானும் ஸ்ரீசீதாராம லக்ஷ்மண மூர்த்திகளை பிரதிஷ்டை செய்ததாகக் கூறப்படுகிறது. ஆலய கர்ப்பாலயத்தில் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி திருக்கரங்களில் கோதண்டம், அம்பு தரித்து ஸ்ரீகோதண்ட ராமராக வீற்றிருப்ப தோடு வலப்பக்கம் சீதாதேவி, இடப்பக்கம் லக்ஷ்மணன் கொலு வீற்றுள்ளனர். ஜாம்பவான் பிரதிஷ்டை செய்ததால் கர்ப்ப ஆலயத்தில் அனுமன் இல்லாதது குறிப்பிடத்தக்கது. ஆலயத்திற்கு எதிர்புறத்தில் அனுமனுக்கு தனிக்கோயில் உள்ளது.



## ஸ்ரீ பட்டாபிராமர் – வால்மீகிபுரம்

திருப்பதியிலிருந்து சுமார் 100 கி.மீ. தூரத்தில், தற்போதைய அன்னமய்யா மாவட்டத்தில், வால்மீகிபுரத்தில் ஸ்ரீராமபிரான் ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமியாக கொலுவீற்றிருக்கின்றார். பண்டைய காலத்தில் ஜாம்பவான் அயோத்தி சென்று ஸ்ரீராமபிரானை தரிசித்து விட்டு மீண்டும் திரும்பி வந்தாராம். வழியில் இப்பகுதிக்கு வரும்போது ஒரு புற்றிலிருந்து ஒளி வருவதைக் கண்டு, புற்றினை அகற்றி காணும் போது ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி விக்ரகம் கிடைத்ததாம். அங்கேயே ஆலயம் அமைத்து ஸ்வாமியை பிரதிஷ்டை செய்தாராம். இவ்வாலயத்தில் ஸ்ரீராமன் சீதா தேவியோடு சகோதரர்களுடன் காட்சியளிக்கின்றார். ஸ்ரீராமச் சந்திரரின் வலது திருக்கரத்தில் இராசமுத்திரையும், இடது திருக்கரத்தில் வரத ஹஸ்தமும் கொண்டுள்ளார். அனுமன் பிரதக்ஷிண மண்டபத்தில் வீற்று இருப்பது விசேஷம்.



## ஸ்ரீ கோதண்டராமர் – சந்திரகிரி

திருப்பதியிலிருந்து சுமார் 13 கி.மீ. தூரத்தில் சந்திரகிரியில் ஸ்ரீராமர் ஸ்ரீகோதண்டராம ஸ்வாமியாக கொலுவீற்று இருக்கின் றார். விஜய நகர அரசிற்கு உட்பட்டிருந்த சந்திரகிரி கோட்டைக்கு அடிக்கடி விஜய நகர சக்ரவர்த்திகள் வந்து, திருமலைக்குச் சென்று ஸ்வாமியைத் தரிசிப்பர். 16ஆம் நூற்றாண்டில் விஜய நகர சக்ரவர்த்திகளின் அதிகாரி ஒரு நாள் கோட்டைக்கு அருகில் ஓய்வில் இருந்தபோது கனவில் ஸ்வாமி தோன்றி, தாம் இங்கு இருப்பதாகக் கூற, அவரும் ஸ்வாமியைக் கண்டெடுத்து, இங்கு ஆலயம் அமைத்து பிரதிஷ்டை செய்தாராம். இங்கு ஸ்ரீராமர் ஸ்ரீசீதா தேவியுடன் தம் சகோதரர்களோடு தரிசனம் அளிக் கின்றார். ஒரே பீடத்தில் ஸ்ரீசீதா தேவி ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி, லக்ஷ்மணர், பரதன், சத்ருக்கனனுடன் இருபுறமும் அனுமனும் கருடனும் கொலுவீற்றிருக்கின்றனர். அனைவரும் ஒரே பீடத்தில் அமைந்து இருப்பது சிறப்பு.



தெலுங்கு மூலம் : டாக்டர் ஐ.எல்.எஸ்.சந்திரசேகர ராவ்



28-01-2023 இரதசப்தமி அன்று திருமலையில் நடைபெற்ற சூரியப்பிரபை வாகன சேவையில் பங்கு கொண்ட ஆந்திர மாநில தலைமைச் செயலாளர் டாக்டர் கே.எஸ்.ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ். அவர்கள், திருப்பதி ஜெ.இ.வோ.(எச்.&இ.) திருமதி சதா பார்கவி ஐ.ஏ.எஸ். அவர்கள்



28-01-2023 இரதசப்தமி அன்று திருமலையில் நடைபெற்ற கல்ப விருக்ஷ வாகன சேவையில் பங்கு கொண்ட தி.தி.தே. திருப்பதி இணைச் செயலாட்சித்தலைவர் (எச்.&.இ) திருமதி எஸ். சதாபார்கவி ஐ.ஏ.எஸ். அவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள்



திருவேங்கடமுடையானின் பட்டத்துராணியான ஸ்ரீபத்மாவதி தாயார் கொலுவீற்றிருக்கும் திருச்சானூரில் 28-01-2023 அன்று இரத சப்தமி விழா நடைபெற்றது. அதுபோது ஸ்ரீபத்மாவதி தாயார் முதல் வாகனமான சூரியப்பிரபை வாகனத்தில் எழுந்தருளியத் திருக்காட்சி



25-01-2023 திருப்பதி, தி.தி.தே. பர்ட் மருத்துவமனையில் நவீன இரத்த பரிசோதனை கூடத்தை துவக்கி வைக்கும் தி.தி.தே., இ.வோ. திரு.ஏ.வி. தர்மா ரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள் , உடன் தி.தி.தே. திருப்பதி ஜெ.இ.வோ. (எச்.&இ.) திருமதி சதா பார்கவி ஐ.ஏ.எஸ். அவர்கள்



26-01-2023 அன்று தி.தி.தே. நிர்வாகக் கட்டிட வளாகத்தில் இந்தியக் குடியரசு தினத்தை முன்னிட்டு தேசியக் கொடியை ஏற்றி மரியாதை செலுத்தும் தி.தி.தே., இ.வோ. திரு.ஏ.வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ்., திருப்பதி ஜெ.இ.வோ திரு.வி. வீர பிரம்மம் ஐ.ஏ.எஸ்., திருமதி சதா பார்கவி ஐ.ஏ.எஸ்.(எச்.இ) மற்றும் உயர் அதிகாரிகள்



31-01-2023 அன்று விசாகப்பட்டிணம் சாரதா பீடத்தில் தி.தி.தே. நடத்திய சதுர்வேதஹவன பூர்ணாஹுதி நிகழ்ச்சியில் பங்கு கொண்ட விசாக சாரதா பீடாதிபதி ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஸ்வரூபானந்தேந்திர ஸ்வாமிகள், தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு.ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள்



21-01-2023 திருமலையில் நடைபெற்ற புரந்தரதாசர் ஆராதனை உற்சவத்தில் பங்கு கொண்ட கர்நாடக முளபாகல் ஸ்ரீபாதராஜ மடாதிபதி ஸ்ரீஸ்ரீஸ்ரீசுஜயநிதி தீர்த்த ஸ்வாமிகள், தி.தி.தே. திருப்பதி ஜெ.இ.ஓ. திருமதி சதாபார்கவி ஐ.ஏ.எஸ். (எச்.&இ.) அவர்கள்



27-01-2023 அன்று தி.தி.தே. மொபைல் செயலியைத் துவக்கி வைத்த தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத் தலைவர் திரு.ஒய்.வி. சுப்பா ரெட்டி, தி.தி.தே. இ.வோ. ஏ.வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ்., தி.தி.தே. திருப்பதி ஜெ.இ.வோ. வி.வீரபிரம்மம் ஐ.ஏ.எஸ்.




# திருவேங்கட கோவிந்தனும் அயோத்தி ராமனும்

*– பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,*
*புவனகிரி.*

ராமநவமியைக் கொண்டாடும் அற்புதமான இந்த மாதத்தின் சிறப்புக் கட்டுரையாக அயோத்தி இராமனையும் திருவேங்கடத்தில் கண் கண்ட தெய்வமாக அருள்பாலிக்கும் கோவிந்தனையும் இணைத்து சில சுவையான செய்திகளைக் காண்போம்.

## பூலோக வைகுந்தம்

வைகுந்தத்தை விண் (த்ரிபாத் விபூதி) என்பார்கள். திருமலை அப்பன் எழுந்தருளி இருக்கும் திருமலையை பூலோக வைகுந்தம் என்று சொல்கிறோம். வைகுந்தத்துக்கு அயோத்தியா என்று ஒரு பெயர் உண்டு. அதாவது யுத்தங்களாலே வெல்லப் படாத நகரம் என்று சொல்வார்கள். இராமன் அவதரித்த இடம் அயோத்தியா. எனவே கோவிந்தன் குடியிருக்கும் இடமும், இராமன் அவதரித்த இடமும் ஒன்று தான்.

வைகுந்தத்தில் விரஜாநதி ஓடுகிறது. இராமன் அவதரித்த அயோத்தியில் எல்லா உயிர்களுக்கும் அமுதத்தைத் தரும் சரயு நதி ஓடுகிறது. திருமலையப்பனின் திருமலையில் ஸ்வாமி புஷ்கரணி என்னும் தீர்த்தம் இருக்கிறது. சரயு நதியில் ஸ்ரீராமபிரான் தீர்த்தம் ஆடுவார். ஸ்வாமி புஷ்கரணியில் திருமலையப்பன் தீர்த்தவாரி உற்சவம் நடைபெறும்.

## இருவருக்கும் காடு பொது

திருவேங்கடம் என்னும் காட்டுக்குள் அருள் தருவதற்காக நின்று கொண்டிருக்கிறான் கோவிந்தன். ரிஷிகளும் மற்ற சாதுக்களும் உஜ்ஜீவனம் பெற வேண்டும் என்பதற்காகவே 14 ஆண்டுகள் காடாள வனம் சென்றான் ஸ்ரீராமன்.

## இருவரும் பார்க்கப் பார்க்க அழகு

*“தோள் கண்டார் தோளே கண்டார் தொடு கழல்*
*கமலம் அன்ன தாள் கண்டார் தாளே கண்டார்”*

என்று சொல்லும்படியாக, அழகைப் பெற்று உலகையெல்லாம் பிரமிக்கச் செய்தவன் ஸ்ரீராமன்.

*சந்திர காந்தானனம் ராமம் அதீவ பிரிய தர்சனம்*
*ரூபௌதார்ய குணை பும்ஸாம் திருஷ்டி சித்தாபஹாரிணாம்*

(–அயோத்யா 3–27) என்று வால்மீகி காந்தத்தை போல் கவர்ந்து இழுக்கின்றவன் இராமன் என்று சொல்லுகின்றார்.

அவனை ஒரு முறை பார்த்து விட்டால் மற்றொரு முறை பார்க்க வேண்டுமே என்று உள்ளம் ஏங்கும். திருமலை அப்பன் கோவிந்தனும் அப்படியே. தினசரி 60,000 பேருக்குக் குறையாமல் தரிசனம் பெற்று உஜ்ஜீவனம் பெறுகின்றனர். பல மணி நேரம் காத்திருந்து சில நொடிகளாவது அவனைக் காண முடியாதா என்று ஏங்குகின்றனர். அப்படி

ஆகர்ஷணம் செய்பவன் கோவிந்தன். அப்படி ஆகர்ஷணம் செய்வதால் தான் மற்ற திவ்ய தேசங்களை விட திருமலையில் கூட்டம் அலைமோதுகிறது.

### திரு(ஸ்ரீ)வோடு கூடிய தேவன்

திருவில்லாமல் கோவிந்தன் இல்லை. திருப்பதி, திருமலை திருவேங்கடம் என்கிற தலமே திரு(ஸ்ரீ) சப்தத்தினாலே சிறப்பு பெற்றது. அலர்மேல் மங்கை மணாளனாக அவன் இருப்பதால் தான் அவனுடைய அருள் எல்லோருக்கும் கிடைக்கின்றது.

அதைப்போலவே சீதையோடு இராமன் இருக்கின்ற காலத்தில் எல்லோரும் வாழ்ச்சி பெற்றனர். மன்னிக்க முடியாத தவறு செய்த காகாசுரன் சீதை அருகில் இருந்ததால் தலை தப்பித்தான். அவளுடைய புருஷ காரம் இல்லாததால் 10 தலை இருந்தும் இராவணன் தண்டிக்கப் பட்டான்.


திருவாகிய பிராட்டியை (மஹாலக்ஷ்மியை) முன்னிட்டுக் கொண்டு தான் திருமலைக்குப் பெருமை என்பதை நாம் அறிவோம். அதை போலவே சீதையை முன்னிட்டுத்தான் இராமனுக்கும் இராமாயணத்திற்கும் பெருமை. இராமாயணத்தை இராமனின் கதை என்று சொல்லாமல் ஸீதாயா சரிதம் மஹத் என்று சீதையை முன்னிட்டு இராமாயணம் சொல்லப்பட்டது.

### இறங்கி (அவதாரம்) வந்த காரணம்

பூவுலகில் உள்ள சம்சாரிகளுக்காகவும் வானுலகில் உள்ள தேவர்களுக்காகவும் திருமலையில் வந்து நின்றவன் திருமலை அப்பன். இதை *"வானவர் சந்தி செய்ய நின்றான்"* என்ற தொடராலும், *"விண்ணோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு"* என்ற தொடராலும் நாம் அறியலாம். அது போலவே இராமபிரானும் வைகுந்தத்திலிருந்து தேவர்கள் வாழ்ச்சி பெறவும், உலகத்தில் அறம் நிலைநாட்டவும் வந்து அவதரித்தான்.

திருவேங்கடவனை *"நெடுவரையின் உச்சி மேலாய்"* என்று, நீண்ட மலையின் உச்சியில் ஜோதியாய் (உபநிடதப் பொருளாய்) விளங்குபவன் என்கிறார் திருமங்கை ஆழ்வார். இராமபிரானுக்கும் "இராம திவாகரன்" என்ற திருநாமம் உண்டு. சூரியனை விட கோடி மடங்கு பிரகாசமாய் ஜொலிப்பவன். இதனை கீழ்க்கண்ட கம்பராமாயணப் பாடல் விளக்கும்.

*வெய்யோன் ஒளி தன் மேனியின் விரி*
*சோதியின் மறைய,*
*பொய்யே எனும் இடையாளொடும்,*
*இளையானொடும் போனான்*
*மையோ, மரகதமோ, மறிகடலோ மழை முகிலோ*
*ஐயோ இவன் வடிவு! என்பது ஓர் அழியா அழகு*
*உடையான்*





## இராமாநுஜரின் ஈடுபாடு

சுவாமி இராமாநுஜருக்கு இராமன் பெயரில் அளவற்ற ஈடுபாடு. அதே ஈடுபாடு திருமலை கோவிந்தனிடமும் உண்டு.

அவருடைய மனத்தில் இரண்டு விஷயங்கள் தான் இருந்தன. ஒன்று இராமாயணம். *''படி கொண்ட கீர்த்தி ராமாயணம் என்னும் பக்தி வெள்ளம் குடி கொண்ட கோயில் எம்மி ராமாநுசன்'* என்று சதா சர்வ காலமும் அவர் இராமாயணத்தை அனுபவித்துக் கொண்டிருந்ததை திருவரங்கத்து அமுதனார் இராமாநுஜ நூற்றந்தாதியில் பாடுகின்றார்.

அதைப்போலவே *''இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம்''* என்று வைகுந்தத்துக்கு அடுத்து முதன்மையாக அவருடைய உள்ளத்தில் இருந்தது திருவேங்கடமே என்பதையும் அமுதனார் பாடுகின்றார். இதில் இன்னொரு சிறப்பு உண்டு. இராமாயணத்தைக் கேட்பதற்காகவே பெரிய திருமலை நம்பிகளிடம் ஒரு வருட காலம் பயின்றார் என்பது ராமாநுஜர் சரித்திரத்தில் வருகின்றது. அவர் படித்த இடம் திருவேங்கடம்.

## இராமாயணத்தின் சாரார்த்தம்

இராமாயணம் சரணாகதி மார்க்கத்தைக் காட்டுகின்றது. அபயப் பிரதான சாரமே இராமாயணத்தின் சாரார்த்தம் என்பார்கள். அதிலே வருவதெல்லாம் சரணாகதிதான். பரதன் சரணாகதி, தேவர்கள் சரணாகதி, விபீஷண சரணாகதி, ரிஷிகள் சரணாகதி என்று சரணாகதி பற்றிய விளக்கம் தான் இராமாயணம். திருவேங்கட கோவிந்தனும் சரணாகதி சாஸ்திரத்தை வலியுறுத்தவே வந்து திருமலையில் நின்றவன். அதனால்தான் சுவாமி நம்மாழ்வார் திருமலை அப்பனிடம் சரணாகதி செய்கின்றார். *''புகல் ஒன்று இல்லா அடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே''* என்கிற பாவனை சரணாகதிக்கு முக்கியம்.

## ஒரு தரம் சொன்னால் போதும்

ஒரே ஒரு தரம் கோவிந்தா என்று சொன்னால் பக்தர்களின் குறைகளை எல்லாம் அவன் தீர்த்து வைத்து விடுவான். அதைப் போலவே *''சக்ருதேவ பிரபன்னாய தவாஸ் மீதி ச யாசதே அபயம் சர்வ புதேப்யோ ததாமி ஏதத் வ்ரதம் மம''* என்று ஒரே ஒரு தரம் சரணாகதி செய்து விட்டால் அவர்களுக்கு அபயம் தருவதையே தன்னுடைய வாழ்நாள் நோக்கமாகக் கொண்டவன் இராமன்.

## இராமனுக்கும் கோவிந்தன் என்கிற பெயர் உண்டு

திருமலை அப்பனுக்கு “கோவிந்தன்” என்கின்ற பெயர் எத்தனை பொருத்தமோ, அதே கோவிந்தன்

## வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*க$_3$த்வா ஸ காஞ்சீமத$_2$ யாத$_3$வோऽபி ராமாநுஜே ப்ரீத*
*இவாந்தரேர்ஷ்ய: ।*
*தத$_3$ாதி$_3$ தந்மாநஸசோத$_4$நேச்சு$_2$:*
*வேத$_3$ாந்தவாக்யார்த்த$_2$விசாரகோऽபூ$_4$த் ॥*

(20)

அதற்குப்பின் காஞ்சியை அடைந்த யாதவரும் இராமாநுஜரிடம் ப்ரீதியுடையவர் போலிருந்து கொண்டு, நெஞ்சில் பொறாமையுடையவராய், அது முதற்கொண்டு அவரது கருத்தைப் பரீக்ஷிப்பதில் நாட்டம் கொண்டவராய், அவரோடு வேதாந்தவாக்யார்த்த விசாரங்களைச் செய்து வந்தார். – “ஸுதர்சனம்” ஆசிரியர் இயற்றியது

பெயர் இராமனுக்கும் பொருந்தும். கோ என்றால் அஸ்திர சஸ்திரங்கள். இந்த அஸ்திரங்களை அகஸ்தியரிடமிருந்து பெற்றவன் இராமன் என்பதினாலே இராமனுக்கும் கோவிந்தன் என்ற பெயர் பொருந்தும். எனவே இருவரும் ஒன்றுதான். இதை நம்மாழ்வாரும் ஒரு அற்புதமான நிகழ்ச்சியில் சொல்லுகின்றார்.

இராமாயணத்தில் இராமன் சிறு வயதில் கூனி என்ற கைகேயின் அரண்மனையில் வேலை செய்யும் மந்தரை மீது விளையாட்டாக ஒரு கல் உருண்டையால் அடித்ததாக ஒரு வரலாறு உண்டு. ஆனால் நம்மாழ்வார் இந்த நிகழ்ச்சியைப் பாடுகின்ற பொழுது இராமன் கல்லுருண்டையால் அடித்தான் என்று பாடவில்லை கோவிந்தன் அடித்தான் என்று பாடுகின்றார். அப்படியானால் கோவிந்தனும் இராமனும் ஒன்றுதானே.

### இருவருக்கும் குறை இல்லை

கோவிந்தனுக்கு குறை ஏதுமில்லை. அதனால் குறை ஒன்றும் இல்லாதவன் கோவிந்தன் என்று ஆண்டாள் பாடுகின்றார். இராமனும் குறை ஒன்றும் இல்லாதவன். யார் சிறந்த குணவான். (“கோ குணவான்) என்கின்ற கேள்விக்கு பதினாறு சிறந்த குணங்களைப் பட்டியலிட்டு அந்த 16 குணங்களும் இராமனிடம் இருந்ததாக பெரியவர்கள் சொல்லுவார்கள்.

அப்படிப்பட்ட உயர்ந்த திருத்தலம் திருவேங்கடம். அந்த திருவேங்கட கோவிந்தனுக்கும், அயோத்தி இராமனுக்கும் பற்பல தொடர்புகளும் ஒற்றுமைகளும் உண்டு. அதில் சிலவற்றை மட்டும் இந்தக் கட்டுரையில் நாம் பார்த்திருக்கிறோம். இன்னும் நிறைய ஒற்றுமைகள் உண்டு அதை வேறொரு சந்தர்ப்பத்திலே பார்க்கலாம்.

பாசுரம் படிப்போம்...

### தியான சுலோகங்கள்

அநஸூயா: க்ஷமா சாந்தி
சந்தோஷ: ப்ரிய வாதின: |
காம க்ரோத பரி த்யாக:
ஏக: சிஷ்டஸ்ய லக்ஷணம் ||

அடுத்தவர்களை கண்டு பொறாமை படக்கூடாது. பொறுமையை கை ஆள வேண்டும். அமைதியுடனும், மனம் நிறைவுடனும் வாழ கற்றுக் கொள்ள வேண்டும். அன்புடன் பேசுவதும், அடுத்தவன் சொத்திற்கு ஆசை படாதவனே சிறந்த உத்தமன் ஆகிறான்.

தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.

முற்றும்...



**புராண வரலாறு :**

எம்பெருமான் தன்னிடம் மேன்மை, எளிமை என்கிற குணங்கள் உள்ளன என்று காட்டுவதற்காக நிகழ்த்திய திருவிளையாடல்தான் இத்தலத்து வரலாறு எனில் மிகையன்று.

தன் விருப்பத்திற்கு ஏற்ற வண்ணம் தீர்ப்புக் கூறியபின், கங்கையில் நீராடச் சென்ற நாரதர், நீரில் இறங்கியதும் கங்கை நீர் தன் குளிர்ச்சியை இழந்து, கலங்கி, தண்ணீர் குறைந்து இருப்பதைப் பார்த்தார். நீராடிய பின் கங்கை நீர் போன்று இவரது உள்ளமும் கலங்கி இருப்பதை உணர்ந்தார். இந்நிலைக்குக் காரணம் அறிய வேண்டி, நாரதர் பிரமனைச் சரண் அடையவே, அவர் "உண்மைக்கு மாறான தீர்ப்பைச் சொன்னதனால் உனக்கு இந்நிலை" என்றும், "பரமபதத்தில் இருந்து, பாற்கடலில் எம்பெருமான் பள்ளிகொண்டு இருப்பதே எளிமைப் பண்பினால் தான்" என்றும் கூறி, முன்பு இது பற்றி அகத்திய மா முனிவர்க்கு சூதபுராணிகர் கூறிய திருக்கடல் மல்லைத்தல வரலாற்றைக் கூறத் தொடங்கினார்.

புண்டரீகர் என்ற மாமுனிவர் திவ்ய தேசப் புனிதப்பயணத்தை மேற்கொண்டு, திருவிடந்தை என்னும் திவ்ய தேசத்தில் ஞானபிரானை வணங்கி, பின்பு அதற்குத் தெற்கில் , எல்லா வகை மலர்களும் நிறைந்த மிகப் பெரிய மலர்ச் சோலையைக் கண்டு, மலர்ச் சோலையின் இடையே, ஒப்பற்ற புஷ்கரணியைப் பார்க்கிறார். இதுவரை அவர் கண்டிராத வகையில் காண்கிறார். மலர்களைக் கண்ட மா முனிவர்க்கு மலர்களைச் சூட்டி, மாலவனை வழிபட வேண்டும் என்ற ஆசை ஏற்பட, அப்போது வானில் அசரீரி "முனிவரே நீர் கண்ட பூக்களைக் கொண்டு பாற்கடல் எம்பெருமானுக்குச் சூட்டி வழிபடுக" என்று கூறிற்று. முனிவர் தன்னை மறந்தார். "தான் எப்படிப் பாற்கடலை அடைவது?" என்று சிந்திக்கவும் மறந்தார். அவரது உள்ளத்தில் பெருகிய ஆர்வம், தூண்டவே,குவியல் குவியலாகத் திருக் குளத்துத் தாமரை மலர்களைப் பறித்தார்.

அச்சமயம் நாக்கு அறுபட்ட ஒரு முதலை புண்டரீகர் முனிவரின் பார்வையால், முதலை வடிவம் நீங்கி, அரசன் வடிவில் வந்து தான் முற்பிறவியில் ஹரிப்பிரியன் என்ற பெயரில் மகாபலிபுர மன்னனாக ஆண்டு வந்ததாகவும், தற்போது தன் மைந்தன் சதாநந்தன் என்பவன் அந்நகரை ஆண்டு வருவதாக வும் கூறி முற்பிறவியில் மகாபலிபுரத்தில் எழுந்தருளி இருந்த பூவராகப் பெருமானைத்தனது குலதெய்வ மாகக் கொண்டு வழிபட்டு வந்ததாகவும் சொன்னான்.

அதே அரச பரம்பரையில் திருவல எந்தைப் பிரானை முறைப்படி வழிபட்டு வந்த ஹரிப்பிரியன், ஒருநாள் தன்னிடம் வந்த அந்தணனை வரவேற்கா மலும் உணவு அளிக்காமலும் ஆணவத்துடன் இருந்ததால் முதலையாகப் பிறக்கும் சாபத்தைப் பெற்றதாகவும், சாபத்தில் இருந்து விடுபட, வழியினை வேண்டிய போது, புண்டரீகர் என்னும்




# திருக்கடல்மல்லை

- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

மாமுனிவரின் அருட்பார்வையினால் முதலை வடிவம் நீங்கும் என்றும் கூறிய படியால், தற்போது தான் சாபநீக்கம் பெற் றதாகக் கூறி ஹரிப்பிரியன் வானுலகம் சென்றான்.

இந்த வரலாற்றைக் கேட்ட புண்டரீகர் வியந்தார். பாற்கடலை அடைவதற்கு கடல் தடையாக இருப்பதை எண்ணி, அக்கடலையே, தன் கரங்களால் இறைக்கத் தொடங்கினார். ஆனால், கடல் நீர் குறையவில்லை. கைகள் சோர்ந்தன. ஆனால் உள்ளம் தளர வில்லை. பகவான் முதியவர் வடிவில் தோன்றி, அவர் கடலை இறைப்பதன் காரணத்தைச் சொல்லி மறுபடியும் கடலை இறைக்கவும், அதனை தடுத்த முதியவர், தன் திருக்கரங்களால் இரு முறை கடல் நீரை இறைத்துக்காட்டி, சிறிது தொலைவு கடலை உள்வாங்கச் செய்து, புண்டரீகரின் உள்ளத்தில் நம்பிக்கை ஒளிவிடச் செய்து, தன் பசிக்கு ஏற்ற உணவைக் கொண்டுவருமாறு கேட்டார். மலர்க் குவியலை வைத்து விட்டு, முதியவர்க்கு உணவு எடுத்துக் கொண்டு திரும்பிய புண்டரீகருக்கு எதிரில் முதியவரைக் காணவில்லை.

ஆதிசேஷன் மீது சயனித்து, அவ் விடத்தைக் கைவிட்டு இங்கே புண்டரீ கருக்கு அருளும் முறையில், தரை யையே படுக்கையாகக் கொண்டு, தான் கொண்டு வந்த மலர்களை எல்லாம் சார்த்திக்கொண்டு, தல சயனப் பெருமா ளாக விளங்குவதைக் கண்டு புண்டரீகர் எளிமையைக் (ஸௌலப் பயத்தை) கண்டு மனம் உருகி, இங்கேயே நிலை யாக இதே நிலையில், அர்ச்சையில் சேவை சாதிக்கவேண்ட, இது திருக்கடல் மல்லை என்ற திவ்ய தேசமாக ஆயிற்று.

பெரியவாச்சான் பிள்ளை, "நித்ய ஸுரிகள் இடையே இருக்கக் கடவ வல்லது. இப்படி ஸம்ஸாரத்தில் புகுந்து, தரைக்கிடை கிடப்பதே, இது என்ன நீர்மை" என்று அருள்கிறார் கருடவாகன பண்டிதர். திவ்ய சூரி சரிதையில், இப்பெருமானை, "ஸாகரமல்லநாதன்" என்கிறார்.

**சிறப்புகள் :**

இவர் கடல்மல்லைக் கிடந்த கரும்பு, தலசயனத்து உறைகின்ற ஞானத்தின் ஒளி, அந்தணர்கள் அமுது பொற்குன்று.

*ஸ்ரீமந் மல்ல புரீசாய கமலாலய வக்ஷஸே*
*ஞானப் ராபா ஸ்வரூபாய ஸ்தல சய்யாய மங்களம்*
*ஸ்ரீமந் மல்ல புரிசாய ஞானதீபப்ரபாயுஷே*
*ஸ்ரீபூத யோகினே பூயாத் நித்யஸ்ரீ நித்ய மங்களம்*

பெருமாள் : மூலவர் : தல சயனப் பெருமாள். (கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம்) இப் பெருமானின் ஒரு கை, அடியார்களை "வா" என்று அழைக்கும் முறையில் அமைந் துள்ளது. இதனை வட மொழியில் "ஆஹ் வான ஹஸ்தம்" என்பர். மற்றொரு கை மார்பில், உபதேச முத்திரையைக் காட்டு கிறது. உத்ஸவர்: தலசயனத்து உறைவார், உலகு உய்ய நின்றான்.

தாயார் : நிலமங்கைத் தாயார்.

புஷ்கரணி : புண்டரீக புஷ்கரணி, கருடநதி,

## வைணவ குறுக்கெழுத்துப்புதிர் 80க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | ப் | பா | ற் | க | ட | ல் | லை | ம | ரு | 2 தி |
| ரு | | ம் | ண | வோ | ரு | 3 தி | ம் | ர | தி | த் | 4 உ |
| க் | ஷி | ரி | க | ம | ம | ம் | ர | பி | ப் | க | 5 சு |
| கோ | | | 6 வி | ஸ் | வ | பு | ண் | ய | தா | ம் | ந் |
| 7 வி | ஸ் | வ | ரூ | ப | ம் | 8 சூ | ரி | ய | ன் | ர | தா |
| ளூ | 9 அ | ந் | த | ர் | யா | மி | த் | | | பூ | ரா |
| ர் | லை | ம | றி | ன் | தோ | ன் | 10 தா | | | ப் | |
| 11 பெ | ரி | ய | பெ | ரு | மா | ள் | 12 வே | | | டி | |
| | 13 அ | ர் | ச் | 14 சு | ன | ன் | ஷ | சே | தி | 15 ஆ | தி |
| ம் | த | ர | வி | மி | சு | ட் | ல | ர | 16 வ | | ப |
| | | | 17 உ | த் | தா | ன | ச | ய | ன | ம் | ரௌ |
| தி | ந் | தா | 18 வே | ரா | | ர் | ளூ | கோ | க் | ரு | 19 தி |

## 2023, ஏப்ரல் மாத பண்டிகைகள், பருவ தினங்கள் மற்றும் தி.தி.தே. ஆலய உற்சவங்கள்

| | |
|---|---|
| 03-05 | திருமலையப்ப ஸ்வாமி வசந்த உத்ஸவம். |
| 03-05 | திருப்பதி ஸ்ரீகோதண்ட ராம ஸ்வாமி தெப்ப உத்ஸவம். |
| 03-05 | பெங்களூர் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி வஸந்தோத்ஸவம். |
| 05 | ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி கல்யாணோத்ஸவம். |
| 06 | தும்புரு தீர்த்தம். |
| 11-13 | கார்வேடி நகரம் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி வஸந்தோத்ஸவம். |
| 22 | பரசுராம ஜயந்தி. |
| 22 | கங்கா நதி புஷ்கரம் ஆரம்பம். |
| 23 | அக்ஷய திருதியை. |
| 25 | ஸ்ரீராமாநுஜ ஜயந்தி, ஸ்ரீசங்கர ஜயந்தி. |
| 25-மே4 | நாராயணவனம் ஸ்ரீஅகஸ்தீஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 26 | முதலியாண்டான் திருநட்சத்திரம். |
| 29-மே1. | திருமலை பத்மாவதி ஸ்ரீநிவாச பரிணயோத்ஸவம் |

தீர்த்தம் (அந்தர்வாகினி).

விமாநம் : ககனாக்ருதி விமாநம் (ஆனந்த விமாநம்)

ப்ரத்யக்ஷம் : புண்டரீக மாமுனிவர்.

ஆகமம் : வைகானஸம்.

மங்களாசாஸனம் : பூதத்தாழ்வார், திருமங்கையாழ்வார்.

**விசேஷம் :**

திருமங்கை ஆழ்வார் 5 அங்கங்களில் இந்த எம்பெருமானைப் பாடியிருப்பதாக சொல்வர்.

**த்யானச்லோகம் :**

*நாம்நா ஸாகர பர்வதே ச்ருதிநுதே*
*நந்தேவிமாநேத்புதே*
*பச்சாந் நிர்மல் புண்டரீக ஸரஸ: ப்ராசீ*
*ப்ரதேசேக்ஷண: ।*
*லக்ஷ்ம்யா பூமி ஸமாக்யயாச விலஸத்*
*பக்தாவநே தீக்ஷித:*
*விஜ்ஞானாகர புண்டரீக முநிநா ஸாக்ஷாத்*
*க்ருதோ பாஸதே ॥*

**பாசுரம் :**

*"கிடந்தானைத் தடங்கடலுள் பணங்கள்மேவிக்*
*கிளர்பொறிய மறிதிரிய அதனின்பின்னே*
*படர்ந்தானைப் படுமதத்த களிற்றின்கொம்பு*
*பறித்தானைப் பாரிடத்தை எயிறுகிற*
*இடந்தானை வளைமருப்பி னேனமாகி*
*இருநிலனும் பெருவிசும்பு மெய்தாவண்ணம்*
*கடந்தானை, எம்மானைக் கண்டு கொண்டேன்*
*கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே."*

– திருமங்கையாழ்வார்

*"வரைச் சந்தனக்குழம்பும் வான்கலனும் பட்டும்*
*விரைப்பொலிந்த வெண்மல்லிகையும்*
*நிரைத்துக்கொண்டு*
*ஆதிக்கண்நின்ற அறிவன் அடியிணையே*
*ஓதிப் பணிவ துறும்.*

– பூதத்தாழ்வார்

*"செறிந்த பணைபறித்துத் திண்களிற்றைச்சாடி*
*முறிந்துவிழப்பாகனையும் மோதி - எறிந்து*
*தருக்கு அடல் மல்லைக் குமைத்தான்.*
*தஞ்சம் என்று நெஞ்சே திருக்கடல்*
*மல்லைக்குள் திரி"*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

**நாமாக்கள்**

691. *ஓம் பூரயிதாநம் நம:*

பக்தர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்பவன்.

*ஓம் ஜகத்யோநி நம:*

தியானிப்பதற்காக ஜகத் காரணமாக இருப்பவள்.

692. *ஓம் புண்ய நம:*

பாவிகளை அழிக்கும் புண்யன்.

*ஓம் வ்யோமலக்ஷ்மீ நம:*

பரமபதம் என்கிற திருநாட்டில் கைங்கர்ய சாம்ராஜ்யம் பெறத் த்யானிக்கப் படுபவள்.

693. *ஓம் புண்ய கீர்த்தி நம:*

புண்யமான புகழ் உள்ளவன்.




இரகுகுல நந்தனனான ஸ்ரீஇராமச்சந்திர பிரபுவிற்கு அருமை மனையாள் சீதாப் பிராட்டியுடனும், இளவல் லக்ஷ்மண பெருமானுடனும் திருப்பதியில் இராமச்சந்திர புஷ்கரணியில் தெப்போத்ஸவம் காணுகிறார். புஷ்பங்களாலும், அலங்கார விளக்குகளாலும் ஜொலிக்கும் தெப்பத்தில் பவனி வரும் ஸ்ரீகோதண்ட இராமனைத் தரிசிக்கும் பாக்யம் பக்தர்களுக்குக் கிடைக்கிறது. "ராம" என்கிற இரண்டெழுத்து மந்திரமே மதுரமானது.ஸ்ரீராம பிரானுக்கு வீதி புறப்பாடு கண்டருளி, பின்பு தெப்பத்தில் ஏளப் பண்ணி பக்தர்களுக்கு அருள்பாலிக்கச் செய்வது வழக்கமாக நடந்து வருகிறது.முதலில் வேதப் பிரியனான எம்பெருமானுக்கு வேத பண்டிதர்களின் வேத பாராயணம், அதற்கடுத்து ஸ்வாமியை கருப்பொருளாகக் கொண்டு பக்தி கீர்த்த னைகளை புனைந்த மஹாகவி அன்னமாசார்யரின் கீர்த்தனைகள், இறுதியாக மேள, தாளத்தோடு மங்கள வாத்யத்துடன் தெப்போத்ஸவம் நடைபெறுவது சம்ப்ரதாயமாக இருந்து வருகிறது. ஒவ்வொரு நாள் முடிவிலும், தீக்கண்களின் திருஷ்டி அனைத்தும் காற்றிலே கற்பூரம் போல கரைய, கற்பூர மங்கள ஹாரத்தி காட்டப்பட்டு தெப்போத்ஸவம் நிறைவுக்கு வருகிறது.

*ஓம் ஸீதுர்லபா: நம:*

பாக்யம் இல்லாதவர்களால் எளிதில் ஆச்ரயிக் கப்பட முடியாதவள்.

*694. ஓம் அநாமய: நம:*

பிறவி நோய்க்கு மருந்து.

*ஓம் பாஸ்கரீ நம:*

ஜீவாத்மாவின் தர்மபூதஜ்ஞானம் என்கிற ஒளியைப் பரப்புபவள்.

*695. ஓம் மநோஜவ: நம:*

மனோ வேகத்தில் பக்தர்களுக்கு அருளுபவன்.

*ஓம் புண்ய கேஹஸ்தா நம:*

சாஸ்திர அநுஷ்டானம் செய்பவர்கள் க்ருஹத் தில் வசிப்பவள்.

*696. ஓம் தீர்த்தகர: நம:*

கங்கை முதலான தீர்த்தங்களைப் படைத்தவன்.

*ஓம் மநோஜ்ஞா நம:*

அடியார்களை எப்போதும் தன்னையே துதிக் கும் மனத்தைக் கவரும் அழகுள்ளவள்.

*697. ஓம் வஸுரேதா: நம:*

தன் திவ்ய ஜோதியையே தன் அவதாரங்க ளுக்குக் காரணமாக உள்ளவன்.

*ஓம் விபவப்ரதா நம:*

தன்னைத் தியானிப்பதற்கான ஆற்றலை பரிபூரணமாகக் கொடுப்பவள்.

*698. ஓம் வஸுப்ரத: நம:*

தேவகி– வஸுதேவருக்கு மகனாக அவதரித்து செல்வத்தை அளித்தவன்.

*ஓம் லோகஸ்வமிநீ நம:*

உலகங்களுக்கே உரிய எஜமானி.

*699. ஓம் வஸுப்ரத: நம:*

தேவகி–வஸுதேவர் தனக்குப் பெற்றோர் ஆகும் பாக்யத்தை அளித்தவன்.

*ஓம் அச்யுதார்த்தா நம:*

பெருமாளாலும் ப்ரார்த்திக்கப் டுபவள்.

*700. ஓம் வாஸுதேவ: நம:*

வஸுதேவன் குமாரனான வாஸு தேவன்.

*ஓம் புஷ்கலா: நம:*

அடியார்களுக்குப் புஷ்டியைத் தருபவள்.

*ஸ்ரீமதே பூ ஸ்தலமங்கா தேவீ (நிலமங்கைத் தாயார்) நாயிகா ஸமேத ஸ்ரீஸ்தல ஸயன பர ப்ரம்மணே நம: ஸ்ரீபூவராஹ (ஞானபிரான்) பர ப்ரம்மணே நம:*

**குறிப்பு :**

சென்னையிலிருந்து – கிழக்குக் கடற்கரைச் சாலையில் சுமார் 64 கி.மீ. தூரத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

*திவ்யதேச வைபவம் வளரும்..*



# ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

# திருக்கோட்டியூர் நம்பி

- ஸ்ரீ உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை, 9841884972

ஆளவந்தார் என்னும் ஆசார்யர் அவதரித்துப் பதினோரு வருடங்கள் சென்றபின் பாண்டிய நட்டில் திருக்கோட்டியூர் என்று புகழ்பெற்ற திவ்யதேசத்தில் கி.பி.987 ஸர்வஜித் வருடம் வைகாசி ரோகிணியில் காச்யப கோத்ரத்தில் ஸ்ரீபுண்டரீகர் என்னும் நித்யஸூரியின் அம்சமாய் அவதரித்தவர் திருக்கோட்டியூர் நம்பிகளாவர். இவர் இயற்பெயர் திருக்குருகைப்பிரான்.

*மன்னியசீர் ஆளவந்தார் மலர்ப்பதத்தோன் வாழியே*
*வைகாசி ரோகிணிநாள் வந்துதித்தோன் வாழியே*
*இன்னிளவஞ்சிக்கு இனிதுரைத்தோன் வாழியே*
*எம்பெருமானாரெனும் பேர் இயம்புமவன் வாழியே*
*தென்னணியாம் காசிபகோத்திரத் துதித்தோன் வாழியே*
*திருக்குருகைப்பிரானெனும்பேர் திகழவந்தோன் வாழியே*
*முன்நல்அருளும் பெரும்புதூர் முனிக்கு உரைத்தோன் வாழியே*
*மொழிந்த திருக்கோட்டிநம்பி மூதுலகில் வாழியே*

## பதவுரை

மன்னிய சீர் – பொருந்திய குணங்களையுடைய, ஆளவந்தார்–ஆளவந்தார் என்னும் ஆசார்யரின், மலர்ப்பதத்தோன் – மலர்தலையுடைய திருவடியாக உடையோன், வாழியே – வாழ வேண்டும். வைகாசி – வைகாசி மாதத்தில், ரோகிணி நாள் – ரோகிணி நக்ஷத்ரத்தில், வந்து உதித்தோன் – வந்து தோன்றினவர். இன்னிள வஞ்சிக்கு –தன் பெண் ஆன தேவகிப் பிராட்டிக்கு, இனிதுரைத்தான் – இனிமையான வார்த்தைகளைச் சொன்னார். எம்பெருமானாரெனும் – இராமாநுசருக்கு எம்பெரு மானார் என்னும், பேர் – பெயரை, இயம்புமவன் – சொன்னவர்.

தென்னணியாம் – தெற்குத் திக்குக்கு அலங் காரமான, காசிபகோத்திரத்து – காசிப முனிவர் வழி வந்த கோத்ரத்தில், உதித்தவன் – தோன்றினவர். திருக்குருகைப் பிரான் எனும் பேர் – திருக்குருகைப் பிரான் என்னும் பெயரோடு, திகழ வந்தான் – திகழ்ந்தவர். முன் நல்அருளும் – முன்பு நன்மை தரும் அருமையான, பெரும்பூதூர் முனிக்கு – ஸ்ரீபெரும்பூதூரில் அவதரித்த ராமாநுச முனிக்கு, உரைத்தான் – திருமந்திரப் பொருளை உரைத்தவர். மொழிந்த திருக்கோட்டி நம்பி – மூதுலகில் – பழமையான உலகில் வாழ வேண்டும்.

## சிறப்புரை

(மன்னியசீர் ஆளவந்தார் மலர்ப்பதத்தோன்) ஆளவந்தார் – ஸ்ரீமந்நாதமுனிகளின் திருப்பேரர் ஆனவர். ஆளவந்தாருக்கு சீர்மையாவது ஞான பக்திகள் அளவற்றதாய் இல்லாமல் கரைபுரளாமல் அளவு பட்டு குறைபட்டு அவரைப் பற்றினார் அளவிலே தானே அடங்கி ஒன்றிரண்டு பிரபந்தங் களை இட்டருளுவதற்குக் காரணம் ஆகையாலே மிக தெளிவாய் இருக்கும் என்பர். அத்தகைய ஆளவந்தார் திருவடிகளைத் தியானிப்பதால் எல்லா தோஷங்களும் நீங்கும் என்பதற்குச்சேர "யத்பதாம்போருஹத்யாந வித்வஸ்தா சேஷகல்மஷ" என்று இராமாநுசர் உரைப்பது

## ஸப்தகிரி வினாடி வினா போட்டி எண்.6 ஜனவரி 2023 விடைகள்

1. பெரும்பாணாற்றுப்படை.
2. தேவப் பெருமாள்.
3. ஏழு நாட்கள்.
4. இரத சப்தமி.
5. சூரிய தேவன்.
6. அக்ஷய பாத்திரம்.
7. “தை” மாதம்.
8. இராமாநுஜர்.
9. பிரம்மா.
10. ஸ்ரீசூக்தம்.
11. புதன்.
12. தோரண மலை.
13. மால்பே கடற்கரை (உடுப்பி அருகில்).
14. கற்பக வல்லி தாயார்.
15. குறுங்கோழியூர் கிழார்.




**போட்டி எண்.6ற்கான சரியாக பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வி கே.ஆர். அருணிகா, நாகர்கோயில், கன்னியாகுமரி மாவட்டம்.
2. செல்வி மேக்ஷிதா, கிருஷ்ணகிரி, கிருஷ்ணகிரி மாவட்டம்.
3. செல்வி கீதா கவிதா, வடபழனி, சென்னை.

காணலாம். ஆளவந்தார் திருவடிகளில் சீடரானவர்களில் திருக்கோட்டியூர் நம்பியும் ப்ரதானமானவர். ஒரு சமயம் ஆளவந்தார் திருமேனி சற்று வாட்டமான போது அவர் திருவடியில் ஸேவித்து அடியோங்களுக்குத் தஞ்சமாக இருப்பதொரு அர்த்தம் அருள வேண்டினர். அப்போது, ஆளவந்தாரும் “கோயிலாழ்வாரே உங்களுக்குத்தஞ்சம்” என்று எண்ணி இருக்கச் சொன்னார். இதுபற்றியே திருக்கோட்டியூர் நம்பியை “ஆளவந்தார் மலர்ப் பதத்தோன்” என்றபடி.

(வைகாசி ரோகிணிநாள் வந்துதித்தோன்) தமிழ் மாத வரிசையில் வைகாசி இரண்டாவது மாதமாகும். “ஏரார் வைகாசி” என்று உபதேச ரத்னமாலையில் உரைப்பர் மாமுனிகள். வைகாசி ஏரார்ந்து இருக்கையாவது மாதவ மாதமாகையாலே மலர்கள் மலரும் போதான அழகை உடையதாயிருக்கும். ரோகிணி நாளானது கண்ணன் அவதரித்த திருநக்ஷத்ரமாகும். அந்த கண்ணன் அருளிய சரமச்லோகப்பொருளை வெளிப்படுத்தினவர் இந்த ஆசார்யரல்லவா. ஆழ்வார்களில் வெண்ணெய் உண்ட வாயனைப் பாடிய திருப்பாணாழ்வாரும் ரோகிணி நாள் அவதரித்தவர். இந்த நாளானது உறியில் வெண்ணெயோடு இயலுண்ட ஒருவனைப் போலே திருக்கோட்டியூர் நம்பியும் ரோகிணி நாள் அவதரித்தாராகையாலே முப்புரியூட்டியிருப்பது.

(இன்னிளவஞ்சிக்கு இனிதுரைத்தோன்) வஞ்சி – பெண். நம்பிகளின் பெண் தேவகிபிராட்டியார். தந்தையின் மூலமாகச் சிறந்த ஞானம் படைத்தவளாயிருந்தாள். இதுபற்றியே “இன்னிள வஞ்சி” எனப்பட்டாள். ஒருசமயம் இராமாநுசர் திருப்பாவையில் உள்ள **“உந்துமதகளிற்றன்”** பாசுரத்தை அனுஸந்தித்து நம்பிகள் திருவாசலிலே வந்தார். ***“சீரார் வளை ஒலிப்ப வந்து திறவாய்”*** என்ற அடியைச் சொன்னபோது தேவகி பிராட்டியார் கதவைத் திறந்தாள். இராமாநுசர் அவளை நப்பின்னையாக எண்ணி தெண்டனிட்டார். அவள் உள்ளே ஓடி நம்பியிடம் சொன்னாள். அவரும் இராமாநுசர் “உந்து மதகளிற்றன்” பாசுரம் அநுஸந்திக்கிறார் என்றார். அவளுக்கு நன்மையைச் சொன்னார் (இந்த வரலாறு சற்று மாறுபட்டு பெரிய நம்பி மகளைச் சொல்லுவது என்பர்).

(எம்பெருமானாரெனும் பேர் இயம்புமவன்) முமுக்ஷுப்படி சரமச்லோக ப்ரகரணத்தின் அவதாரிகையில், “அதிகாரிகள் கிடையாமையாலும் பொருள் அறிவதின் கௌரவத்தாலும் இந்த சரமச்லோக ரகசியத்தை வெளியிடாதே மறைத்துக் கொண்டு வந்தார்கள் இராமாநுசருக்கு முன்புள்ள ஆசார்யர்கள். ஸம்ஸாரிகள் துர்க்கதி கண்டு பொறுக்க மாட்டாதபடி கருணை கரைபுரண்டிருக்கையாலே பொருளின் பெருமையைப் பாராமலே

ஸம்ஸாரிகளின் துன்பத்தையே கண்டு வெளியிட்டார் இராமாநுசர்” என்பர் மாமுனிகள். இதனைப்பாராட்டி நம்பிகள் “எம்பெருமானார்” என்று இராமாநுசருக்குத் திருநாமம் சாத்தினார். அதுவே எம்பெருமானார் தர்சனமாயிற்று.

(தென்னணியாம் காசிபகோத்திரத்துதித் தோன்) பிராகதாரண்ய உபநிடதத்தில் (2–2–4) கூறிய படி காச்யபர், அத்ரி, வசிஷ்டர், விச்வாமித்ரர், கௌதமர், ஜமதக்னி, பரத்வாஜர் மற்றும் ஜம்பு மஹா ருஷிகள் எண்மரின் வம்சத்தவர்களை கோத்ரங்கள் என்று கூறுவர். அந்த வகையில் தெற்குத்திக்குக்கு அலங்காரமான காச்யப முனிவர் வழித் தோன்றிய வம்ச கோத்ரத்தில் தோன்றியவர் நம்பிகளாவர். இதுபற்றியே தெற்குத்திக்குக்கு அலங்காரமாக உள்ள காச்பகோத்திரத்து உதித்தான் என்றபடி.

(திருக்குருகைப்பிரானெனும்பேர் திகழ வந்தோன்) நம்மாழ்வார் அவதார தலமான குருகையை நினைவுபடுத்தும் வகையில் இவருக்கு திருக்குருகைப்பிரான் என்று இயற்பெயர். திருக் கோட்டியூர் நம்பி தம் திருமாளிகைத் திண்ணையிலே யாரும் அறியாதபடி எம்பெருமான் குணங்களைச் சிந்தித்து அனுபவித்து வருவாராம். எம்பெருமானார் சரமச்லோகார்த்தம் கேட்க திருக்கோட்டியூர் சென்று நம்பிகள் திருமாளிகை எங்கே உள்ளது என்று அங்குள்ளவர்களைக் கேட்டார். அவர்கள் நம்பி உள்ள திசையைக் காட்டினர், இதைக்கண்ட அங்கு இருந்தவர்கள் “எம்பெருமானார் நம் திருக்குருகைப் பிரான் திருமாளிகையை நோக்கி தண்டனிடுகிறாரே” என்று நம்பியின் பிரபாவம் அறிந்து ஆச்சரியப் பட்டனர். இந்த ஐதிகம் (நா.தி.12–2) பெரியவாச்சான் பிள்ளை அருளியது காண்க. இதனால் நம்பிகளுக்கு திருக்குருகைப்பிரான் என்ற பெயர் திகழ்ந்தது.

(முன் நல் அருளும் பெரும்பூதூர் முனிக் குரைத் தோன்) முனி–மனனம் செய்பவர். பெரும்பூதூர்முனி – இராமாநுசருக்குப் பெயர். நம்பி பக்கலிலே இராமாநுசர் சரமச்லோகார்த்தம் கேட்க 18 தடவை திருக்கோட்டியூர் சென்றார். பின்னர் கடைசியாக நம்பிகள் சரம ச்லோகார்த்தத்தை அருளின பிறகு இராமாநுசரைப்பார்த்து தேவரீரைப் பலகாலும் துவளப்பண்ணினத்தை மனத்தில் கொள்ளாதீர். அர்த்தத்தின் சீர்மையை வெளியிடவே இப்படிச் செய்தோம். தேவரீர் உலகைக்காக்க அவதரித்தீர். ஸ்ரீமந்நாதமுனிகளுக்குத் தஞ்சமான விஷயம் தேவரீர். தேவரீரே வைணவ தர்சனம் வளர்க்க வேணும் என்று ஆளவந்தார் பேரருளாளன் இடம் ப்ரபத்தி பண்ணினார். தேவரீர் திருநாமத்தாலே நாள்தோறும் இந்த தர்சனம் கொழுந்துவிட்டு விளங்கப்போகிறது என்று உரைத்தது காணலாம். இங்ஙனே பல சரமோபாய நிர்ணயத்தில் காண்க.

(மொழிந்த திருக்கோட்டிநம்பி மூதுலகில் வாழியே) – இவ்வாறு எம்பெருமானார்க்கு உபதேசித் தது, அவர் மூலமாக பழமையான உலகம் வாழவும் இந்த உதவியைச்செய்த நம்பிகளை வாழ்த்துவோ மாக.

வாழித்திருநாம உரை தொடரும்....








யாகத்தால் ஆராதிக்கப்படக் கூடியவன் மஹாவிஷ்ணு. யாகத்தினுடைய பயனை அருளி, அனுபவித்து அதன் பலத்தைக் கொடுக்கக் கூடியவன். ஸ்ரீராமர் இந்த யாகத்தை ஏற்று, அதிலே தவறு ஏதாவது நடந்திருந்தாலும், குறை இருந்தாலும் அதை போக்கி அனுக்ரஹம் பண்ணுகிறான். இயற்கையின் சீற்றத்தினாலும், நாம் செய்யும் பலவித அபசாரங்களினால் பூமா தேவி சீற்றம் கொள்கிறாள், வருந்துகிறாள். அவள் வருத்தத்தையும், சீற்றத்தையும் போக்க பிராயசித்தமாக பிரம்மோத் ஸவம் முடிந்து புஷ்ப யாகம் செய்யப்படுகிறுது. அதில் புஷ்பங் களாலேயே யாகம் நடைபெறும். கூடை கூடையாக எல்லா வித மலர்கள் ஸ்வாமிக்கு பாதாதி கேசம் சேர்ப்பார்கள். “தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது” இந்த புஷ்ப யாகத்தைச் செய்தால் போய பிழையும் தீயினில் தூசாகும்.











# "வாழை"



தெலுங்கு மூலம்:
டாக்டர். சி.மதுசூதன சர்மா,
90007 61390.
தமிழாக்கம் : திருமதி வி.உஷா, திருப்பதி.

தெய்வங்களுக்குப் படைக்கப்படும் பழங்களில் முதன்மையான இடத்தைப் பெற்றது. முக்கனிகளில் ஒன்றானது – அதுவே வாழை. இதனை சமஸ்கிருதத்தில் கதளி என்று அழைக்கின்றனர்.மியூசேஸி என்ற தாவரக் குடும்பத்தைச் சார்ந்த இந்த வாழையின் அறிவியல் பெயர் மியூசா ப்யாரடைசிகா.

பண்டிகைகள், நோன்புகள், விரதங்கள், திருமணங்கள் முதலிய சுப நிகழ்வுகளில் முன்னிற்பது இந்த வாழை. வாழையின் அனைத்து பகுதிகளும் விசேஷ நிகழ்வுகளில் பயன்படுத்துகின்றனர். எனவே இம்மரத்தை கற்பக விருக்ஷம் என்றனர்.

வாழையிலையில் சூடான உணவை பரிமாறிய போது, அந்த இலையில் உள்ள இரசாய ணங்களும் அவ்வுணவுடன் சேர்ந்து நல்ல சுவையை வழங்குவதுடன் மட்டுமல்லாமல் உண்ட உணவு நல்ல செரிமானமும் ஆகும்.

பழங்காலத்தில் முன்னோர்கள் நாள் தோறும் வாழையிலையிலே உணவை உட்கொள்வர். வாழையிலையில் உட்கொண்டால் சிறுவயதில் வரக்கூடிய "இள நரையைத்" தடுக்கலாம்.

வாழை ஓர் மங்களகரமான பழம் மட்டுமின்றி ஆரோக்கியத்தைத் தரும் "அம்ருதமும்" ஆகும். நம் வாழ்நாளில் பல விதமான நோய்களால் அவதிப்படுகின்றோம். அந்நோய்களைத் தீர்க்கும் அருமருந்தாக வாழை எவ்வாறு பயன்படுகிறது என்பதனை அறிந்து கொள்ளலாம்.

வாழைப் பழத்தில் உள்ள ட்ரீப்டோபான் என்ற புரதச் சத்து நம் உடலில் உள்ள செரடோனின் என்பதனை உற்பத்தி செய்வதால் மனநலம், ஆனந்தம் ஏற்படுகிறது.

**முகப்பரு, கருப்பு மச்சங்கள் குறைந்து முகம் பொலிவுடன் இருப்பதற்கு**

வாழை பழத்தை சாறாக ஒரு டீஸ்பூன் எடுத்துக் கொண்டு அதில் ரோஸ்வாட்டர் அல்லது பன்னீர் கலந்து முகத்திற்கு பூசி, ஒரு மணி நேரம் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவினால் நல்ல பலன் கிட்டும். முகம் பொலிவுடன் காணப் படும்.





## மங்கள சுலோகங்கள்

*ராதா(அ)தரமதுரஸிக ரஜனீகரகுலதிலக।
நாராயண நாராயண நாராயண நாராயண
ஜய கோபாலஹரே॥*

**ராதையின் அதர இனிப்பை ரசிப்பவனே! சந்திர வம்ச திலகமே! நாராயணனே! கோபால! ஹரி! (உனக்கு) வெற்றி!**

### மலச்சிக்கல் குறைய

நாள்தோறும் இரவு படுக்கும் முன் ஒரு சிறிய வாழைப்பழத்தை 5–10 மி.லி. விளக்கெண்ணை யில் சேர்த்து உட்கொண் டால் மலச்சிக்கல் குறை யும். மூல வியாதியும் குறையும். அதிகமான சூட் டால் ஏற்படும் வயிற்று வலியும் குறையும்.

நாள்தோறும் ஒரு முறை வாழைப்பழச்சாறு டன் தகுந்தளவு பன்னீர் சேர்த்து அரிப்பு, தோல் சம்பந்தப்பட்ட வியாதி கள் மற்றும் கை கால் எரிச் சல் உள்ள இடங்களில் பூசி வந்தால் குறையும்.

### கால் வெடிப்பு குறைய

வாழைச்சாற்றை வெடிப்பு உள்ள இடங் களில் பூசி 15 நிமிடம் கழித்து கழுவினால் கால் வெடிப்பு குறையும்.

### சிறுநீரகக் குழாயில் கற்கள் கரைய

நாள்தோறும் காலை வெறும் வயிற்றில், வாழைத்தண்டு இரசம் 50 மி.லி., முள்ளங்கி இரசம் 50 மி.லி., மோர் 50 மி.லி. ஆகிய மூன்றையும் சேர்த்து குடிக்க வேண் டும். இவ்வாறு குடிப்பதன் மூலம் சிறுநீரகக் குழாயில் உள்ள கற்கள் கரையும். அதுமட்டுமின்றி சிறு நீரகக் கோளாறுகள் நீங்கும்.

### வெள்ளைப்படுதல் குறைய

நாள்தோறும் 2 வேளை ஒரு வாழைப் பழச்சாற்றில் ஒரு கிராம் அளவு நெல்லிக்காய் பொடியைக் கலந்து உட்கொண்டால் நல்ல பலன் கிட்டும்.

### இருமல் குறைய

நாள்தோறும் காலை, மாலை ஒரு வாழைப்பழத்தின் சிறிய துண்டை எடுத்து, அதனை குழி செய்து உள்ளே 2,3 சிட்டிகை மிளகுப்பொடி போட்டு, அப்பழத்தை விழுங்கி வந்தால் இருமல் குறையும்.

### கருப்பை கோளாறு நீங்க

வாழைக் காயை சிறு துண்டுகளாக நறுக்கி நன்கு உலர வைத்து பொடி செய்து கொண்டு அதனுடன் கற்கண்டு பொடி கலந்து வைத்துக்கொண்டு நாள்தோறும் இரு வேளை அரை டீஸ்பூன் அளவு பொடியைக் காய்ச்சிய பாலுடன் சேர்த்து குடித்து வந்தால் கருப்பை கோளாறுகள் நீங்கும். இதே மருந்தை 500 மி.கி. முதல் ஒரு கிராம் வரை சிறு குழந்தைகளுக்கும் கொடுக்கலாம். சில குழந்தைகளுக்கு மலத்துவாரக்குடல் இறங்கியிருக்கும் அதனை சரி செய்ய இம்மருந்தை உபயோகிக்கலாம்.

### அதிகமாக சிறுநீர் கழிப்பவருக்கு

50 கிராம் வாழைக்காய் பொடியில் 10 கிராம் மிளகுப் பொடியைக் கலந்து தேனுடன் குழைத்து உட்கொண்டால் சிறுநீரகக் கோளாறுகள் நீங்கும். வாய், மூக்கு, மலம், மூத்திர துவாரங்களில் இருந்து வரும் இரத்தத்தைக் கட்டுப்படுத்த வாழை வேரை நன்கு காய வைத்து பொடி செய்து கொண்டு, சம அளவு கற்கண்டு பொடியைக் கலந்து, காலை, மாலை வேளைகளில் அரை டீஸ்பூன் உட்கொண்டால் இந்த உபாதைகள் நீங்கும்.

### குறிப்பு :

மருந்துகளை உபயோகிப்பதற்கு முன்பு ஆயுர் வேத மருத்துவரை அணுகி, ஆலோசனைப் பெறவும். இக்கட்டுரை வாசகர்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவேத் தவிர நோய்களுக்கு நிரந்தர தீர்விற்கு அல்ல.

## கண்ணன் கருத்துரை



*மனுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு கச்சித்யததி ஸித்தயே ।*
*யததாமபி ஸித்தானாம் கச்சின்மாம் வேத்தி தத்த்வத:॥*

(7-3)

**எத்தனையோ பிறவியின் தொடர்பால் ஆயிரத்தில் ஒருவன் யோக சித்தியாக முயல்கின்றான். அப்படி முயல் வோருள் எவனோ ஒருவன் இறைவனின் இயல்பைச் சரியாகப் புரிந்து கொள்ள வல்லவன் ஆகிறான்.**



தொகுப்பு:
பேராசிரியர் அமரர் பொன் சௌரிராஜன்,
திருப்பதி.





# ஐயங்கார்குளம் "மலையாள மஹாலக்ஷ்மி"

- திரு. பாபு, காஞ்சிபுரம், 94446 61434.

**வடகரை மகாலஷ்மியின் ஆலயம்:**

காஞ்சிபுரம் அருகில் ஐயங்கார் குளம், அனுமன் ஆலய குளத்தின் வட கரையில் மஹாலஷ்மி ஆலயமும் கரையின் உள் பகுதியில் மஹாலஷ்மி வடிவம் உள்ளது.

**ஆலய அமைப்பு :**

ஆலயம் வடகரையில் மேற் புறத்தில் கிழக்கு முகமாய் அமைந்துள்ளது. இதில் புதிதாக வடிக்கப்பட்ட தாயார் மஹாலஷ்மி பிரதானமாக நிறுவப் பட்டுள்ளது. ஆலய நுழைவு வாயிலில் வேம்படி கருப்பண்ண சாமி, விநாயகர், வலம் வரும் போது சப்த கன்னியர்கள், ராகு, கேது சிலை வடிவங்கள் அமைந்துள்ளன. படியிறங்கினால், பழைய ஆலயத்தில் தாயார் மஹாலஷ்மி ஏற்கனவே அமர்ந்துள்ள இடத்திலேயே அமர்ந்துள்ளார். தாயார் கஜலஷ்மியுடன் கூடிய கலை வடிவான பிரபையில் சங்கு, சக்கரம் தாங்கி, கிழக்கு முகமாய் காட்சியளிக்கின்றார்.

**தரிசன நேரம், நிர்வாகம் மற்றும் தொடர்புக்கு :**

அதிகாலை 4.00 மணி முதல் முற்பகல் 11.00 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரையிலும் ஆலய தரிசனம் செய்யலாம். ஸ்ரீதில்லை நாயகம் சுவாமிகள், அறங்காவலர், அருள்மிகு வடகரை ஸ்ரீமஹாலஷ்மி திருக்கோயில், ஐயங்கார் குளம், காஞ்சிபுரம் மாவட்டம் 631 502. தொலைபேசி : 94446 61434.

**அமைவிடம் :**

காஞ்சிபுரம் – கலவை வழித் தடத்தில், காஞ்சிபுரத்தில் இருந்து தென் மேற்கே 8 கி.மீ. தொலைவில், ஐயங்கார் குளம் என்ற ஊர் அமைந்துள்ளது. அங்குள்ள பழைமையான அனுமன் ஆலயத்தின் பின் புறம் மிகப் பெரிய திருக்குளம் அமைந்துள்ளது. அதன் வடக்கே, வட கரையில் மஹாலஷ்மி திருக்கோயில் அமைந்துள்ளது.

காஞ்சிபுரம் பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்து வசதி மற்றும் ஷேர் ஆட்டோ வசதியும் உள்ளன. நெல்லையும், காசுகளையும் மஞ்சள் நிறத்துணியில் மூட்டை கட்டியும், அத்துடன் குத்து விளக்கையும் காணிக்கையாகச் செலுத்துகின்றனர். அஷ்ட ஐச்வர்யங்கள் அள்ளித் தருபவளான இத்தாயாரை வடகரை மஹாலஷ்மி என கேரள பக்தர்கள் போற்றுகின்றனர். அண்மையில் இவ்வாலயத்திற்கு குடமுழுக்கு விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது. திரளான பக்தர்கள் கலந்துக்கொண்டு தாயாரின் இன்னருளுக்குப் பாத்திரமாயினர்.







# மார்ச் 2023
# ராசி பலன்கள்

- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.



### மேஷம்

வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. செலவினங்களுக்கு ஏற்ற வருமானம் உண்டு. சுபச் செலவுகள் நடக்கும். உயர் பதவி கிடைக்கும். எதிரிகளால் தனலாபம் உண்டு. முடிந்தவரை கோபத்தைத் தவிர்க்கவும். மனைவியின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். குழந்தைகளுக்கு நல்ல ஆரோக்யம் உண்டு.

### ரிஷபம்

பெண்களால் தனலாபம் உண்டு. தொழில் துறையில் பழைய பாக்கிகள் வசூலாகும். கணவன்-மனைவிக்குள் இருந்த பிரச்சனைகள் தீரும். தொழில் துறையில் அலைச்சல் இருந்தாலும் வளர்ச்சியும் கூடவே இருக்கும். தொழில் அலைச்சலால்தூக்கம் குறையும். யாத்திரை செய்வீர். மாணவர்கள் நன்கு படித்து நல்ல மதிப்பெண்கள் பெறுவர்.

### மிதுனம்

தொழில் துறையில் போட்டி இருந்தாலும் வெற்றி கிட்டும். தந்தை மீது அக்கறை செலுத்துவீர். தாய் ஆரோக்யம் நன்றாக இருக்கும். தந்தை வழி சொத்துக்கள் பெறுவதில் சிரமம் ஏற்படும். குழந்தைகள் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. வேலை செய்யுமிடத்தில் மாற்றம் ஏற்படும். மாணவர்கள் நல்ல கருத்துடன் படித்தால் மட்டுமே நல்ல மதிப்பெண்கள் பெற முடியும்.

### கடகம்

எக்காரியத்தைச் செய்வதாக இருந்தாலும் நிதானம் தேவை. பதறிய காரியம் சிதறும். நண்பர்களின் உறவினர்களின் ஆதரவு தக்க சமயத்தில் கிடைக்கும். தொழில் துறையில் அலைச்சல் அதிகரிக்கும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு கிடைக்கும். மாணவர்கள் நன்கு படித்தால் மட்டுமே ஓரளவு மதிப்பெண்கள் பெறலாம். நன்மையும் தீமையும் கலந்த மாதமிது.

### சிம்மம்

கணவன்-மனைவிக்குள் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டுப் பின் சரியாகும். தொழில் துறையில் புதிய முயற்சிகளுக்கு வெற்றி கிட்டும். சகோதர வழிகளில் பொருளாதார உதவிகள் கிடைக்கும். தந்தையின் ஆரோக்யத்தில் சிறு பிரச்சனைகள் ஏற்பட்டுப் பிறகு சரியாகும். தைரியமாகக் காரியங்களைச் செய்து அதில் வெற்றியைப் பெறுவீர். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர்.

### கன்னி

தொழில் போட்டியில் வெற்றியைப் பெறுவீர்கள். வேலை கிடைக்காதவர்களுக்கு இம்மாதம் கண்டிப்பாக வேலை வாய்ப்பு அமையும். குடும்ப உறவுகளுக்குள் பேசும் போது தர்க்கம் செய்வதைத் தவிர்க்கவும். தெய்வ பலம் உண்டு. மாணவர்கள் எதிர் பார்த்ததை விட நல்ல மதிப்பெண்களைப் பெறுவர். தந்தை ஆரோக்யத்தில் கவனம் தேவை. பணவரவு கிடைக்கும்.

### துலாம்

மார்ச் 13ம் தேதிக்குப் பிறகு கூட்டுத் தொழிலில் பிரச்சனைகள் தீரும். மனைவியின் ஆரோக்யம் மேம்படும். கருத்து வேற்றுமைகள் சரியாகும். குழந்தைகளின் ஆரோக்யம் நன்றாக இருக்கும். தொழில் துறை போட்டி அதிகமாகும். எதிர்பார்த்த கடனுதவிகள் கிடைக்கும். பூர்வீக சொத்துக்களைப் பற்றி பேச வேண்டாம். மாணவர்கள் எதிர்பார்த்த மதிப்பெண்களைப் பெறுவார்கள்.

### விருச்சிகம்

இம்மாதக் கடைசியில் தொழில் துறையில் அலைச்சல் அதிகரிக்கும். சிலருக்கு குடியிருக்கும் வீடு மாற வேண்டியிருக்கும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள். குடும்பத்தில் முழு ஆதரவு உண்டு. யாத்திரைகள் செய்து நல்ல தரிசனம் கிடைக்கப் பெறுவீர். பழைய பாக்கி வசூலாகும். தாராள பணப்புழக்கம் உண்டாகும். நல்ல யோகமான மாதமிது.

### தனுசு

வீட்டில் உறவினர்கள் வருகை அதிகரிக்கும். நண்பர்களால் தனவரவு உண்டு. கூட்டுத் தொழிலில் விருத்தி உண்டாகும். குழந்தைகளின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. பதறிய காரியம் சிதறும். பூர்வீக சொத்துக்களைப் பற்றி பேசாமல் இருப்பது நல்லது. வீட்டில் உள்ள மின்சாரம், மின்னணு பொருட்கள் பழுதாகும். சகோதரர்களுக்கு உடல் உபாதைகள் ஏற்படும்.

### மகரம்

தொழில் துறையில் அலைச்சல் மிகுதியாகும். அதற்குரிய வருமானம் அதிகரிக்கும். குழந்தைகளுக்கு நல்ல ஆரோக்யம் உண்டு. பெற்றோர், சகோதரர்களுக்கு நன்மை உண்டு. எக்காரியத்திலும் முதலில் தோல்வியும் பின் வெற்றியும் உண்டாகும். மாணவர்கள் நன்மதிப்பெண்கள் பெறுவர். ஆஞ்சநேயர் வழிபாடு சகல முன்னேற்றத்தையும் கொடுக்கும்.

### கும்பம்

வேலைப்பளு அதிகரித்தாலும் வருமானமும் கிடைக்கும். புத்திசாலித்தனத்துடன் செயல்பட்டுக் காரியத்தைச் சாதித்துக் கொள்வீர்கள். கடன் வாங்கி வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. ஆரோக்யத்தில் இருந்த குறைபாடுகளுக்குரிய மருத்துவம் கிட்டும். மாணவர்கள் கஷ்டப்பட்டுப் படித்தால் மட்டுமே நல்ல மதிப்பெண்கள் பெற முடியும். உழைத்தால் முன்னேறும் மாதமிது.

### மீனம்

குடும்பத்தில் மருத்துவ செலவுகள் அதிகரிக்கும். கணவன்-மனைவிக்குள் கருத்துவேற்றுமைகள் ஏற்பட்டு பின் சரியாகும். குழந்தைகளுக்கு நன்மை உண்டு. மாணவர்கள் கஷ்டப்பட்டு உழைத்தால் மட்டுமே நல்ல மதிப்பெண்கள் பெற முடியும். யாத்திரையால் தரிசனம் கிட்டும். தொழில் துறையில் புதிய முயற்சிகளுக்கு தெய்வ வழிபாட்டின் மூலம் வெற்றி கிட்டும்.

புராணங்களில் பெண்களை வணக்கத்திற்கு உரியவர்களாகவும், கற்புக்கரசிகளாகவும் பொறுமையின் பெருமையாகவும் குறிப்பிடுகிறார்கள். எல்லையில்லா பெண்மையின் சிறப்பை வார்த்தையில் வர்ணிப்பதென்பது கடினம். அப்பெண்மைக்கே பெருமையாக விளங்கிய பெண்மணிகளோ எண்ணிலடங்கா. அவர்களுள் ஒருவரே "மண்டோதரி தேவி". அவரைப் பற்றி சற்று அறிவோமா!


அசுர சிற்பியான மயன் மற்றும் ஹேமாவின் தவப் புதல்வியே மண்டோதரி தேவி. கற்புக்கரசி குணவதி. பத்னி தர்மத்தில் சிறந்து விளங்கியவர். தர்மாத்மா. இவருடைய கணவர் இராவணன். இவருக்கு மூன்று புதல்வர்கள்: மேகநாதன் (இந்திரஜித்), அதிகயா மற்றும் அக்ஷய குமாரன்.

ஒரு கதைப்படி, இரண்டு புதல்வர்களைப் பெற்ற பிறகு, மயன் மற்றும் ஹேமா தம்பதியினருக்கு ஒரு புதல்வி வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டதாம். எனவே அதற்காக தவமும், விரதமும் செய்திருக்கையில் ஒரு கிணற்றிலிருந்து ஒரு பெண் குழந்தையின் ஓசை கேட்டதாம். அப்பெண் குழந்தையை மயன் தம்பதியினர் தன் புதல்வியாக ஏற்று, மண்டோ தரி எனப் பெயர் சூட்டி வளர்த்து வந்தனர் என்று புராணம் கூறுகிறது.

அனைத்து தர்மங்களையும் நன்கு கற்று அதில் நிலைத்து நின்று, தந்தை சொல்படி அவர் பணியில் அவருக்கு உதவி செய்து வந்தாள். அவள் அனைத்து லட்சணங்களும் பொருந்திய மிகவும் அழகு வாய்ந்த தெய்வப் பொலிவு பெற்ற கன்னிகையாய் வளர்ந்து இருந்தாள். அங்ஙனே ஒருமுறை இராவணன் தேவலோகத்தை வென்றபோது மண்டோதரியைக் காண நேர்ந்தது. அக்கூஷணமே அவள் அழகில் மயங்கி அவள் தந்தை மயனிடம் கேட்க, அவரும் அசுர ராஜாவுக்கு மனைவியாக போகின்றாள் என்று சம்மதம் தெரிவித்தார். மண்டோதரி கல்யாணம் நடந்தேறியது.

மண்டோதரி மகாபதிவ்ரதை. கல்யாணத்திற்கு பிறகுதான் அவளுக்கு இராவணனுடைய தீக்குணங்களைப் பற்றி தெரிய வருகின்றது. அதிலும் அவன் அதீத பெண் ஆசை மிகுந்தவன் என்பதையும் நன்கு புரிந்து கொள்கிறாள். ஆனாலும் அவள் இராவணனை வெறுத்து ஒதுக்காமல் அவன் உறவை தியாகம் செய்யாமல் பதிவ்ரதையாக அவனுக்கு நல்ல துணைவியாக, தர்மபத்னியாக நடக்கிறாள்.

இராவணன் பெண்கள் மீது அத்யாசாரம் செய்த போதெல்லாம் அவனுக்கு நல்லுபதேசம் செய்து நல்வழி காட்டினாள். அவன் அதர்மத்தில் ஈடுபட்ட போதெல்லாம் தர்மத்தை எடுத்துரைத்தாள். அவன் நவ கிரகங்களை சிறை பிடித்த போது, அதனை தகாத



## பஞ்சகன்யர்களுள் ஒருவரான

# மண்டோதரி தேவி

**நீதிக் கதை**

**– முனைவர் பா. காயத்ரி, சென்னை.**

## திருப்பதி
## ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
## 2023 மார்ச் 20 முதல் 28 வரை

**20-03-2023,** திங்கள்
பகல் : துவஜாரோஹணம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

**21-03-2023,** செவ்வாய்
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்

**22-03-2023,** புதன்
பகல் : சிம்ம வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

**23-03-2023,** வியாழன்
பகல் : கல்ப விருக்ஷ வாகனம்
இரவு : சர்வ பூபால வாகனம்

**24-03-2023,** வெள்ளி
பகல் : மோஹினி அவதாரம்
இரவு : கருட சேவை

**25-03-2023,** சனி
பகல் : ஹனுமந்த வாகனம்
மாலை-வஸந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

**26-03-2023,** ஞாயிறு
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**27-03-2023,** திங்கள்
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**28-03-2023,** செவ்வாய்
பகல் : சக்கரதீர்த்தம்
அவப்ருதோத்ஸவம்,
இரவு : துவஜாவரோஹணம்



செயல் என்று சுட்டிக் காட்டினாள். இராவணனோ அதனை ஏற்கவில்லை. இராவணன் சீதா தேவியை கவர்ந்து இலங்கையில் உள்ள அசோக வனத்தில் சிறை வைத்த போது, "பதிவ்ரதையான ஒரு பெண்ணின் மீது ஆசை கொள்வது அதர்மம். அதிலும் அவளைக் கவர்ந்து வந்தது கொடிய பாவம். அவளை ஸ்ரீராமனிடம் ஒப்படைத்து அவரிடம் மன்னிப்புக் கோரினால், அவர் உங்களை நிச்சயமாக மன்னிப்பார்" என்ற தர்மத்தை எடுத்துரைத்தாள்.

யுத்தம் முடியும் வரை அவள் இராவணனிடம் இதனைக் கூறி மன்றாடினாள். ஒரு முறை, சீதை தன்னை கல்யாணம் செய்ய மறுத்ததால் வாளால் அவளை கொல்லச் சென்ற இராவணனை தடுத்து சீதா தேவியைக் காத்தாள்.

மண்டோதரி தேவி கற்புக்கரசி. தெய்வ பொலிவுடன், சர்வ லக்ஷணங்களும் பொருந்திய பேரழகி. ஹனுமன் கடல் கடந்து, சீதா தேவியைத் தேடி இராவணனின் மாளிகையைச் சோதித்த போது, அந்தபுரத்தில் உறங்கி கொண்டிருந்த மண்டோதரி தேவியின் தேஜஸை கண்டு, "ஒரு வேளை இவர் தான் சீதா தேவியோ!" என்று நினைத்தானாம்.

இவ்வுலகில் மனிதனின் ஆயுட்காலம் முடிந்தால் ஒரு நொடி கூட அவனால் இப்பூமியில் வாழவியலாது. ஆனால் ஒரு பதிவ்ரதை நினைத்தால் அது முடியும் என்று மண்டோதரி தேவி நிரூபித்தாள். அதாவது, போரின் கடைசி நாளுக்கு முன் மண்டோதரி தேவி ஸ்ரீராமனைச் சந்தித்து தன் கணவனுக்கு உயிர்பிச்சை கேட்டாள்.

மேலும், தன் கணவனை எப்படியாவது தர்ம வழியில் கொண்டு வந்து சீதா தேவியை ஸ்ரீராமரிடம் சேர்ப்பேன் என்றுரைத்தாள். எனவேதான் பதிவ்ரதையின் வாக்கிற்காக ஸ்ரீராமர் இராவணனைக் கொல்ல வாய்ப்பு கிடைத்தும், "இன்று போய் நாளை வா!" என்று இராவணனுக்கு உயிர்பிச்சை அருளினார். ஆனால் மண்டோதரியின் வாக்கை கேட்காமல், இராவணன் அதர்மத்தை தேர்ந்தெடுத்து, ஸ்ரீராமரின் கரங்களால் மாண்டான்.

இங்ஙனே கற்புக்கரசியாக, பதிவ்ரதையாக விளங்கினார் மண்டோதரி தேவி. இவையனைத்தையும் விட தர்மாத்மாவாகத் திகழ்ந்தவர். இராவணனுக்கு நல்ல மனைவியாக விளங்கினாலும் அவனுக்கு தர்மத்தை எடுத்துக்கூறி, "தர்ம பரிபாலன"மே ஒரு மனிதனின் தலையாய கடமை என்பதை தான் கூறியும், தன் வாழ்க்கை நடைமுறையில் கடைபிடித்தும் காட்டிய அந்த தேவி, பஞ்ச கன்யைகளுள் ஒருவராய் விளங்குவதில் ஐயமேதுமில்லை. அவர்களை ஸ்மரிப்போம்! பாவங்களை ஒழிப்போம்.

पाठः द्वाविंशः

# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

பாடம்-22

एतेषाम् = இவருடைய, இவரது, இவருக்கு
आरात् = தொலைவு
केषाम् = எவருடைய, எவருக்கு
सकृत् = ஒரு முறை
अञ्जनम् = கண்மை, மை
कृत्वा = செய்து

भविष्यत् = எதிர் காலம்

प्र. खादिष्यति = खादिष्यन्ति சாப்பிடுவான், சாப்பிடுவார்கள் (படர்க்கை)
म. खादिष्यसि = खादिष्यथ சாப்பிடுவாய், சாப்பிடுவீர் (முன்னிலை)
उ. खादिष्यामि = खादिष्यामः சாப்பிடுவேன், சாப்பிடுவோம் (தன்மை)

## வினாக்கள்

1. वयं भोजनं कृत्वा फलं खादिष्यामः।
2. त्वम् आलस्यं मा कुरु।
3. झटिति स्नानं कृत्वा भोजनं कुरु।
4. अस्मद्गृहे फलानि न सन्ति।
5. युष्मद्गृहे अन्नम् अस्ति चेत् भोजनं कुरुत।
6. नोचेत् तूष्णीं स्त।
7. हे ब्राह्मणाः! किमर्थं भिक्षाटनं करिष्यथ?
8. अरे बालक! अस्मद्गृहे फलानि सन्ति खादिष्यसि किम्?
9. किं फलमस्ति?
10. तव किमर्थम्, अहं खादिष्यामि।
11. अञ्जनं कुत्रास्ति?

1. ஆனால் எங்கள் தந்தை (அப்பா) எந்த பழத்தைத் திண்ண முடியும்?
2. நீங்கள் இந்தப் பழத்தைத் திண்ண மாட்டீர்களா?
3. நாங்கள் இந்தப் பழத்தைத் திண்ண மாட்டோம்.
4. உங்கள் வீட்டில் பழங்கள் இருக்கின்றனவா?
5. இவருடைய வீட்டில் பழங்கள் இல்லை.
6. யாருக்கு சாதம் இல்லை? எனக்கு இல்லை.
7. எதற்கு (ஏன்) இல்லை?
8. இந்த வேளை எங்கள் தம்பி சமையல் செய்ய வில்லை.
9. ஐயா! எங்கள் வீட்டில் இருக்கின்றது. அதனால் விரைவாகக் குளித்து விட்டு திண்பாயா?
10. அப்படியே திண்பேன் ஆனால் எங்குள்ளது?
11. எங்கள் வீட்டில் மை இல்லை.

## விடைகள்

1. நாங்கள் சாப்பாடு சாப்பிட்டு பழத்தைத் திண்போம்.
2. நீ தாமதம் செய்ய வேண்டாம்.
3. உடனே குளித்து விட்டு சாப்பாடு செய்.
4. எங்கள் வீட்டில் பழங்கள் இல்லை.
5. உங்கள் வீட்டில் சாதம் இருந்தால் சாப்பிடுங்கள்.
6. இல்லையானால் மௌனமாக இருங்கள்.
7. ஓ பிராம்மணர்களே! எதற்குப் பிச்சை எடுக்கிறீர்கள்?
8. ஓ சிறுவனே! எங்கள் வீட்டில் பழங்கள் இருக்கின்றன சாப்பிட முடியுமா என்ன?
9. என்ன பழம் உள்ளது?
10. உனக்கு எதற்கு, நான் சாப்பிடுகிறேன்.
11. மை எங்கு உள்ளது (இருக்கிறது)?

1. परं मम पिता किं फलं खादिष्यति?
2. यूयम् एतद् फलं न खादिष्यथ किम्?
3. वयम् एतद् फलं न खादिष्यामः।
4. युष्मद् गृहे फलानि सन्ति वा?
5. एतेषां गृहे फलानि न सन्ति।
6. केषाम् अन्नं नास्ति? मम नास्ति।
7. किमर्थं नास्ति?
8. अस्मिन् दिने अस्मद् अनुजः पाकं नाकरोत्।
9. अहो! अस्मद् गृहे अस्ति खलु वेगेन स्नानं कृत्वा खादिष्यसि वा?
10. अस्तु खादिष्यमि परं कुत्र अस्ति?
11. अस्मद् गृहे अञ्जनं नास्ति।

தெலுங்கு மூலம் : மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி, தொகுப்பு : மகாமகோபாத்யாய சமுத்ரால லக்ஷ்மணய்யா
தமிழாக்கம் : டாக்டர் கே.கே.ஏ.ரங்கராஜன்


பல்சுவை பகுதி

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...

..... சிறார் பகுதி

# சித்திரம் வரைதல்

பக்கத்தில் உள்ள படத்தை இந்த கட்டத்தில் வரையுங்கள்...



### ஸ்ரீராமர் உறவுமுறை கொண்டு பொருத்துக...

1. ஜனகர் - அ.துணைவி
2. தசரதன் - ஆ.தாய்
3. சத்ருகணன் - இ.தந்தை
4. கௌசல்யா - ஈ.சகோதரன்
5. சீதை - உ.மாமனார்

1.உ, 2.இ, 3.ஈ, 4.ஆ, 5.அ.



### சுலோகம் அறிவோம்!


*அஹல்யா திரௌபதி சீதா தாரா*
*மண்டோதரீ ததா*
*பஞ்கன்யா: ஸ்மரேந்நித்யம்*
*மஹாபாதக நாஷணம்*

பஞ்சகன்யைகளான அகலிகை, திரௌபதி, சீதா தேவி, தாரை மற்றும் மண்டோதரி இவர்களை நித்யமும் நினைத்தால் செய்த அனைத்து மகாபாதகங்களும் அழியும் என்று கூறப்பட்டுள்ளது.

### வார்த்தைகளை சரியாக அணிவகுத்து வாக்கியம் அமைக்கவும்...

சதாகாலமும் அனுமனை நலன் பயக்கும் ஸ்ரீராம போன்று ஸ்மரனை நாம செய்தால்

அனுமனை போன்று சதாகாலமும் ஸ்ரீராம நாம ஸ்மரனை செய்தால் நலன் பயக்கும்.



### பாதையைக் கண்டுபிடி

இராமாயண காவியத்தில் இடம் பெற்ற இம்மூன்று உயிரினங்களில் ஸ்ரீராமரை தரிசித்து முக்தியடைந்த உயிரினத்திற்கு வழிகாட்டிடுங்கள்

### விடுகதை பகுதி...

1. அச்சு இல்லாத சக்கரம், அழகு கூட்டும் சக்கரம்; அது என்ன?
2. காலடியில் சுருண்டிருப்பாள். கணீர் என்று குரலிசைப்பாள். அவள் யார்?
3. ஒட்டுத் திண்ணையில் பட்டுப் பாவாடை அது என்ன?

1) வளையல், 2)மெட்டி, 3)தோடு

# வினாடி வினா

..... சிறார் பகுதி

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## ஸப்தகிரி

## போட்டி எண்–8



**ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!**

1. திருப்பதியில் ஸ்ரீகோதண்ட ராமர் சிலையை நிறுவியவர் ..........
2. இராமாநுஜருக்கு இராமாயண காலக்ஷேபம் செய்தவர் ..........
3. கனகதாரா ஸ்தோத்திரம் கேட்டு மஹாலக்ஷ்மி தாயார் பொழிந்தது ..........
4. மன்னுபுகழ்க் கௌசலை தன் மணிவயிறு வாய்த்தவனே என்று பாடியவர்..........
5. ஆண்டாள் கைகளில் கிளியாகத் திகழ்ந்தவர் ..........
6. மேரு மலையைத் தாங்கிய அவதாரம் ..........
7. தேவர்களைக் காத்து, அமுது வழங்கிட திருமால் எடுத்த வடிவம் ..........
8. கொல்லிக் காவலன், கூடல் நாயகன் என அழைக்கப்பட்டவர் ..........
9. பசுவைச் சுற்றி வந்து அகலிகையை மணந்தவர் ..........
10. மணாளனுக்கு இறைவனிடம் மாங்கனியைப் பெற்றவர் ..........
11. "நலமிக்க நல்லோர் சொல் கேட்பதுவும் நன்று" என்று கூறியவர் ..........
12. திருக்கடல்மல்லை திவ்யதேச விமானத்தின் பெயர் ..........
13. இராமாநுஜருக்கு சரமச்லோகார்த்தம் அருளியவர் ..........
14. மண்டோதரியின் பெற்றோர் ..........
15. திருவேங்கடவனை நீண்ட மலையின் உச்சியில் ஜோதியாய் விளங்குபவன் என்று கூறியவர் ..........





### போட்டிக்கான நிபந்தனைகள்

- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்குட் பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்த பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, T.T.D. Press Compound, K.T. Road, Tirupati-517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியை குறித்து எவ்வித தகவல்களும் தொலைபேசி வாயிலாக தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.03.2023.

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |



**விடையை எழுதுங்கள். திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்**

## இதில் பொருந்தாதது எது?



.................................



.................................



.................................



.................................

குறிப்பு : இராமாயணத்தில் இடம்பெற்ற உயிரினங்கள், பாற்கடலில் உதித்தவை, ஹோலி, யுகாதிக்கு தொடர்பு இல்லாதவற்றை கட்டத்தில் எழுதவும்.



இரண்டு சித்திரங்களுக்கு இடையே உள்ள ஏழு வித்தியாசங்களை கண்டு பிடியுங்கள்





1) தோரணத்தில் பூக்கள்
2) பட்டாம்பூச்சி
3) பெண்ணின் கை வளையல்
4) பூச்செடி
5) மூக்குத்தி
6) சடையில் குப்பி தொங்கல்
7) கம்மல் ஜிமிக்கி

# மத்ஸ்ய அவதாரம்

சித்திரக் கதை

கதை மூலம் :திரு. ஸ்ரீநிவாச தீக்ஷிதலு
சித்திரம் :திரு. நாத்





உலக நன்மைக்காக தோன்றிய வேதங்களை கவர்ந்து சென்றது அதர்மம். தர்மத்தைக் காக்க மஹாவிஷ்ணு மத்ஸ்ய அவதாரம் எடுத்தார்.
வேதங்களை மீட்டு வருகிறேன். கவலைப்படாதீர். இதோ செல்கின்றேன்.
ஜயம்... ஜயம்... ஸ்ரீஹரி.
சோமகா! வேதங்களை கொடுத்து விடு. இல்லையேல் போர் உறுதி.
மீனான நீ என்னுடன் போர் புரிவாயா? நான் போருக்குத் தயார். தலை உன்னுடையது. உடல் மீனுடையது. உன் வடிவமே வித்தியாசமாக உள்ளதே!
இருவருக்குமிடையே கடினமாக போர் நடந்தது. இறுதியில் மஹாவிஷ்ணு சக்ராயுதத்தால் சோமகாசுரனை அழித்தார்.
பரந்தாமா காத்திடுங்கள்! என்னைக் காத்திடுங்கள்!
பிரம்மா இதோ வேதங்களை பெற்றுக்கொள். படைப்பினைத் துவங்கு.
அப்படியே ஸ்ரீஹரி!
பிரம்ம தேவன் வேதங்களைப் பெற்றுக்கொண்டு மஹாவிஷ்ணுவை பக்தியுடன் துதித்தார்.
ஓம் நமோ மத்ஸ்ய நாராயணாய நம:
முற்றும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

*(சமய மாத இதழ்)*

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

I. பெயர் மற்றும் முகவரி : ________________

(பெரிய எழுத்துக்களில்) ________________

________________

________________

அலைபேசி எண் [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

2.தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம்

☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3.வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/-(12 வருடங்கள்)

4.சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5.செலுத்திய தொகை :

6.செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ)

ரசீது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

---

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

### தகவல் மையம்

### தி.தி.தே. கால்சென்டர்

**உங்களுக்காக**

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

***இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.***

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :

**0877-**
**2233333**
**2277777**

---

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்), அயல்நாட்டு வருடச்சந்தா ரூ.1,030/- காசோலை, இ.எம்.ஒ.,ஐ.பி.ஓ., டி.டி. -யை பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.


திருமலையப்ப ஸ்வாமி
தெப்போத்ஸவம்
03-03-2023 முதல் 07-03-2023 வரை
03-03-2023
ஸ்ரீகோதண்டராம ஸ்வாமிக்கு
04-03-2023
ஸ்ரீகிருஷ்ண ஸ்வாமிக்கு
05-03-2023 முதல்
07-03-2023 வரை
திருமலையப்ப ஸ்வாமிக்கு

SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-02-2023 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No. APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2021-2023 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No. PMGK/RNP/WPP-04(5)/2021-2023" Posting on 20th of Every month.

